

சாடுகிறார் ஜயேந்திரர்!

கல்கி

KALKI 10.11.2002
ரூ. 6.00



கொசுறாக ஒரு பட்டிமன்றம்!



உங்கள் சுற்றுப்புறத்தில் நாங்கள் உருவாக்கித் தருகிறோம்.

காயத்ரி நர்சரி & லேண்ட்ஸ்கேப்

உதவும் கரங்கள் நிறுவனத்தின் ஒரு அங்கம்.

தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்கள், தனிவீடுகள், அடுக்குமாடி வீடுகள், ஹோட்டல்கள், மருத்துவமனைகள், வணிக வளாகங்கள் போன்றவற்றிற்கு குறைந்த செலவில் தோட்ட வடிவமைப்பு (Landscaping), செய்து தரப்படுகின்றது. இங்கு கை தேர்ந்த தோட்ட வடிவமைப்பு வல்லுனர்களைக் கொண்டு புல்வெளிகள் (Lawn), பூச்செடிகள், பழம், நிழல் மரங்கள், மற்றும் நீரூற்றுகள் (Fountains) அமைக்கப்பட்டு வருகின்றது.

உங்கள் பசுமையான எண்ணங்களுக்கு நாங்கள் இயற்கை வண்ணம் பூசுகிறோம். தோட்டம் அமைத்துப் பாருங்கள்.
உங்கள் இடத்தின் தோற்றத்தில் மாற்றம் காண்பீர்கள்.

தோட்டம் அமைக்க நிறைய பணம் செலவாகுமா?
மனதிற்கு அமைதியும் சந்தோஷமும் கொடுக்கும் விஷயத்திற்கு விலை – குறைவுதான்!

வெளியூரில் இருப்பவர்களுக்கு – பெரிய நிறுவனங்களுக்கு மட்டும் லேண்ட்ஸ்கேப்பிங் செய்து தரப்படும்.

பொது இடங்களில் இலவசமாக* மரம் நட்டுத் தருகிறோம்.

*சென்னையில் மட்டும் நிபந்தனைகளுக்குட்பட்டது.

- 1 லட்சம் சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள எங்கள் நர்சரியில் அனைத்து வகையான செடி வகைகளும் விற்பனைக்கு கிடைக்கின்றது.
- அழகான செடிகள் வாடகைக்கு விடப்படுகிறது.
- ஏற்கனவே தோட்டம் அமைத்து இருக்கிறீர்களா? பராமரிக்க வேண்டுமென்றால் அதற்கும் எங்கள் சேவை உண்டு.



ஆலோசனைகள் பெற (Help Line : 680 0005)

உங்கள் கனவு பிரதேசங்களை நனவாக்குகிறது

காயத்ரி நர்சரி & லேண்ட்ஸ்கேப்

93, தோடி தெரு, திருவேற்காடு, சென்னை-77. தொலைபேசி : 680 0005, 680 0952, 680 0660
ஃபேக்ஸ் : 6801110. இ-மெயில் : udavumkarangal@vsnl.net

ராணுவம் வாபஸ் சரிதானா?



செலவு எவ்வளவு தெரியுமா?... மூவாயிரம் கோடி ரூபாய்! இவ்வளவு செலவு செய்து நமது எல்லைப்புற ராணுவத்தினரை முகாம்களுக்குத் திரும்பி அழைக்கும் முடிவை ஏன் எடுத்தது மத்திய அரசு? எல்லையில் ஊடுருவல் இன்னமும் நின்றபாடில்லை. எல்லை தாண்டிய பயங்கரவாதம் தனது கொடிய விளையாட்டுகளை அவ்வப்போது நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. இது தவிர தீவிரவாதிகளை உருவாக்கும் அடிப்படை கட்டுமான வசதிகளை பாகிஸ்தான் இன்னமும் அதிகப்படுத்திக் கொண்டே இருக்கிறது.


படைகளின் வாபஸ் மூலம் அமெரிக்காவின் அழுத்தத்துக்கு இந்திய அரசு பணிந்து விட்டது என்ற ஒரு கருத்து இருக்கிறது. இருநாடுகளுக்கிடையே பதற்றம் இருக்கக் கூடாது என்றால், தாக்குதல் படைகளை முகாம்களுக்குத் திருப்ப வேண்டும் என்பது அமெரிக்காவின் விருப்பம். "இல்லையில்லை உள்நாட்டில் அரசியல் ரீதியாக தங்களுக்கு ஏதாவது பிரச்னை ஏற்படும் போது, படைகளை முன்னணிக்குக் கொண்டு செல்வதும், பின்னர் மக்கள் கவனம் திரும்பி, பிரச்னை சூடு ஆறிய பின் அமைதியாகிப் போவதும் மத்திய அரசின் அதுவும் பா.ஜ.கவின் யுக்தியாக இருக்கிறது என்றும் சொல்கிறார்கள். இது ஒரு விபரீத விளையாட்டு என்கிறார்கள். இந்த ஆண்டில் இதுவரை இரண்டு முறை பாகிஸ்தானோடு மோதும் நிலைக்கு – கிட்டத்தட்ட போர் வந்து விடுமோ என்ற அளவுக்கு – தயாராகிவிட்டது நமது ராணுவம். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. ஆனால் இது போன்ற முஸ்தீபுகளால் பாகிஸ்தானும் பயப்படுவது போல் தெரியவில்லை.

"தியாக உணர்வோடு பணியில் இருக்கும் லட்சக்கணக்கான நமது ராணுவத்தினரை வருடம் முழுவதும் மிகப் பெரிய டென்ஷனில் வைத்திருப்பது அவர்களது செயல் முறைகளையும் உடல் நலத்தையும் பாதிக்கக் கூடும். மேலும் இனியும் நமக்கும் பாகிஸ்தானுக்கும் மிகப் பெரிய போர் நடக்கும் பட்சத்தில் அணு ஆயுதங்கள், ஏவுகணைகள் போன்றவைகள் பயன்படுத்தப்படும் வாய்ப்புதான் அதிகம். அந்த நிலையில் நமது படைகள் யதார்த்தமாகப் போரிடுவதைவிட, பிடிபட்ட இடத்தைப் பாதுகாப்பதற்குத்தான் பயன்படும். மேலும் எல்லைப் புறத்தில் ஊடுருவலைத் தடுக்கும் பொறுப்பைத் துணை ராணுவப் படைகள் மேற்கொள்ள வேண்டும். அமைதிப் பகுதியில் சில காலம் பணிபுரிவதன் மூலம் நமது தாக்குதல் படைப்பிரிவு அவசியம் ஏற்படும் போது ஒரு புத்துணர்வோடு செயல்படும்" என்கிறார் விடுமுறையில் சென்னை வந்திருக்கும் உயர் ராணுவ அதிகாரி ஒருவர்.


– கௌசி


கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com
புதிய ஈ மெயில் முகவரிகள் : எடிட்டோரியல் : kalki@kalkiweekly.com
சந்தா : subscription@kalkiweekly.com பிற தகவல்கள் : info@kalkiweekly.com


காணாமல் போன சுந்தர் ராமன்கள்!



● வி.ராம்நாராயணன்







"ஐ.ஓ.பி. 74 ஃபார் 3, ஜாலி ரோவர்ஸ் அறுபத்தஞ்சு ஃபார் நோ லாஸ்... யூனியன் கிரவுண்ட்ல ஸ்டேட் பாங்க் ஒன் நாட் டு ஃபார் டூ..." - மைதானத்துக்கு வந்து சேர்ந்ததுமே பல்வேறு லீக் பந்தயங்களின் ஸ்கோர் நிலவரத்தை ஒப்பிப்பார் சுந்தர்ராமன். ஸ்கூட்டரை ஸ்டாண்ட் போட்டு நிறுத்திவிட்டு நேரே ஸ்கோரரிடம் போவார். நடந்து கொண்டிருக்கும் மேட்சின் ஸ்கோர் நிலவரத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்வார். பத்து நிமிடங்களில் புறப்பட்டு மெரீனா மைதானத்துக்குப் போய்விடுவார் - அங்கே இந்தியா பிஸ்டன்ஸ் - கிராண்ட் ப்ரீ அணிகளுக்கிடையேயான மாட்சில் லேட்டஸ்ட் ஸ்கோர் என்ன என்று தெரிந்து கொள்ள!

சுந்தர்ராமனுக்கு ஒவ்வொரு சனி - ஞாயிறும் இதே பொழுதுபோக்குதான். மைதானத்துக்கு மைதானம் தாவி ஓட வேண்டியது; ஸ்கோர் என்ன என்று விசாரிக்க வேண்டியது; அடுத்து செல்லும் மைதானத்திலுள்ள ஆட்டக்காரர்களுக்கும் அதைத் தெரிவிக்க வேண்டியது. ஒரு ஆட்டத்தையாவது சுந்தர்ராமன் முழுமையாகப் பார்த்திருப்பாரா என்பது ரொம்பு சந்தேகம்தான்.

மூக்குக்கண்ணாடி அணிந்த, எளிமையான வழுக்கைத் தலை மனிதர் இந்த சுந்தரராமன். ஆரம்ப காலத்தில் சைக்கிளில்தான் மைதானம் மைதானமாகச் சுற்றி வந்தார்; பிற்காலத்தில் தான் ஸ்கூட்டர்.


சுந்தர்ராமன் போன்ற ஆர்வலர்களைத் தூண்டியது எது என்று ஆட்டக்காரர்களான நாங்கள் ஆழ்ந்து யோசிப்பதுண்டு. இந்த அரிய பொழுதுபோக்கில் ஈடுபடுவதற்கான நேரமும் பண வசதியும் ஆசையும் எப்படி அவருக்கு அமைந்தன?

இன்றைய லீக் பந்தயங்களில் சுந்தரராமன்களுக்கே அவசியமில்லாது போய் விட்டது. முதல் டிவிஷன் லீக் அணிகளின் நிர்வாகிகள் அத்தனை பேரும் செல்போன்கள் வைத்திருக்கிறார்கள். அவ்வணிகளை ஆதரிக்கும் நிறுவனங்களின் முதலாளிகளிடமும் செல்போன்கள் இருக்கின்றன. உட்கார்ந்த இடத்திலிருந்து அவ்வப்போது ஸ்கோர் தெரிந்து கொள்ள முடிகிறது. இனி சுந்தர்ராமன்களுக்கு ஏது வேலை?

சுந்தர்ராமனின் தீவிரம் இல்லாது போனாலும் ஆர்வத்துடன் இலவச சேவை வழங்கிய வேறு பலர் உண்டு. குறைந்த பட்சம் - மூன்று மைதானங்களுக்காவது தமது வண்டியைத் தள்ளிச் சென்ற ரீட்டா ஐஸ்கிரீம் வியாபாரி, ஆட்டம் குறித்து விஷயமறிந்த நிலக்கடலை வியாபாரி போன்றோர் இன்னமும் சிறிய அளவில் சேவையைத் தொடர்கிறார்கள்.

லீக் பந்தயங்களை நான் முழுதும் உட்கார்ந்து பார்த்து மகிழ்ந்த ஆதரவாளர்களும்

வி.ராம்நாராயணன்



உண்டு. வேட்டி அணிந்த தாடிக்காரர் ஒருவர் ஆழ்வார்பேட்டை கிரிக்கெட் கிளப் ஆதரவாளராயிருந்தார். பத்து வருட காலம் அத்தனை பந்தயங்களுக்கும் வந்து வெற்றி தோல்வி பாராட்டாமல் அவ்வணியை ஆதரித்து மகிழ்ந்தார். பெவிலியன் பக்கமே வராமல் தாம் பாட்டுக்கு ஒரு மூலையில் அமர்ந்து கொள்வார். ஆட்டக்காரர்களை சிநேகிதம் செய்து கொள்ள முயற்சியொன்றும் செய்ய மாட்டார்.

வேறு சில ஆர்வலர்கள் ஆட்டக்காரர்களோடு அரட்டை அடித்து மகிழ்ந்தனர். இன்னும் சிலர் அரட்டையைக் கவனமாக ஒட்டுக் கேட்டுவிட்டு, சின்ன சின்ன சம்பவங்களை ஞாபகமாக நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டனர். "அவன் நேத்து மூணு மணி வரைக்கும் காட்ஸ்பியிலே (டிஸ்கோ) ஆட்டம் போட்டுக்கிட்டிருந்தானாம். அப்புறம் எப்படி ரன் எடுக்கறது..!" என்று நண்பர்களிடம் போய் வம்பு பேசி பூரித்தனர். வேறு சிலர், ஆட்டக்காரர்களுக்குத் தயங்காமல் அறிவுரைகூட வழங்கினர்.

ஆட்டக்காரர்களின் பெற்றோர், உறவினர் நண்பர்கள் மேட்ச் பார்க்க வருவார்கள. எண்பதுகளில் ஸ்ரீகாந்த் ஆடிய மாட்சுகளுக்கு, இந்தியா பிஸ்டன்ஸ் கோபியும் குணச்சித்திர நடிகர் கிருஷ்ணனும் தவறாது வருவார்கள். என் சகோதரன் சிவராம கிருஷ்ணனின் ஆட்டத்தை ஒரு ஓரமாக உட்கார்ந்தபடி பதற்றத்தோடு பார்த்துக் கொண்டிருப்பார் எங்கள் தந்தை. அவரும் எஸ்வாசுதேவனின் அப்பாவும் சேர்ந்து அன்றைய ஆட்டத்தை கூறு போட்டு விமர்சித்துவிடுவார்கள்! அவர்களுடைய எதிர்பார்ப்புக்கு ஏற்ப ஆடுவது ரொம்ப கஷ்டம் இந்த கிரிக்கெட் ஆர்வல நிபுணர்கள் தங்கள் பொழுது போக்கில் மிகப் பெரும் இன்பம் கண்டனர். ரிடயர் ஆன பிறகு அற்புதமாகக் காலம் கழிந்தது அவர்களுக்கு. பழக்கமாகிப் போன பார்வை யாளர்கள் சிலர் இன்னமும் அவர்களை நினைவு கூர்கிறார்கள்.

இன்றைக்கு லீக் பந்தயங்களில் இத்தகைய பார்வையாளர்கள் கிடையாது. ஆட்டம் முன் போல் சுவாரஸ்யமாய் இல்லை என்று பலர் என்னிடம் சொல்கிறார்கள். முதல் டிவிஷன் பந்தயங்கள் புல்தரை மைதானத்தில் ஆடப் படுவதால் அவை அணியின் சௌகரியத்துக்கு ஏற்ப தயார்ப்படுத்தப்பட்டுவிடுகின்றன. பாட்டிங், ஃபீல்டிங் அளவுக்கு பந்து வீசுவதில் முன்னேற்றம் இல்லையென்பதால் ஆட்டத்தில் சுவையில்லை. தொலைக்காட்சியில் வேறு தினம் தினம் சர்வதேச கிரிக்கெட் காண முடிகிறது. இதனாலும் உள்ளூர் கிரிக்கெட் மீதான ஆர்வம் குறைந்து போயிருக்கலாம்.

சென்னை முதல் டிவிஷன் பந்தயங்களில் முன்னைக் காட்டிலும் அதிகம் ரன்கள் எடுக்கப்படுகின்றன. ஆனால் ஆட்டத்தின் சுவாரஸ்யம் குறைந்து போய்விட்டது. சுந்தர ராமன்கள் சுத்தமாய்க் காணாமல் போய் விட்டார்கள்.

சென்னை கிரிக்கெட் பற்றிய 'மஸ்கிடோஸ் அண்ட் அதர் ஜாலி ரோவர்ஸ்' புத்தகத்திலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது.

*வெளியீடு : **கெம்பிளாஸ்ட் சன்மார் லிமிடெட்***

*விற்பனை : **ஈஸ்ட் வெஸ்ட் புக்ஸ், 571, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை - 29***

*விலை : **ரூ.295***

மனம் மாறுவோர் மதம் மாறட்டும்!



அயோத்திப் பிரச்னைக்குத் தீர்வு காணும் நோக்கில் பேச்சு வார்த்தை, தமிழில் குடமுழுக்குச் செய்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட சர்ச்சை, இப்போது மத மாற்றத் தடைச் சட்டம் கிளப்பியுள்ள விவாதங்கள், என்று எல்லாவற்றிலும் ஸ்ரீ ஜயேந்திரரின் 'டச்' இருக்கிறது. 'அரசியல்வாதிகளோடு லாவணியில் இறங்கிவிட்டாரோ?' என்று முணுமுணுப்பவர்களும் உண்டு. நமக்கிருக்கும் சந்தேகங்களை அவரிடமே கேட்டுவிடலாமே என்று சங்கர மடத்துக்குச் சென்றோம். மடத்துக்கு வந்திருந்த மூன்று அமெரிக்க பெண்களிடம், அவர்கள் கேள்விகளைத் தொடர்ந்து இந்து சமயத்தின் பெருமையை விவரித்துக் கொண்டிருந்தார். "இந்தியாவிலிருந்து எதை எடுத்துக் கொண்டு போவது?'' என்ற அவர்கள் கேள்விக்கு "இங்கிருக்கும் நல்ல உள்ளங்களை எடுத்துக்கொண்டு போங்களேன்'' என்றார் புன்னகைத்தவாறு. அப்படியே நம்மிடம் திரும்பி "என்ன சமாசாரம்?'' என்றார். பௌத்தம் மற்றும் சமண மதங்களின் ஆதிக்கத்திலிருந்து சைவத்தைக் காத்த ஆதிசங்கரரின் சமயப் பணியிலிருந்து பேட்டி துவங்கியது.

"ஆதிசங்கரர் ஒன்றும் மதமாற்றம் செய்யவில்லை. இருந்தவர்களைத் தக்கவைத்துக் கொண்டார். வழி தவறிப் போனவர்களைச் சரியான பாதையில் திருப்பினார். புதிதாக எதையும் செய்யலை. அந்தப் பாரம்பரியத்தில் வந்த நாங்களும் அதைத்தான் செய்கிறோம்.''

பொது விஷயங்களில் மேடை போட்டுப் பேசுமளவுக்கு நிலை மாறியிருக்கிறதே?

இப்போதும் செய்வது ஆன்மிகப் பணிதான். சொல்வதெல்லாம் ஒரே விஷயம்தான். இந்து மத சம்பந்தப்பட்ட விஷயங்களைத் தவிர வேறொன்றும் நான் பேசுவதில்லை. என்னுடைய கருத்தை நிறைய மக்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். அதனால் தான் பொது இடங்களில் மேடை போட்டுப் பேசுகிறேன்.

மேடையில் பேசுவது அரசியல் தலைவர்களுக்குப் பதில் சொல்வது போன்





றவை. மடத்துக்கு அரசியல் சாயம் பூசுவது போல் தெரிகிறதே.

அதுபோல எழுதுவதை உங்க பாணியாக வைத்திருக்கிறீர்கள். அதனால் அந்தத் தோற்றம் வருகிறது. அவ்வளவுதான். நீங்கள் எழுதுவதால் வரும் தோற்றம்தானே தவிர, நிஜமான தோற்றம் அல்ல.

கடவுள் வழிபாட்டிலும் சமூக பழக்க வழக்கங்களிலும் எங்களுக்கு உரிய இடம் மறுக்கப்படுகிறது. நாங்கள் ஒதுக்கப்படுகிறோம் என்பது தலித்துகளின் குரலாக இருக்கிறது. காஞ்சிபுரதுக்கு அருகிலேயே கூத்தரம்பாக்கத்தில், தங்கள் பகுதிக்குச் சுவாமி வராததால், மனம் வெறுத்து இஸ்லாம் மதத்துக்கு மாறுவதாக தலித்துகள் தீர்மானித்திருக்கிறார்கள்.

நீங்கள் குறிப்பிடும் விவகாரத்தைப் பற்றி மட்டும் சொல்கிறேன். சுவாமி தங்கள் பகுதிக்கு வர வேண்டும் என்று சொல்பவர்கள் முதலில் கோயிலுக்கு வரும் பழக்கத்தை உண்டாக்கிக் கொள்ளட்டும். கோயிலுக்கும் வரமாட்டார்கள். விபூதி, குங்குமம் வைக்க மாட்டார்கள். அப்புறம் சுவாமி தங்கள் தெருவுக்கு வரணும் என்று பிடிவாதம் பிடித்தால் எப்படி? அங்கே ஆத்திகம் இல்லை. அரசியல்தான் இருக்கிறது.

—ஜயேந்திரர்

மீனாட்சிபுரத்தில் சில வருடங்களுக்கு முன் இஸ்லாம் மதத்துக்கு மாறியவர்கள்கூட சமீபத்தில் பத்திரிகையாளர்களிடம் பேசியபோது, "இந்து மதத்தில் இருந்தபோது கிடைக்காத மரியாதை இப்போது கிடைக்கிறது" என்று சொல்லியிருக்கிறார்கள்.

என் காதில் இது போன்ற சங்கதி இது வரை விழவில்லை. மதம் மாறியவர்கள் சொன்னதா இது? யாரோ எதோ சொல்கிறார்கள். நீங்களும் போடுகிறீர்கள். மதமாற்றம், ஜாதி மோதல், மதமோதல் ஆகியவற்றைப் பல சமயங்களில் விசிறி விடுவது பத்திரிகைகள்தான். வியாபாரத்துக்காக எதை வேண்டுமானாலும் எழுதுவது வாடிக்கையாகிவிட்டது. மற்றவர்கள் தர்மத்தை பற்றி கேள்விகள் கேட்பதும் எழுதுவதும் உங்கள் வழக்கமாகப் போய்விட்டது.

ஆனால் உங்கள் தர்மத்தை காற்றில் பறக்க விட்டு விட்டீர்கள். பரபரப்பு என்பது ஒரு டம்ளர் பாலில் ஒரு ஸ்பூன் சர்க்கரை போல இருக்க வேண்டுமே தவிர, முழுப் பாலுமே



பாயசம் போல் இருக்கக் கூடாது.

உங்களைப் போன்ற மடாதிபதிகளுக்குச் சமூகத்தில் நிலவும் இந்த ஏற்றத் தாழ்வுகளைப் போக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

எங்களால் முடிந்த அளவு சரி செய்து கொண்டு தான் இருக்கிறோம். இங்கு அன்போடும், பக்தியோடும் நிறைய தலித்துகள் வருகிறார்கள். அவர்களுடன் அன்புடன் பழகி ஆசி வழங்குகிறோம். தலித்துகள் வசிக்கும் பகுதிகளுக்கு வாய்ப்பு வரும் போதெல்லாம் செல்கிறோம். 'தங்களை அரசியல்வாதிகள் உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள்' என்பதை தலித்துகள் புரிந்து கொண்டு விட்டார்கள். இங்கு சமுதாய வேற்றுமை இருக்கிறதே தவிர, சமய வேற்றுமை கிடையாது. அதை நீக்குவதற்கு நாங்கள் பாடுபட்டு வருகிறோம். நமது கோயில்களில் கூட பல்வேறு சமுதாயங்களைச் சார்ந்த 63 நாயன்மார்களையும் வழிபட்டு வருகிறோம்.

தமிழில் குடமுழுக்கு விவகாரத்தில் நீங்கள் சொன்ன கருத்துக்குத் தமிழ் நாட்டிலுள்ள சைவ தமிழ் மடங்கள் ஆதரவு தெரிவிக்கவில்லையே!

தமிழ்நாட்டிலுள்ள சைவ மடாதிபதிகள் தர்மபுரத்தில் கூட்டம் போட்டு ஆகம முறைப்படித்தான் கோயில் ஆசர அனுஷ்டானங்களை நடத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்களே. இதில் எல்லோர் குரலும் ஒரே குரல்தான். மேலும் நமது மடத்தைத் தமிழுக்கு எதிரான மடம் என்றும் திசை திருப்பும் முயற்சி நடக்கிறது. தேவாரம், திருவாசகம் போன்ற தமிழ் மந்திரங்களை அச்சிட்டு பரப்புவதில் பெரும்பங்கு எங்களுக்கு உண்டு. அதை எழுத நீங்கள் மறுக்கிறீர்கள்.

இப்போது சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள கட்டாய மதமாற்றச் சட்டம் அர்த்தமற்றது. யாரும் கட்டாயப்படுத்தப்பட்டு மதமாற்றம் செய்யப்படுவதில்லை என்று சிறுபான்மையோர் அமைப்புகள் எதிர்க்கின்றனவே!

சரி. அப்படியென்றால் எதற்காக இந்தச் சட்டத்தைக் கண்டு பயப்படுகிறார்கள். இந்தச் சட்டம் எப்போது பாயும்? சட்ட விரோதமாகச் செயல்பட்டால்தானே பாயும். எனவே, இந்தச் சட்டத்தை வலுவுடன் செயல்படச் செய்வது சிறுபான்மையோர் கையில்தான் இருக்கிறது. பரம்பரையாக இங்கே இந்துக்களுக்கு உள்ள உரிமைகளைவிட, சிறுபான்மையோருக்குத்தான் சலுகைகளும், உரிமைகளும் அதிகம் கொடுத்திருக்கிறோம். இந்தச் சட்டத்தில் எந்த மதத்தின் பெயரும் குறிப்பிடவில்லை. ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்துக்கு மாறினால் மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தெரிவிக்க வேண்டும் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மதமாற்றச் சட்டத்தை ஆதரித்து கிறித்துவர்களும், முஸ்லிம்களும்கூட எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

அடிப்படை உரிமைகள் பாதிப்பதாகச் சொல்கிறார்களே!

என்ன அடிப்படை உரிமைகள்? உங்களைப் பேச வேண்டாம், பிரசாரம் செய்ய வேண்டாம். என்று சொல்லிவிட்டதா அரசு? உடை கொடுங்கள், உணவு கொடுங்கள், மருத்துவ வசதி செய்து கொடுங்கள். ஆனால் அந்த சேவைகளை லயன்ஸ், ரோட்டரி கிளப் செய்வதுபோல செய்யுங்கள். இப்போது உங்கள் பள்ளிகளில் படிக்கும் இந்து சிறுவர் சிறுமிகளின்மீது உங்கள் கலாசாரத்தை, பழக்க வழக்கத்தைத் திணிக்கிறீர்கள். அதற்காக வகுப்புகள் எடுக்கிறீர்கள். இது சரியா? இத்தனைக்கும் அரசு உதவியோடு நடக்கும் பள்ளிகள் அவை. ஆனால் இந்துப் பள்ளிகளில் மாரல் சயன்ஸ் கிளாஸ் நடத்தினால் விமர்சனம் செய்கிறீர்கள். இயேசுவை வணங்காவிட்டால், கண் போய் விடும். காது கேளாது என்றெல்லாம் கூடப்

பிரசாரம் செய்கிறார்கள். இதே நிலையை அனுமதித்தால் எதிர்காலத்தில் இந்தியாவுக்கு அபாயம் என்பதில் சந்தேகமில்லை. அதை உத்தேசித்து தான் சட்டம் வந்திருக்கிறது. மனம் மாறி மதம் மாறினால் எல்லோருக்கும் நல்லது. அந்தந்த மதத்திற்கும் நல்லது. இந்தியாவுக்கும் நல்லது.

சிறுபான்மை அமைப்புகளோடு தலித்துகளும் இந்தச் சட்டத்தை எதிர்க்கிறார்களே.

தலித்துகள் சேரவில்லை. தலித்துகள் என்ற பெயரில் அரசியல் இயக்கம் நடத்துவோர்தான் இப்படி அவர்களோடு இணைந்து எதிர்க்கிறார்கள்.

கலைஞர் தரப்பிலிருந்து உங்களைக் கடுமையாக விமர்சித்து கருத்துகள் வந்திருக்கிறதே.

அரசியல்வாதியாக இருக்கட்டும். ஆன்மிகவாதியாக இருக்கட்டும். எதிலுமே ஓர் ஒழுங்கு முறை வேணும். இஷ்டத்துக்குப் பேசுவதும், இரட்டை வேஷம் போடுவதும் சரியாக வராது. என்னைப் பொறுத்தவரை இந்துமதத்தை யாராவது விமர்சித்தால் அதற்குப் பதில் சொல்வது என் கடமை. அதுக்காக தினசரி எதையாவது சொல்ல வேண்டிய அவசியமில்லை. எதை எதை எப்போது சொல்லணுமோ அதைச் சொல்லிவிட்டு நிறுத்திக்கணும்.

உங்கள் குடும்பத்தில் கூட கறுப்பு உடை (பெரியார் பக்தர்கள்) அணிபவர்கள் இருப்பதாக கலைஞர் சொல்லியிருக்கிறாரே.



சொல்லிவிட்டுப் போகட்டுமே. அய்யப்பன் கோயிலுக்குப் போற லட்சக்கணக்கான பக்தர்களும் கறுப்பு உடை அணிந்துதானே போகிறார்கள் மதத்தை பற்றி அவரது விமர்சனத்துக்கு பதில் சொன்னதோடு சரி. மற்ற விஷயங்களைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை.

மதமும் அரசியலும் கைகோக்கும் ஆபத்தான போக்கு நிலவுகிறதே.

அதைத்தான் செய்கிறார்கள். தேவையில்லாமல் செய்கிறார்கள். அயோத்தி விவகாரத்தைகூட அரசியலாக்கக் கூடாது என்று எல்லோருக்கும் சொல்லியிருக்கிறேன்.

அயோத்தி பிரச்னைக்குத் தீர்வு எவ்வளவு விரைவில் வரும்?

மத்திய அரசாலும் தீர்க்க முடியாது. கோர்ட்டாலும் தீர்க்க முடியாது. இரு தரப்பும் உட்கார்ந்து மனம்விட்டு பரஸ்பரம் பேசினால்தான் பிரச்னை தீரும்.

முறைபடி பயிற்சி எடுத்தவர்கள் யாரும் கோயில்களில் பூஜை செய்யலாம் என்று சுப்ரீம் கோர்ட் சொல்லியிருக்கிறதே.

ஒரு திருத்தம். 'தகுதியுள்ளவர்கள்' நன்கு பயிற்சி எடுத்து தங்களைத் தகுதிப்படுத்திக் கொண்டுதான் கோயில் பூஜை பணிகளில் ஈடுபடலாம் என்ற உயர்நீதி மன்ற தீர்ப்பை சுப்ரீம் கோர்ட் உறுதிப்படுத்தியிருக்கிறது. இது ஒரு பக்கம் இருக்க, நடைமுறையில் பார்த்தோமென்றால் நமது கிராமப் புறங்களில் பல்வேறு சமுதாயங்களைச் சேர்ந்தவர்கள் கோயில்களில் பூசாரிகளாகப் பணிபுரிவதைப் பார்க்கிறோம். இது தொன்று தொட்டு வரும் பழக்கம். சமுதாய நல்லிணக்கத்துக்கு அடையாளம் இது.

மதமாற்றச் சட்ட விவகாரத்தில் கூட்டம் போட்டுப் பேசுவதைவிட அதனை எதிர்க்கும் சிறுபான்மையினை, நேரிடையாக அழைத்து நீங்கள் பேசலாமே?

அவர்களைப் பேச்சுவார்த்தைக்குக் கூப்பிடுகிறோம். வரமாட்டேன் என்கிறார்கள். இது பொதுவான சட்டம். படிக்கும்போது மைனாரிட்டியாக இருந்துவிட்டு, வேலை தேடும்போது இந்துவாக மாற விரும்புகிறவர்களையும் இது பாதிக்கும்.

இதுபோன்ற ஒரு சட்டத்தை அகில இந்தியாவுக்கும் கொண்டு வர மத்திய அரசை வற்புறுத்துவீர்களா?

நான் சொன்னதால் மாநில அரசு இச்சட்டத்தைக் கொண்டு வரவில்லை. இதுபோன்ற சட்டம் அவசியம் என்று வெகு காலம் முன்பே நான் சொல்லியிருக்கிறேன். வந்தால் நன்றாகத்தான் இருக்கும். நான் சொல்வதைக் கேட்டால் பல நல்ல காரியங்கள் நடக்குமே!

- ப்ரியன்

படங்கள் : **சௌரா**

கமலும் மணியும் கலக்கப் போறாங்க...





அண்டர்வாட்டர் படப் பிடிப்பு உத்தியை முதன்முதலாக இறக்குமதி செய்து, விஜய்காந்த் நடித்த உளவுத் துறை படத்தில் திறம்பட பயன்படுத்தியவர், திரைப்படக் கல்லூரி மாணவர் டி. ரமேஷ். மூன்று வருட இடைவெளிக்குப் பிறகு 'ஜனனம்' படத்தை இயக்குவதன் மூலம் கோலிவுட்டில் மறு பிறவி எடுத்திருக்கிறார். இடைவெளி எடுத்துக் கொண்டது தெரியக் கூடாது என்று நினைத்தாரோ என்னவோ, இந்த முறை சூடாகவே இருக்கிறார் ரமேஷ். ''இந்தியாவின் எதிர்காலமே இளைஞர்கள் கையில்தான், என்று வாய் கிழியப் பேசும் அரசுகள் எத்தனையோ வந்து போய்விட்டன. ஆனால் இளைஞர்கள் நிலை இன்றும் கேள்விக்குறியாகவே இருக்கிறது. படித்த இளைஞர்களில் பலரும் தற்கொலையை நாடுகிறார்கள். சமூக ஏற்றத் தாழ்வுகள் அவர்களின் மனவலிமையை உடைத்து நொறுக்குகிறது. வன்முறையும், தீவிரவாதமும், தடுமாறும் இளைஞர்களைத் தூண்டில் போட்டுப் பிடித்து விடுகின்றன. சுதந்திரம் அடைந்து ஐம்பத்தைந்து வருடமாகியும் எந்த அரசும் சரிவரத் திரும்பிப் பார்க்காத இளைய சமுதாயத்தை, நமது நாயகன் திரும்பிப் பார்க்க வைக்கிறான். நானும் இந்தக் கூட்டத்தில் ஒரு இளைஞன் என்ற வகையில், இந்தச் சமூகம் மீதான எனது கோபத்தை இந்தப் படத்தின் மூலம் வெளிப் படுத்தப் போகிறேன்'' என்று கண்கள் சிவக்கப் பேசுகிறார். எதுக்கும் நம்ம தமிழ்நாடு தணிக்கைக் குழு, அறிவு ஜீவிகளைக் கொஞ்சம் மனசுல வெச்சுக்குங்க.



• ஜனனம் - அருண்குமார் பிரியங்கா திரிவேதி

வைஷ்ணவா ஆண்கள் கல்லூரியில் எம்.பி.ஏ. முடித்த கையோடு ஒரு இணையதள நிறுவனத்தைத் தொடங்கி தொழில் அதிபர் ஆகியிருக்கிறார் இருபத்து நான்கு வயது கணேஷ். ''கம்பெனி தொடங்கிட்டேன் டான்

● ரவுண்ட்ஸ் பாய்


• பாலா - ஷாம், மீரா ஜாஸ்மின்

ஓவர் பார்க்கிறதுக்குள்ளே சினிமா உருவத்தில் வேறொரு டான். 'கும்மாளம்' படத்தின் ஹீரோவாக நடிக்கும் வாய்ப்பு. ப்ளஸ் டூ முடித்துவிட்டு விடுமுறைக்கு ஊட்டிக்கு வரும் பசங்களின் கதை. எம்.பி.ஏ. படிச்சதே மறந்து போய், ப்ளஸ்டூ படிக்கிற மாதிரி ஸ்பீல் விடும் துடுச்சி அப்படியொரு கதைங்க" எனும் கணேஷ் படப்பிடிப்பு முடிந்த பிறகு தமது கம்பெனி குறைந்தபட்சம் பக்கம் போய்ப் பார்த்திருக்கிறார். மேஜை, நாற்காலிகள் கூட கால் முளைத்து வேறு நிறுவனங்களுக்குப் போய்விட்டிருக்க.. "ஒரு குணசித்திர நடிகனாக வேணும். ஜெயித்துக்காட்டாமல் சினிமாவை விட்டுப் போக மாட்டேன்" என்று அடம் பிடிக்கிறார்.

படத்திற்குப் படம் நடிகர் நடிகைகளைப் பாட வைத்து இசைப் புரட்சி பண்ணிய திரையுலகத்தில், மறுபடியும் அந்தக் காய்ச்சல் ஆரம்பித்துவிட்டது.

'பாப்கார்ன்' படத்திற்காக "அம்மா இங்கே வாவா" என்று வாலி எழுதிய பாடலை, யுவன் சங்கர்ராஜா இசையில் அந்தப் படத்தின் நாயகன் மோகன்லால் பாடியிருக்கிறார். இத்தனைக்கும் இந்தப் படத்தின் இயக்குனர், முற்போக்கு சினிமா தர முயற்சிக்கும் நாசர். அதனால் என்ன 'பாப்கார்ன்' படம் சுத்தமான பேமிலி, சென்டிமெண்ட், மசாலா வாச்சே, என்கிறது படக் குழு. எப்படியோ, மோகன்லால் பாடினதுலே ஆடியோ மார்க்கெட் ஆட்டம் காணாமல் இருந்தா சரிதாங்க...


ஷாம் நடித்து வெளியானவை இரண்டே படங்கள்தான். இரண்டும் சொல்லிக் கொள்கிற மாதிரி போகவில்லை என்றாலும், தமக்கு நன்றாக நடிக்க வரும் என்று நிரூபித்தார். இப்போது நடிப்பை நம்பாமல் தமது மூன்றாவது படத்திலேயே முஷ்டியை மடக்கிக் கொண்டு, ஆக்ஷன் ஹீரோவாக அவதாரம் எடுத்திருக்கிறார். "பாலா படத்தில் டூப் போடாமல் ஆக்ஷன் செய்து கலக்கியிருக்கிறேன். படம் வந்தபிறகு நம்ம நிலைமையைப் பாருங்க" என்று பந்தா பண்ணுகிறார். படம் வந்து வெற்றி பெற்றால் சம்பளத்தை எக்குத்தப்பாக உயர்த்துவதைத் தவிர வேற பெரிசா என்னத்தைப் பண்ணிடப் போறீங்க.

'மௌனம் பேசியதே' கேசட் வெளியீட்டு விழாவில் மைக்கைப் பிடித்த டைரக்டர் மணிரத்னத்திடம், நீங்களும் கமலும் எப்ப இணையப் போறீங்க?' என்ற கேள்வியைப் பார்வையாளர் ஒருவர் வீச, நீண்ட நேரம் யோசித்த மணி 'விரைவில்' என்றார். அதே மைக்கை 'டபக்'கென அபகரித்த கமல், 'மிகமிக விரைவில்' என்றதும் அரங்கத்தில் கரகோஷம். நாயகனுக்குப் பிறகு நச்சென ஒரு படம் வரப்போகுதுன்னு சொல்லுங்க!

மும்பை மசாலா

இந்திக் கிறுக்கல்கள்!

தீபாவளியும் அதுவுமாக, இல்லங்களிலிருந்து வரும் நெய் மணம், எண்ணெய் மணத்துடன் போட்டி போட்டுக் கொண்டு குப்பை மணமும் தேவையா?, என்று சற்றே சிந்தித்ததன் பயனாய், மும்பை கார்ப்பரேஷன் காரர்கள் ஸ்ட்ரைக்கைத் தாட்சண்யத்துடன் தள்ளிப் போட்டிருக்கிறார்கள். பி.இ.எஸ்.டி. ஊழியர்களுக்கு ரூ.5000மும், கார்ப்பரேஷன் ஊழியர்களுக்கு ரூ.4000மும் தீபாவளி அட்வான்ஸ் தருவதாக அறிவித்தார்களா? 5000த்துக்கு ஒரு பைசா குறைந்தாலும், கை நீட்டி வாங்கக்கூடாது என்று யூனியன் தலைவர் ராவ், கார்ப்பரேஷனை முடுக்கிவிடப் பார்த்தார். பண்டிகை சமயத்தில் இந்த வீம்பெல்லாம் தாக்குப் பிடிக்குமா? அதனால், தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்த வண்ணமே ஊழியர்கள், கிடைத்ததை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஹூம்... ஒரு காலத்தில் ட்ரேட் யூனியன் என்றால் மதிப்பாயிருக்கும். இப்போது யூனியன் என்பதே ஒரு 'ட்ரேட்' (வியாபாரம்) ஆகிவிட்டதே? எதிலும் விஞ்சி நிற்பது குழப்பம் தான்.



* தனிப்பிறவி

குழப்பமாகத்தானிருக்கிறது... புங்கம் என்பதா? சிலி என்பதா? ஒரு புலிக்கும் சிங்கத்துக்கும் பிறந்த 'ஹைப்ரிட்' குட்டியான 'சிம்பா'வை ஆங்கிலத்தில் 'டைகான்' என்கிறார்கள். சிங்க உடலில் இலேசான வரிகள் கோடிட்டிருக்கும். இந்த அதிசயக் குட்டியை, பிறந்த உடனேயே இதன் அம்மா நிராகரித்துவிட்டதால், ஆட்டுப்பாலை ஃபீடிங் பாட்டிலில் ஊற்றிக் கொடுத்து வளர்த்திருக்கிறார்கள். ஏழு வருடமான சிம்பா, சர்க்கஸில் பணி புரிந்திருக்கிறது. இப்போது சர்க்கஸில் வன விலங்குகளுக்குத் தடை விதித்துவிட்டதால், வேலை போய் திண்டாடுகிறது. தூரத்தில் நடக்கும் சர்க்கஸ் ஒலிகளை ஏக்கத்துடன் கேட்கிறது. ஆனால் அப்போதும் இப்போதும் இதைக் காணத்தான் பெருங்கூட்டம்! முதலில், இதைப் பெண்புலியுடன் மணமுடிப்பதா, சிங்கப் பெண்ணுடன் இணைப்பதா என்று சர்ச்சையாயிருந்தது. இப்போது 'க்ராஸ் ப்ரீடிங்'குக்குத் தடை விதித்துவிட்டதால், உலகிலேயே இதுதான் தனிப்பிறவி... என்ன பரிதாபம்!

பரிதாபத்திலும் பரிதாபமாய் இருக்கும். இந்தியாவிலிருந்து 'ஆஸ்கரு'க்கு அனுப்பப்படும் படங்கள்! கந்தக் கிழிசல்களை



★ கோவிந்தா

உடுத்திய பஞ்சப் பராரிகளைப் பற்றி, வறுமையில் வறுத்தெடுத்த வேதனைக் காவியமாக வல்லவோ இருக்க வேண்டும்? (லகான் வரையில் இந்தப் பாரம்பர்யத்தை விடாமல் பின்பற்றியிருக்கிறோமே?) அதெப்படி செல்வக் கொழிப்பும், காதல் செழிப்பும் மிக்க, 50 கோடி செலவில் உருவாக்கப்பட்ட, மது-மாது-மயக்கம் என்ற சூழலில் ஆடல் பாடல் களஞ்சியமான "தேவதாசை" தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்? சஞ்சய் லீலா பன்சாலி தன்னைத் தானே கிள்ளிப் பார்த்துக் கொண்டிருக்கிறார். படம் 20 கோடிகளைப் பெற்றுத் தந்ததை அவர் பெரிசாக நினைக்கவில்லை. முதன் முறையாக நமது படாடோபமான பாரம்பரியத்தை ஏற்று அவர்கள் மதிப்பதில் சிலிர்த்துக் கொண்டிருக்கிறார்.

சிலிர்ப்பாய் சிலிர்த்துக் கொண்டிருக்கும் மற்றொரு நட்சத்திரம், 'ஏக் சோடீ ஸீ லவ் ஸ்டோரியால்' சிரிப்பாய்ச் சிரித்த மனீஷா கொய்ராலா. 'ஜாகிர் ஹுசைன் தபலா இதுதானா?', என்று எந்த வேளையில் பாடினாரோ கமல்? பாவம், அடிபட்ட தபலாவைக் காட்டிலும் அதிகமாக நொந்து மனசொடிந்து கிடந்தார். திடீரென்று 'ஹார்வர்ட்'டிலிருந்தும், 'டெக்னிகல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் மஸாசூஸட்ஸி' லிருந்தும் அவருக்கு விசேஷ அழைப்பு வந்திருப்பதில் உற்சாகியாகிவிட்டார். 'எஸ்கேப் ஃப்ரம் தாலிபான்' படத்தைப் பற்றி உரையாற்றச் சொல்லியிருக்கிறார்கள். உஜ்வல் சட்டோபாத்யா இயக்கத்தில் இவர் நடிக்கும் இப்படம், சுஷ்மிதா போஸ் என்ற வங்காளப் பெண்ணைப் பற்றிய உண்மைக் கதை. அவர் ஒரு அஃப்கான் நாட்டுக்காரரைக் காதலித்து, மணந்து, ஒரு பெண்ணையும் பெற்றபின், ஆஃப்கானிஸ்தான் சென்று படும் துயர்களும், தன் பெண்ணை தாலிபானிடமிருந்து மீட்க, அவர் பட்ட பாடும்தான் கதை. அமெரிக்க மாணவர்கள் பலர், இதைப் பற்றி அறிந்து கொள்ள ஆர்வமாயிருக்கின்றனராம். "உங்களை ஒரு நடிகையாக நாங்கள் நினைக்கவில்லை. கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் கலாசாரத் தூதுவராகப் பார்க்கிறோம்" என்று அவர்கள் உருக்கமாக எழுதிய கடிதத்தில் அம்மணி நெகிழ்ந்துவிட்டார்.

சிலிர்த்துக் கொண்டிருக்கும் மற்றொரு பெண்மணி, கோவிந்தாவின் மனைவி சுனிதா! பார்த்திபன் ஸ்டைலில் இந்த பாலிவுட் ஸ்டாரும் இப்போது கையில் பேனா பிடித்து, கவிதைகளாய் எழுதிக் குவிக்கிறார். இந்திக் கிறுக்கல்கள். மனைவிமீது எழுதிய இரண்டு கவிதைகளை இவர் படித்துக் காட்டியதும், அவர் கண்கள் குளமாகிவிட்டனவாம்! ஹூம்... 'இவை அனைத்தும் என் கற்பனை, இவற்றை என் சரித்திரம் என்று நம்பி விடாதீர்கள்' என்று ஆரம்பத்தில் படு ஸ்பஷ்டமாய் சொல்லியிருக்கிறாரே... அதை சுனிதா படித்திருக்க மாட்டாரோ?

— ஜெயஸ்ரீ ராஜ்

இப்போ இல்லைன்னா எப்போ?...



'ராஜ்ஜியம்' படத்தில் எந்திரத் துப்பாக்கி ஏந்தி, மாநில ஆளுனரைப் பழி வாங்கத் துடிக்கும் புரட்சிப் பெண்ணாக அறிமுகமானவர் ப்ரியங்கா திரிவேதி. அடுத்த படத்திலேயே (ராஜா) அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, பவ்யம் எல்லாவற்றையும் அசத்தலாய் வெளிப்படுத்தி அக்மார்க் அப்பாவிப் பெண்ணாகக் கலக்கிய கல்கத்தா கவிதை. 'ஜனனம்' உட்பட அரை டஜன் தமிழ்ப் படங்களில் ஆக்கிரமிப்பு செய்திருக்கும் ப்ரியங்கா பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும்போது 'மிஸ் கொல்கத்தா'வாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாராம். இந்தச் செய்தியைப் பத்திரிகைகளில் படித்துவிட்டு, வங்காளக் கலைப்பட இயக்குனர் பாசு பட்டாச்சார்யா சினிமாவில் வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்... "கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டேன். நான் அற்புதமாக நடித்திருப்பதாக பாசுஜி பாராட்டியதோடு, அவரது அடுத்த படத்திலும் நடிக்க வாய்ப்புக் கொடுத்துவிட்டார். கலைச் சினிமாவில் பணம் கிடைக்காவிட்டாலும் பாராட்டு மழைக்குப் பஞ்சமே இருக்காது. நந்திதா, ஷபானா ஆஸ்மி மாதிரிதான் நானும் ஆக நினைத்தேன். வெகுஜன சினிமாக் கலைஞர்கள் எங்கே விட்டார்கள்.

நச்சரிப்புத் தாங்க முடியாமல் 'சூரி' என்ற தெலுங்குப் படத்தில் நடித்தேன். அதை ஹிந்தியில் 'துர்கா' என்று மொழி மாற்றம் செய்தார்கள். அதைப் பார்த்துவிட்டு கன்னடத்து உபேந்திரா 'எச் டூ ஓ' படத்துக்கு அழைத்தார். அது காவிரிப் பிரச்னையை மறை முகமாகச் சொல்லும் கதையென்று சொல்லாமல் மறைத்து விட்டார்கள். என்றாலும் அந்தப் படத்தைப் பார்த்துத்தான் தமிழில் நடிக்க வாய்ப்புகள் வந்தன" என்று மூச்சு விடாமல் பேசிக் கொண்டே போகிறார்.

"இயக்குனர் கேட்காமலேயே ஆடை விஷயத்தில் தாராளமயக் கொள்கையைக் கடை பிடிக்கிறீர்களாமே" என்று கேட்டு விட்டதற்கு ப்ரியங்காவின் பதில் "இந்த வயதில் தாராளமாக நடிக்காமல் வேறு எந்த வயதில் நடிக்க?"

சாரி மேடம், தெரியாத்தனமாய்க் கேட்டுத் தொலைத்து விட்டோம்.

சந்திப்பு: ஸ்ரீசக்கரம்





கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
- பாரதியார்.

உச்சநீதிமன்றம் போட்ட வைட்டமின் ஊசிகள்!


"காவிரி, குஜராத் விவகாரங்களில் உச்சநீதிமன்றம் வெளியிட்டுள்ள விளக்கங்கள், நாட்டு நலனை மட்டுமே கருத்தில் கொள்ளும் நடுநிலையாளர்களுக்கு மிகுந்த ஆறுதல் அளித்திருக்கிறது.

அரசியல் சார்புகளும் சுயநலமும் குறுகிய நோக்குகளும் கடந்த நியாயம் நமது நீதித் துறை மூலமாக நிலைநாட்டப்படும் என்கிற நம்பிக்கை புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.

நீதித் துறையிலும் தாமதங்கள் நிகழ்கின்றன. ஒரு சில நீதிபதிகள் சந்தேகத்துக்கப் பாற்பட்டவர்கள் அல்ல என்கிற அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இந்த நேரத்தில் – இத்துறையிடம் நமது நம்பிக்கை குறைந்து போகக் கூடிய ஒரு சூழலில் – உச்ச நீதிமன்றத்தின் மேற்படி விளக்கங்கள் இந்திய ஜனநாயகத்துக்கே போடப்பட்ட வைட்டமின் இன்ஜெக்ஷன் என்று



2002 நவம்பர் 10
சித்ரபானு ஐப்பசி 24
மலர் : 61
இதழ் : 15



சொல்லலாம்.


'குஜராத்தில் தேர்தல் நடத்த சூழல் அனுமதிக்கவில்லை; ஆறு மாதங்களுக்குள் நடத்த வேண்டும் என்று தேர்தல் விதிகளும் கட்டாயப்படுத்தவில்லை' என்று கூறிய தலைமை தேர்தல் கமிஷனரை பி.ஜே.பியினர் அவதூறு பேசினார்கள்.

இன்று உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள விளக்கம், அந்த அவதூறைக் களைவதுடன் தேர்தல் கமிஷனின் சுயேச்சை அதிகாரத்தை மதிக்கும் விதமாகவும் அமைந்திருக்கிறது.

'ஆறு மாத இடைவெளிக்குள் சட்டசபை கூடியாகவேண்டும் என்ற விதி, கலைக்கப்பட்ட சட்டசபைக்குப் பொருந்தாது என்று தெளிவுபடுத்தியுள்ளது உச்சநீதிமன்றம். அதே சமயம், எந்த ஒரு மாநிலத்திலும் தேர்தல் நடத்தி மக்களாட்சியை விரைவில் நிறுவும் பொறுப்பு தேர்தல் கமிஷனுக்கு இருப்பதையும் நினைவூட்டியிருக்கிறது. அரசியல் தூண்டுதலால் நிகழும் கலவரங்களைக் காரணம் காட்டி, தேர்தலை வெகு காலத்துக்கு ஒத்திப்போடக்கூடாது. 356ஐப் பிரயோகித்து ஜனாதிபதி ஆட்சியை நிறுவும் அதீத நடவடிக்கை குறித்து தேர்தல் கமிஷன் கருத்து தெரிவிக்க அவசியமில்லை; அமைதியும் தேர்தலுக்கு உகந்த சூழலும் நிலவ அனைத்து தரப்பிலும் பாடுபட வேண்டும். அனைவரது ஒத்துழைப்பையும் பெற்று தேர்தல் கமிஷன் குஜராத் தேர்தலை நடத்த வேண்டும்' என்று உச்சநீதிமன்றம் கூறி வாய் மூடுவதற்குள் தேர்தல் கமிஷன் குஜராத் தேர்தலுக்கான தேதியை (டிசம்பர் – 12) அறிவித்து விட்டது.

ஆனால், நரேந்திர மோடி மட்டும் உச்சநீதி மன்றம் அளித்த விளக்கம் தமது தரப்புக்குக் கிடைத்த வெற்றி என்பதுபோல் திரித்துப் பேசிவருவதுதான் வேடிக்கை.

இந்த அரசியல் குள்ளநரித்தனத்தை அடையாளம் கண்டுகொண்டு, குஜராத் வாக்காளர்கள் நன்றாகச் சிந்தித்து, அச்சமின்றி வாக்களிப்பார்கள் என்று நம்புவோம். அதற்கானச் சூழலை ஏற்படுத்தி கண்காணிக்கும் பொறுப்பை, தேர்தல் கமிஷன் ஏற்று, திறம்பட அமுல்படுத்தட்டும்.



காவிரி விவகாரத்தில் உச்சநீதிமன்றம் இறுதி ஆணையைப் பிறப்பிக்கும் முன்னரே எஸ்.எம். கிருஷ்ணா மன்னிப்பு கோரிவிட்டார்.

இந்தத் தலைகுனிவுக்கு இடம்கொடாமல் அவர் முன்னமே தமிழகத்துக்குக் காவிரி நீரைத் திறந்துவிட ஆவன செய்திருக்கலாம். கர்நாடக விவசாயிகளில் ஒரு பிரிவினர் கோபப்பட்டிருந்தாலும் தமிழகம் மட்டுமின்றி நாடு முழுவதுமே அவரை வாழ்த்தியிருக்கும்.

ஆனால், இப்போதோ, கர்நாடகத்திலும் அமைதி இல்லை; மிகவும் தாமதமாகத் தண்ணீர் விடப்பட்டிருப்பதால் தமிழக தரப்பிலும் திருப்தியோ மகிழ்ச்சியோ இல்லை.

கிருஷ்ணா மீதான உச்சநீதி மன்றத்தின் கண்டனம், நீதிமன்ற அவமதிப்பு தொடர்பானது மட்டும் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. இறுதித் தீர்ப்பை வழங்கும் முன்னரே, பஞ்ச காலத்தில் தண்ணீரைப் பகிர்ந்து கொள்ள மறுக்கும் கர்நாடகத்தின் போக்கை நீதிமன்றம் கண்டித்துள்ளது:

'இருப்பதைப் பகிர்ந்து கொள்ளும் ஆரோக்கியமான மனப்போக்கு இன்றி அண்டை மாநிலங்களுடன் எப்போதும் மோதுகிறீர்கள். நிறைய தண்ணீர் இருக்கிற காலத்தில் அதைப் பகிர்ந்து கொள்வதை, உங்கள் தாராள மனசின் அறிகுறியாகக் கொள்ள முடியாது. பஞ்ச காலத்தில் பகிர்ந்து கொண்டு பெருந்தன்மை காட்டுங்கள்' என்று உச்சநீதி மன்றம் கூறியிருப்பது, காவிரி விவகாரத்தில் தமிழகத்தின் தரப்பை மிகவும் பலப்படுத்துகிற வாக்கியம்.

தமிழக முதல்வருக்கு இவ் விவகாரத்தில் கிடைத்துள்ள தார்மிக வெற்றி இது என்றும் சொல்லலாம்.

கர்நாடகாவில் – குறிப்பாக மாண்டியாவில் எதிர்ப்புகள் அடங்கி அமைதி திரும்ப அம்மாநிலத்தின் எதிர்க் கட்சிகள் இனி ஒத்துழைப்பு அளிப்பதுதான் அறிவுடைமை. அதோடு இந்த விவகாரத்தில் ஏற்பட்ட ரணங்கள் ஆற, தமிழகத் தலைவர்களும் நேசக்கரம் நீட்டவேண்டும். ○

எதுவும் என்னுடையது அல்ல; அனைத்தும் உன்னுடையதே அருளாளா! அருணாசலா!

தீபத்திருநகர் திருஅண்ணாமலையில் கார்த்திகை தீபத்திருநாளன்று சிவமடத்தில் தீபமேற்றி அன்னதானம் செய்ய அன்புடன் அழைக்கிறோம்!

பேரன்புடையீர்! வணக்கம். அருள்மிகு ஸ்ரீ அருணாசலேஸ்வரர் தீபாவளித் திருநாளில் தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம்.

ஆன்மீக அன்னதான அறக்கட்டளையின் மூலம் அடிஅண்ணாமலையில் நடத்தப்படும் சிவமடத்தில் ஐந்தாம் ஆண்டில் தொடர்ந்து அன்னதான சேவை!

• உலக சிருஷ்டியின்போது முதன்முதலில் உருவான தாவரம் நெல். இவ்வளவு மகிமை பொருந்திய நெல்லை அம்பிகையின் அவதாரமான ஸ்ரீ ஆஷாடதேவி முதலில் ஏற்றுக்கொண்டாள். அதைப் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து ஜீவராசிகளும் உண்ணும் உணவாக மாற்ற நெல்மணி முறையில் அன்னை கடுந்தவம் புரிந்தாள். திருஅண்ணாமலையார் ஆலயத்தில் அம்பிகை தவம்புரிந்த இடமே "வாரண தரிசனம்" என்றழைக்கப்படுகிறது. எம்பெருமானின் திருவருட்சக்தியால் 'அபீத அக்னி' மூலம் நெல்மணிகளை அன்னமாக்கி அபீதகுஜாம்பாளாக அக்னிக்ஷேத்ரமான திருஅண்ணாமலையில் அருள்பாலிக்கிறாள். அம்பிகையே அண்ணாமலையாரை அன்னமலையாய் அபிஷேகம் செய்த திருநாள் ஐப்பசி பௌர்ணமி. கார்த்திகைப் பௌர்ணமியில் அனைத்து தெய்வங்களுமே அண்ணாமலையாரை கிரிவலம் வருகின்றனர். இப்புனிதமான இரு மாதங்களிலும் வரும் பௌர்ணமியில் கிரிவலம் வருவோர் மற்றும் தங்களால் வர இயலாதவர்கள் கிரிவல அடியார்களுக்கு அமுதளித்து அன்னதானம் செய்தால் கிரிவலப்பயன் மேலும் பன்மடங்கு பெருகும்.

தாங்கள் எதை நினைத்து அன்னதானம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதை தெரிவித்தால் அதன்படி நாங்கள் பௌர்ணமி அன்று அன்னதானம் செய்து பிரசாதத்துடன் ஸ்ரீ அருணாசலேஸ்வரர், ஸ்ரீ உண்ணாமுலையம்மன் படத்தையும் தங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.


❖ பிறந்தநாள் ❖ திருமணநாள் ❖ முன்னோர்கள் திதி நாள் ❖ வாழ்க்கையில் உயர்வு ❖ தொழிலில் முன்னேற்றம் பெற ❖ நிரந்தர வேலை பெற ❖ கல்யாண பாக்கியம் பெற, நல்ல வரன் அமைய ❖ புத்திர/பிள்ளை பாக்கியம் பெற ❖ கணவன் - மனைவி இடையே ஒற்றுமை நிலவ ❖ கஷ்டங்களும், கடன்களும் எதிர்ப்பு இடையூறுகளும் நீங்க ❖ புதிய முயற்சிகளில் முன்னேற்றமும் வெற்றியும் உண்டாக ❖ புதிதாக தொழில் தொடங்க ❖ புதிதாக வீடு/ மனை பெற ❖ வாகன யோகம் பெற ❖ நல்ல சிந்தனை பெற ❖ சிந்தனை வளம் பெருக ❖ உடல் ஆரோக்கியம் பெற ❖ நீண்ட ஆயுள் பெற ❖ தெய்வசக்தியுடன் திகழ ❖ குடும்ப ஒற்றுமை பெற ❖ உலக ஒற்றுமை பெற ❖ சமுதாய ஒற்றுமை பெற ❖ தேச ஒற்றுமைபெற ❖ எல்லா உயிர்களும் இன்புற்று வாழவும்.

- தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.
- ரூ.500/ - அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.1000/ - அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.5000/ - அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.500, ரூ.1000, ரூ.5000 அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு காசியில் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் விக்கிரகமும், ஸ்ரீ அருணாசலேஸ்வரரின் வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

★ ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்கள் சார்பாக, ஒவ்வொருமாதமும் பௌர்ணமி அன்று திருஅண்ணாமலையில் அன்னதானம் செய்து தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்கு பிரசாதமும் 'ஆன்மீகம்' மாத இதழும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் தாங்கள் விரும்பும்போது சந்ததியரின் முகவரிக்கும் மாற்றம் செய்து தருகிறோம். ஆன்மீக அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் புனிதம் பெற வேண்டும் என்ற இறைசிந்தனையோடு ரூ.5000 செலுத்துபவர்களுக்கு 1024 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள ஸ்ரீமத் பகவத்கீதை புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

• நன்கொடை அனுப்பும் சிவநேசச்செல்வர்கள் (Aanmeeka Annadhana Charitable Trust Chennai - 4) என்ற பெயரில் Cheque /D.D/ M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அன்னதான திருப்பணிகளை நலம்தரும் இறைபணி சேவைகளாக 'ஆன்மீக அன்னதான அறக்கட்டளை' ஆற்றிவர தங்களது ஒத்துழைப்பை என்றும் பேரன்புடன் வேண்டுகிறோம்.



ஸ்ரீ அருணாசலேஸ்வரர்

நன்கொடைகளுக்கு 80 G பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.

Cheque / D.D / M.O அனுப்ப வேண்டிய முகவரி :

ஆன்மீக அன்னதான அறக்கட்டளை

AANMEEKA ANNADHANA CHARITABLE TRUST (Regd.)

68, Nadu Street, (Opp. Sri Kapaleeswarar Temple) Mylapore, Chennai - 600 004.

Tel : 4959302 Fax : (044) 7102308 E - Mail: siva siva @vsnl.net



ஸ்ரீ உண்ணாமுலையம்மன்

கார்த்திகை தீப பௌர்ணமியில் அன்னதானம் செய்தால் நம் உடற்பிணி உடனே நீங்கும்!

கிளியோபாத்ராக்கள்!





'லி மரிக்' என்ற கவிதை வகையை முதன்முதலாகத் தமிழுக்கு அறிமுகப்படுத்த இருக்கிறார் கவிஞர் ஈரோடு தமிழன்பன்.

"ஆங்கிலக் கவிதை வகைகளில், சந்தச் சிறப்புடைய லிமரிக்கும், ஜப்பானியக் கவிதை வகைகளில் நுண்மையும் மென்மையும் கொண்ட ஹைகூவும், கைத்தலம் பற்றிக் கடிமணம் பூண்டு பெற்றெடுத்த கவிதை இது" என்கிறார் அவர்.

கவிதைகளின் உருவம், உள்ளடக்கம் ஆகியவற்றை அடையாளப்படுத்தும் இக் கவிதைகள் கவியாளுமை, மொழியாளுமை ஆகியவற்றுக்குக் கனமாகவும் இருக்கின்றன.

அதென்ன லிமரிக்?

"அயர்லாந்திலுள்ள ஓர் ஊரின் பெயர் லிமரிக். பிரான்சுக்குக் கூலிப் படைகளாகச் சென்ற அயர்லாந்து படை வீரர்கள், தங்கள் ஊருக்குத் திரும்பிய போது, பிரான்ஸில், தாம் கேட்ட கவிதையை இங்கு பரப்பினார்கள். பிரான்ஸ் வகையான பாட்டு, அயர்லாந்தின் லிமரிக் என்ற ஊரில் உருவானதால் இந்தப் பெயர் பெற்றது. இதற்கு வேறு சில காரணமும் சொல்கிறார்கள்" என்கிற தமிழன்பன், இக் கவிதைத் தொகுப்புக்குத் தாம் பிறந்த ஊரை இணைத்துச் "சென்னிமலை கிளியோபாத்ராக்கள்" என்ற பெயரைச் சூட்டியிருக்கிறார்!

தொகுப்பிலிருந்து சில கவிதைகள் :

திண்டுக்கல்லுப் பூட்டை
திறக்க முடியவில்லை - திருடன்
திருடிப் போனான் வீட்டை.


●●

எவரெவர்க்கோ வத்தி வைத்தான்
சிறையில் சிக்கியதும்
இறைவன் மேல் பக்தி வைத்தான்

●●

மழலைக்கோ இறுதியாத்திரை
பழகிய பொம்மைக்கும்
தூக்கமில்லை
கேட்கிறது தூக்க மாத்திரை.

— ஏக்ஜி




புக் பேங்க்


















முத்தமிழ் முருகன் - மாங்காடு கண்ணப்ப மனோகரன்

சரவண பவ - இந்த ஆறெழுத்து மந்திரத்தில் அகிலமே அடக்கம் என்கிறார் மாங்காடு கண்ணப்பன். பக்தி இலக்கியத்தில் நல்ல ஆய்வு நூல்.

4 பகவதி தெரு, ஸ்ரீ சக்ரா நகர், மாங்காடு, விலை.ரூ. 150/-

புதிய பார்வை - ஸ்ரீ இருங்கோவேள்

வாரி வழங்கும் மனம் வந்தால் வள்ளலாகிறான்; சேவை செய்யத் துணிந்தால் தொண்டனாகிறான்; இவற்றோடு மனிதாபிமானமும் சேர்ந்து விட்டால், மனிதன் தெய்வமாகிறான். அப்படி சங்கர நேத்ராலயாவின் இதயங்களில் இடம் பிடித்த கோகுல்தாஸின் வாழ்க்கை வரலாறு.

சங்கர நேத்ராலயா, 18. கல்லூரி சாலை, சென்னை - 6.

உலக அதிசயங்கள் - சந்திரன்

'அம்பலம்' இணைய இதழில் வெளியான அதிசயங்களின் தொகுப்பு. ஏழு மட்டுமல்ல, இன்னும்கூட இருக்கிறதாம்.

கலைஞன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.35

என் நந்தவனத்துப் பட்டாம்பூச்சிகள் - எம்.ஜி. கன்னியப்பன்

கவிதைக்குப் பொய் அழகு என்பார்கள். இந்தக் கவிதைகளில் பொய்யல்ல. விழிப்புணர்வும், பண்பியலும் உண்மையாய் மின்னுகின்றன.

மதி நிலையம், 4(39) தணிகாசலம் தெரு, தி. நகர், சென்னை - 17. விலை ரூ. 25

தெய்வவாக்கு - ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

ஸ்ரீ காஞ்சி காமகோடி ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் அருளுரை, பக்தி, வழிபாடு, வாழ்க்கை முறை, தரும நெறி, பண்டிகைகளின் தாத்பர்யங்கள் என வாழ்வுக்கு வழிகாட்டும் அருளுரைகள் கொண்டது.

வானதி பதிப்பகம், 13. தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17. விலை ரூ. 80/-

தமிழும் கணிப்பொறியும் - மா. ஆண்டோபீட்டர்

தமிழ் இணைய ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் மா. ஆண்டோ பீட்டரால் தமிழ்க் கணினி பயன்படுத்துவோருக்கு உதவ எழுதப்பட்டது.

கற்பகம் புத்தகாலயம், 50/18, ராஜாபாதர் தெரு, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.65/-

இதய நலம் - ச. இளங்கோவன்

இதயத்தைப் பராமரிக்கும் வழிகளும், பாதுகாக்கும் முறைகளும் விளக்கப்பட்டுள்ள மருத்துவ நூல். இதய நோயாளிகளுக்கு உதவும்.

பத்மினி பதிப்பகம், 7. முதல் முதன்மைச் சாலை, அரும்பாக்கம், விலை. ரூ.60/-

கனவில் உதிர்ந்த பூ - இரா. நாறும்பூநாதன்

யதார்த்தமான நடையில் தெற்கத்திய சிறுகதைகளின் தொகுப்பு. சகஜமான வார்த்தைகளில் கதையை நகர்த்துகிற லாகவம் தெரிகிறது. சிக்கலான உறவுமுறைக் கதைகளை இன்னும் தெளிவாகக் கூற முயற்சிப்பது நல்லது.

சப்தா பதிப்பகம், 747இ, 28வது தெரு, சாந்தி நகர், பாளையங்கோட்டை-2. விலை ரூ.35/-

— விஸ்வக்

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை

P.R. JEWELLERY

GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES

Old No. 102, New No. 138, USMAN ROAD,

T. NAGAR, CHENNAI - 600 017.

PH: 4344442, 4327764 TUESDAY HOUDAY

(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)

PROPRIETOR : P. RAVINDHIRAN

(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)

P.R. ஜுவல்லரியில் ராசிக்கல் மோதிரம் வாங்கி அணிந்துபயன்பெறுங்கள். ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 400/-

வெற்றிகரமான
17-ம் ஆண்டு துவக்க விழா
22.10.2002

தொடர்ந்து தங்களது பேராதரவை
நல்கிவரும் வாடிக்கையாளர்கள்
மற்றும் ஆதரவாளர்களுக்கு எமது
இதயங்கனிந்த நன்றி.

ராசிக்கல் மோதிரம் வாங்க
ராசியான கடை P.R.ஜுவல்லரி.
எங்கு ஜோதிடம் பார்த்தாலும் எங்களிடம்
வந்து ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம்
ரூ. 400/-க்கு வாங்கிப் பயன்பெறுங்கள்.
உடனடியாகக் கிடைக்கும். கல் ஒரிஜினல் என
முழு உத்திரவாதம் தருகிறோம். தங்கத்தில்
2 கிராம் முதல் 8 கிராம் வரை
ரூ. 1800/- முதல் ரூ. 5000/-ம் வரை
உடனடியாகக் கிடைக்கும். தபால்
எழுதினால் முழு விவர பாம்லட்
இலவசமாக அனுப்புகிறோம்.

முகவரி தெளிவாக எழுதவும்.

எமது சிறப்புப் பேட்டியை ராஜ் டீ.வியில் தினசரி காலை 6.55 மணிக்கு காணத் தவறாதீர்கள்.

இளசுகளின் டிமாண்ட்!





• ரோஹித்

இன்றைய இளசுகளை அதிகம் கவரும் சில மேட்டர்கள்: கோக், பெப்ஸி, ஜீன்ஸ், மியூசிக் சிஸ்டம், கூல், வீக் எண்ட், டேட்டிங், டிஸ்கோ, எம்.டி.வி., டி.ஜே. இப்படி.

டி.ஜே.?... என்று யாராவது கேட்டால் நீங்கள் இளமையைத் தாண்டி விட்டீர்கள் என்பதே அர்த்தம்!

பெங்களூருக்கு பப் ஸிட்டி (pub city) என்ற பெயரும் உண்டு. சனி, ஞாயிறு என்றால் இளசுகள் படையெடுப்பது டிஸ்கோவிற்கு. விடிய விடிய ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம். ஹைபிட்சில் மியூசிக். இங்குதான் டி.ஜேக்களுக்குச் சவால். இவர்கள் கொடுக்கும் மியூசிக்கில் அவர்கள் கட்டுண்டு ஆட வேண்டும். முக்கியமாக மிக்ஸிங் தெரிய வேண்டும்.

இந்தப் பணியில் பலர் பிரபலம் அடைந்துள்ளனர். மிகச் சிறிய வயதுடைய டி.ஜே. என்ற பெருமை பதினேழு வயதேயான ரோஹித்தைச் சேரும்.

"சொந்த முயற்சியாலும், இசை ஆர்வத்தினாலும் மட்டுமே என்னால் டி.ஜே. ஆக முடிந்தது. ஆனால் மிகச் சமீபத்தில் டி.ஜே. ஸ்கூல் ஒன்று தொடங்கப்பட்டிருக்கிறது. படித்துக் கொண்டே சம்பாதிக்க இது நல்ல வழிதானே" என்கிறார் ரோஹித்.

டி.ஜே. ஆக வேண்டும் என்ற வெறி உள்ளவர்களும் இருக்கிறார்கள். வேறு வேலை பார்த்துக் கொண்டு, ஆசைக்காக டி.ஜே.வாகி, பாக்கெட் மணிக்காகவும் வந்து போகிறார்கள்.

"இந்தத் துறை அப்படி ஒன்னும் சுலபமில்லை. பலதரப்பட்ட மியூசிக், மிக்ஸிங் எல்லாம் தெரிந்திருக்க வேண்டும். ஆடியன்ஸின் ரசனை, மூட் பார்த்துப் பாட்டுப் போட வேண்டும்" என்கிறார் ரோஹித்.

"அது சரி, இத்தனை சின்ன வயதில் க்ளப், டிஸ்கோ என்று அனுப்புகிறீர்களே, தடம் மாறி விடுவானோ என்கிற பயமில்லையா?" என ரோஹித்தின் பெற்றோரிடம் கேட்டால், "இசை என்பது நல்ல விஷயம்தானே. பல பேரை ஆட்டுவிக்கிறான். பலர் தங்கள் சோகத்தைச் சிறிது நேரமேனும் மறக்கிறார்களே. எங்கள் மகன் மேல் எங்களுக்கு நம்பிக்கையுண்டு. மியூசிக் போட்டாச்சுன்னா போதும், சகலத்தையும் மறந்துடுவான்" என்று இருவரும் டூயட் பாடினர்!

— லதா சேகர்

கள்ளச் சாராயத்துக்கு கல்தா!



தமிழக அரசின் 'காந்தி விருது' பெற்ற முதல் பெண் காவல் துறை அதிகாரி என்ற பெருமைக்குரியவர் மதுரை தல்லாகுளம் காவல்துறை உதவி ஆணையாளர் ஹேமா பிரமீளா கருணாகரன். எம்.ஏ, பி.எல் படித்துள்ள இவர் வக்கீலாகப் பணியாற்றி காவல் துறைக்கு வந்தவர்.

"நான் காவல் துறைக்கு வந்ததும் ஒரு விஷயத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டேன். குடும்பப் பிரச்னைகள், கணவன் மனைவி கருத்து வேறுபாடுகள், சண்டைகள் எல்லாம் கள்ளச் சாராயத்தின் காரணமாதான்னு தெரிஞ்சது. 99ஆம் ஆண்டிலிருந்து 2001 வரை இரண்டு ஆண்டுகள் மதுவிலக்கு பிரிவுக்கு மாற்றப்பட்டேன். கள்ளச் சாராயம்னு செய்தி வந்ததும் எந்த நேரமானாலும் நானே நேரடியாகப் போய்ப் பிடிப்பேன். பெரும்பாலான கள்ளச் சாராய கோஷ்டிகள் அரசியல் செல்வாக்குள்ள புள்ளிகளாக இருப்பார்கள். மேலிடத்திற்குத் தகவல் சொல்லித் தப்பிக்க நினைக்கிற அந்த கால அவகாசத்திற்குள்ளே கேஸைப் போட்டு கோர்ட்டுக்கு அனுப்பி விடுவேன். இரண்டு ஆண்டுகளில் மதுரைப் பகுதியில் கள்ளச் சாராயத்தை ஒழித்தேன். அதற்காகத்தான் 'காந்தி விருது' கொடுத்திருக்காங்க" என்கிறார் ஹேமா!

"பெரும்பாலான விவாகரத்து வழக்குகளில் விவாகரத்து ஆவதற்கு வக்கீல்களே காரணம். விவாகரத்து கோரும் கணவன் மனைவியைத் தனியே பேசவிட்டால் போதும், சேர்ந்து வாழ்ந்து விடுவார்கள். பெரும்பாலும் கணவனைப் பேச விடுவதே இல்லை. வக்கீல்தான் பேசுவார். கோர்ட்டில் பார்த்துக் கொள்ளலாம் என்பார். தன்னுடைய கட்சிக்காரர் தோற்று விடக் கூடாது என்பதற்காக விவாகரத்தும் வாங்கிக் கொடுத்து தம்பதியரைப் பிரித்து விடுவார்கள். நான் வக்கீல் தொழிலை விடுவதற்கு இதுவும் ஒரு காரணம். இப்போது எத்தனையோ தம்பதியரை 'கவுன்சிலிங்' பண்ணி சேர்ந்து வாழ வைத்திருக்கிறேன். உண்மையான வரதட்சணை கேஸாக இருந்தால் மட்டுமே வழக்குப் பதிவு செய்யவும், பிற பிரச்னைகளைப் பேசித் தீர்த்து வைக்கவும் தமிழக முதல்வர் விரும்புகிறார். 2004ம் ஆண்டிற்குள் 198 மகளிர் காவல் நிலையங்கள் திறக்க உள்ளார்கள். அந்த ஆலோசனைக் குழுவில் நானும் ஓர் உறுப்பினர்" என்று சொல்லும் ஹேமாவின் கணவர் கருணாகரன், தஞ்சை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்.

- கி. சிங்காரவடிவேல்

கதவில்லாத ஊரு!





• 'புத பெள்ளி நடு பச்சே கொனே முத்து' என்றொரு நாடகம். இதில் நடிக்கும் முப்பதுக்கும் மேற்பட்ட குழந்தைகள் வீட்டு வேலை செய்து கொண்டே அரசுப் பள்ளிகளில் படிப்பவர்கள். "மிடில் கிளாஸ், அப்பர் கிளாஸ் குழந்தைகளுக்கு எல்லாவற்றையும் கற்றுக் கொள்ள சந்தர்ப்பமிருக்கிறது. ஆனால் இந்தப் பிஞ்சு மனங்களிலும் ஆசை இருக்குமே. அதனால் தான் அவர்களுக்கு நாடகப் பயிற்சி கொடுத்து நடிக்க வைத்தேன்" என்கிறார் டாக்டர் பைரே கவுடா. இந்த நாடகத்தில் வேறொரு சிறப்பும் உண்டு. நாடகத்திற்காக, குழந்தைகள் அணிந்திருந்த உடைகள் அவர்களே தயாரித்தது. அதுவும் வேஸ்ட், உப யோக மற்றது என்று தூக்கியெறிந்த துணிகளைப் பொறுமையாகத் தைத்து, போட்டுக் கொண்டிருக்கின்றனராம். இதில் நடிக்கும் சௌபாக்யா என்ற பத்து வயதுச் சிறுமி ஏழாம் வகுப்பு படித்துக் கொண்டே வீட்டு வேலைக்குப் போகிறாள். கான்ஸரினால் தந்தை இறந்து விட, தாயைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு இச்சிறுமிக்கு. ஆறாம் வகுப்பு படிக்கும் லக்ஷ்மி தேவி பள்ளிக்குப் போவதற்கு முன்னால், ஒருவர் வீட்டில் இடுப்பொடிய எல்லா வேலையும் செய்து விட்டு, ஓடுகிறாள்.

• சித்தலிங்கையா என்றொரு சப்-இன்ஸ்பெக்டர். செம போதையில் பணிக்கு வந்திருக்கிறார். கன்னாபின்னாவென்று வாய்க்கு வந்தபடி ஆக்ரோஷமாக, ஆபாசமாக சக பணியாளர்களை வசைபாடியிருக்கிறார். சமாதானப்படுத்தியிருக்கிறார்கள். தாங்க முடியாது என்ற நிலைமைக்கு வந்தவுடன், குண்டு கட்டாகத் தூக்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடியிருக்கிறார்கள். ரத்தப் பரிசோதனை செய்ய வந்த டாக்டரை ஒரு வழி பண்ணி விட்டாராம். பிறகு மயக்க மருந்து கொடுத்து படுக்க வைத்திருக்கிறார்கள். விழிப்பு வந்தவுடன் போலீஸ் கமிஷனர் தம்மை சஸ்பெண்ட் பண்ணியிருப்பது தெரிந்து, மயக்க மருந்து இல்லாமலேயே மோன நிலைக்குப் போனது தனிக்கதை.

• வீட்டை விட்டு வெளியே போகும்போது சரியாகப் பூட்டியிருக்கிறோமா என்று பலருக்கும் சந்தேகம் வரும். ஆனால் கர்நாடகாவில் கடக் தாலுக்காவில் இருக்கும் 'தௌல் மல்லிக்கனகுட்டா' என்ற கிராமத்தில் அப்படி எந்த பயமும் கிடையாது! எந்த ஒரு வீட்டிற்குமே கதவு கிடையாது. இன்று வரை இங்கு எந்தத் திருட்டும், கொள்ளையும் நடந்தது கிடையாதாம். இந்த அதிசய கிராமத்தைப் பார்க்க, தர்காவை தரிசிக்க பல மாநிலங்களிலிருந்தும் ஜனங்கள் வருகை தருகிறார்களாம். என்ன பிஸினஸ் வேண்டுமானாலும் இங்கு செய்யலாம். கதவும், பூட்டும் பண்ணுகிற ஐடியா இருந்தால் மட்டும், தயவு செய்து அதற்குப் பெரிய பூட்டாகப் பூட்டி, சாவியை அரபிக் கடலில் எறியவும்!

— எல். எஸ்.

வாழப்பாடி என்ற மனிதாபிமானி



கடந்த 1996ம் வருடம் நடந்த சட்டமன்றத் தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணி ஆட்சி அமைத்த சமயம் அது. வாழப்பாடி தலைமையில் இருந்த திவாரி காங்கிரஸ், படுதோல்வி அடைந்து ரணங்களை ஆற்றிக் கொண்டிருந்தது. சாஸ்த்திரி நகரில் இருந்த வாழப்பாடியார் வீட்டு மாடி அறையின் வாசலை மாற்றி அமைத்தார்கள். 'வாஸ்துபடி வாசலை மாற்றி அமைத்திருக்கிறார் வாழப் பாடியார், இனியாவது அதிர்ஷ்டம் அவரது வீட்டுக் கதவைத் தட்டுமா?' என்ற ரீதியில் 'கல்கி'யில் எழுதியிருந்தோம்.

இந்தச் செய்தி வெளிவந்த அடுத்த சில தினங்களுக்குள் வாழப்பாடியாரைச் சந்திக்க வேண்டி வந்தது. "வாஸ்துவையும், வாசலையும் நம்பி இந்த வாழப்பாடி அரசியல் செய்யவில்லை. இதை (தலையைக் காட்டி) நம்பித்தான் அரசியல் செய் கிறேன்" என்றார் ஆவேசமாக நம்மிடம். ஆனால் பல்வேறு சமயங்களில் அவரது அரசியல் யுக்தி அவரைக் காலை வாரி விட்டதுதான் துரதிர்ஷ்டம்.

வாழப்பாடி ஒரு வெற்றிகரமான அரசியல்வாதியா இல்லையா என்பதில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் சிறந்த மனிதாபிமானி. ஒரு சமயம் சினிமா பத்திரிகையாளராக இருந்த பத்மராஜனுக்குச் சிறுநீரக மாற்றம் செய்ய வேண்டியதாக இருந்தது. பல நடிக, நடிகையர்களிடம் உதவி கேட்ட பின், அரசியல் தலைவர்களிடமும் கேட்டால் என்ன என்று சினிமா பத்திரிகையாளர்கள் குழு தீர்மானித்து அணுகியது. வாழப்பாடியைச் சந்தித்து விவரங்கள் சொன்னவுடன், கனமான கவரைக் கொண்டு வந்து கொடுத்தார். எண்ணிப் பார்த்தால் இருபதாயிரம் ரூபாய்...! இத்தனைக்கும் சம்பந்தப்பட்ட பத்திரிகையாளர் வாழப்பாடிக்கு அறிமுகம் கிடையாது.

இதுபோல பல சம்பவங்களைப் பட்டியலிடலாம். பத்திரிகையாளர்களுக்கு தகவல் உதவி செய்பவர் வாழப்பாடி. ரொம்ப நம்பிக்கையானவர்களுக்கு அவர் கைப்பற்றி வைத்திருக்கும் ரகசிய ஆவணங்களைக் கூடக் காட்டுவார். 'இதை ஏன் இவர் வைத்திருக்கிறார்' என்று நமக்கு குறுகுறுக்கும். எழுத்தில் கொண்டு வர முடியாத பல யதார்த்த உதாரணங்கள் விழுந்து கொண்டே இருக்கும். "என்ன ஸார், ரயிலுக்கு இன்னும் அரைமணிதான் இருக்கு.." என்று முதலில் சிணுங்கினாலும் பத்து நிமிடம் தொலைபேசியிலேயே வாழப்பாடியிடம் பேட்டி வாங்கி விட முடியும்.

தமிழக அரசியல் களம், அவ்வப்போது சூடு கிளப்பும் ஓர் அரசியல்வாதியை இழந்துவிட்டது.

— ப்ரியன்

காதல் பிசாசே!





போகும்போது
கூப்பிடக் கூடாதென்று
தயங்கி நிற்கிறாய்
கூப்பிட நினைத்து
மூச்சிரைக்க
ஓடி வருவாயோ என
திரும்பிப் பார்க்கிறது
என் காதல்

ஒரே நிமிடத்தில் அவனும் அவளும் சந்தித்துக் கொள்கையில் பொட்டு பொட்டாய் நெருப்பு முளைக்கத் தொடங்கும். அந்த நெருப்பின் வெளிச்சத்தை நிதானிப்பதற்குள் ஒளியின் சுவடுகள் ஓண்டி விடும். நெருப்பு மூண்டது போலவே தோணாமல் போகிற மன நிலையை, மெய் சிலிர்க்கும் நுட்பமே காதலில் விஷேசமானது.

பெண்களின் கண்களைப் பார்த்துப் போசாதவன் பித்தலாட்டக்காரன் என்பார்கள். பெண்களின் கண்களை மட்டுமே பார்த்துக் கொண்டிருப்பவனுக்கு என்ன பெயரோ தெரியவில்லை.

உற்று பார்த்து உணருகிற விஷயமா காதல். கண்களில் தென்படுமா ஆன்மாவின் ரேகை(?) என்றால் அகத்தின் அழகு முகத்தில் தெரியுமென்று ஒரு குரல் பின்னிருந்து காதை அடைக்கிறது. நீங்கள் கண்களைப் பார்த்துப் பேசுகிறவராய் இருப்பின் மிக மிக நல்லவர்கள். ஆண்களின் கண்களைப் பார்த்துப் பெண்களும் பேசுவீராக!

2

காதலின் நுழைவாயில் கண்கள்தான். கண்கள் ஒரு பள்ளத்தாக்கைப் போல. விழுந்தவன் எழுந்ததுமில்லை. எழுந்தவன் நிமிர்ந்ததுமில்லை. அப்படிப்பட்ட கண்களோடு ஒருத்தி, காதலனின் வருகையை ரசித்துக் கொண்டிருக்கிறாள். ரசிக்கத் தெரிந்த ஒவ்வொரு



யுகபாரதி

பெண்ணும் பேரழகிதான். பேரழகிகளை எப்போதும் இந்த பூமி ரசிக்கத் தவறியதில்லை.

அது பாண்டியநாடு. மாமன்னன் உலா வருகிறான். ராஜ படைகள் மலர் சூழ; ரத்தின மாலைகள் தோளாட; (உங்கள் கற்பனை எட்டியவரை விரித்துக் கொள்க) மதர்ந்த மார்போடு; நிமிர்ந்த பார்வையோடு பட்டத்துக் குதிரையில் பவனி வருகிறான். இவள் எங்கோ ஓர் உப்பரிகையில் நின்று கொண்டிருக்கிறாள்.

பார்க்க பார்க்க பற்றுகிறது தீ. பற்றும் தீ படர படர நாணிச் சிவக்கிறது மேனி: நளினம் பூசுகின்றன இமைகள். பாதமிடுகிறது கோலம்; வளையல் பாடுகிறது; உடையைச் சீண்டுவதுபோல செல்லமாய்க் காற்று ஊடுருவுகிறது. அவன் போய்க் கொண்டிருக்கிறான். இவள் மனசையும் எடுத்துக் கொண்டு.

நின்ற இடத்திலிருந்தபடியே இவளது கண்கள் அவனை நிழல் போல தொடர்கின்றன. அந்தக் கண்களை; தடித்து நீண்ட புஜங்களை, விரிந்த தோளைத் தீண்ட நீள்கிறது ஆசை. முடியுமா என்ன? அவனைத்தான் தொட இயலவில்லை அவன் சவாரி செய்கிற குதிரையையாவது தொட்டுப் பார்க்கத் துடிக்கிறாள். நாணமும் ஊரும் கேலி பேசுமோ என அஞ்சுகிறாள்.

ஊரே பார்த்திருக்க.. ஒருத்தி மட்டும் தவித்திருக்க... இயலாமை வாட்டி வதைக்க சுருண்டு விழுகிறாள் படுக்கையில். எட்டி நிற்பதே தன் பாக்கியமென்று எண்ணுகிறாள். என்றாலும், தொட்டுவிட மாட்டோமா? என துளிர்விடுகிறது இதயம்.

தானாகக் கனிகிற பழத்தின் சுவையே தனிதான். புகைமூட்டிக் கனிய வைத்தால் புளிப்பேறும். தானாகவே கனிந்த வயதில் அந்தப் பேரழகி பெருமூச்சில் குளிர் காய்ந்து கொள்கிறாள். ஆனாலும், ஆசை யாரை விட்டது?

இடைவெளிகள்தான்
நெருக்கத்தைத் தீர்மானிக்கின்றன
எனினும்

நெருக்கமற்ற இடைவெளிகள்
பிரயோஜனமற்றவை -

என்பதைப் போல அரசன் வந்த குதிரையின் காலடி மண்ணெடுத்து சந்தனத்தில் குழைத்து இள மார்பிலே பூசிக் கொள்ளட்டுமா? என பரபரக்கிறது தேகம். தனக்குத்தானே பேசி, ஆடி, பாடி, மகிழ்ந்து கொள்வதாக ஒரு பாட்டு. யானைப் பசிக்கு சோளப் பொறியாவது கிடைக்காதா என்பது மாதிரி.

ஆடுகோ! ஆடுகோ
ஜதாக் கலந்து கொண்(டு)
ஏடு கோடாக எழுதுகோ - நீடு
புனைவட்டப் பூந்தரியல்
பொற்றேர் வழுதி
கனவட்டம் கால்குடைந்த
நீறு!

(-11 - முத்தொள்ளாயிரம்)

கனவட்டம் என்றால் பட்டத்துக் குதிரையாம். முத்தொள்ளாயிரத்தில் மட்டுமல்ல எல்லா இலக்கியங்களும் கிரீடமாய் அகச்சுவைகளையே சூடிக் கொள்கின்றன.

காதலன் சவாரி செய்த குதிரையின் காலடி மண்ணே ஒருத்திக்கு இத்தனை மோகக் கிறுக்கை மூட்டுகிறதென்றால் அந்தக் காதலனே கிடைத்தால் என்ன ஆவாளோ? கொஞ்சிக் கொஞ்சியே கொன்று விடுவாளோ?

உங்கள் காதலிக்கு / காதலனுக்குப் பிடித்த ஒரு விஷயம் உங்களுக்குப் பிடிக்க வேண்டுமென்கிற கட்டாயமில்லை. ஆனால், உங்கள் அவருக்கு / அவளுக்குப் பிடிக்காத ஒன்று உங்களுக்குப் பிடித்துவிடக் கூடாது. பைத்தியமும்தான்.

அதே முத்தொள்ளாயிரத்தில் இன்னொரு காட்சி. உங்கள் வீட்டுக் கதவுகளின் தாழ்ப்பாள் உடைந்தோ, தேய்ந்தோ போயிருந்தால் இந்தப் பாட்டில் அதன் காரணத்தை யூகிக்கலாம். இது சேர நாட்டு சிலம்பிஷம்.

வயதுக்கு வந்த பெண்ணை வைத்துக் கொண்டு ஒரு தாய் என்னென்ன பாடு படுவாளோ அத்தனை பாடுகளும் அவள் படுகிறாள். அழகான ஆண்கள் வீட்டைக் கடக்கும்போது அடி நெஞ்சில் திக்கென்று கவ்வும் நவீன காலத்து தாய்களின் நிலைமை அன்றைக்கும் இருந்ததுபோல (இது மகள்களின் தவறா?)

நான்கு ஆண்கள்
ஒன்று கூடினால்
ஒரு பெண்ணின்
அந்தரங்கம்
பேசு பொருளாகிறது -

என்கிற கரிகாலனின் கவிதையாய் நான்கு பெண்கள் ஒன்று கூடும் சந்தர்ப்பங்களில் அந்த சேர மன்னன், சிறப்பாகக் கருதப்படுகிறவன், வீதியில் வருகிறான். தாய்க்கு நெற்றிப் பொட்டில் பட்டென்று வெடிக்கிறது பயம். வேக வேகமாய் வீட்டுக் கதவை மூடித் தாழிடுகிறாள்.

எதிர்பார்த்த மகளுக்கு ஏகத்துயரம். தாய் கொல்லைக்குப் போகிற நிமிடத்தில் கதவைத் திறக்கிறாள். மறுபடியும் தாய் வந்து தாழிடுகிறாள். தான் இவளொத்த வயதில் நடந்து கொண்டது நினைவுக்கு வருகிறது. சுவாரஸ்யம் கூடிவருகிறது காட்சியில். இவள் திறக்க... அவள் மூட.... அவள் மூட.... இவள் திறக்க... மன்னன் போய்விடுகிறான். கூடவே வீட்டுத் தாழ்ப்பாளும் நொறுங்கி விடுகிறது. மன்னன் உலா போனால் வீட்டுக் கதவுகள் தொலைந்து விடுகிற காலம் பொற்காலமில்லாமல் வேறென்ன?

தாயர் அடைப்ப
மகளிர் திறந்திட
தேயத் திரிந்த
குடுமியவே - ஆய்மலர்
வண்டுலா அம் கண்ணி
வயமான் தேர்க் கோதையைக்
கண்டுலா அம் வீதிக் கதவு

(55 / முத்தொள்ளாயிரம்)

கதவுகளற்ற வீடுகளோ காதலன் வசிப்பிடம். காதல் நுழையாத வீடு கல்லறைக்குச் சமம். தெலுங்கு அகநானூறு என போற்றப்படும் "கதா சப்த சதி"யிலும் இப்படித்தான் ஒருத்தி இன்னொருத்தியிடம்...


(தொடரும்)

"நான்கிலும் சாவு, நாற்பதிலும் சாவு..."

"பழமொழியை தப்பாச் சொல்றீங்க சிஸ்டர்."


"தப்பாச் சொல்லலே டாக்டர். ரூம் நம்பர் நான்கிலும், நாற்பதிலும் பேஷண்ட் அவுட்."

- ஜோசப் காமராஜ்



தண்ணீர்தான் உணவு!





வெறும் தண்ணீரை மட்டுமே உணவாக உட்கொண்டு உயிர் வாழ முடியுமா?

'ஏன் முடியாது' என்கிறார்கள் ஈரோடு மாவட்டம் கோபியில் தாய்த் தமிழ்ப் பள்ளி நடத்தி வரும் கமு. இனியவனும், கி. இளங்கோவனும்.

"கடந்த மார்ச் பதினாறாம் தேதியிலிருந்து இந்தத் தண்ணீர் உணவு முறையைப் பின்பற்றி வருகிறோம். துவக்க நாட்களில் தினசரி இருபத்தைந்து லிட்டர் தண்ணீரும், அரை கிலோ அரைவேக்காடு காய்கறிகளும் பயன்படுத்தினோம். இதில் தண்ணீரையும், காய்கறிகளையும் படிப்படியாகக் குறைத்துக் கொண்டு, கடந்த எழுபது நாட்களாகத் தண்ணீர் மட்டுமே அருந்தி வருகிறோம். இருபத்தைந்து லிட்டர் தண்ணீரில் ஆரம்பித்த இப்பழக்கம் இப்போது தினசரி ஆறு லிட்டர் தண்ணீர் அளவென வந்துள்ளது. சிறுநீர் மட்டுமே கழித்து வருகிறோம்" என்கிறார்கள்.

'நோயற்ற வாழ்வே நோக்கம்' எனக் கூறும் இவர்கள், இதற்கு முன்னர், கடந்த எட்டு ஆண்டுகளாக, இயற்கை உணவுகளான காய்கனிகளை மட்டுமே உண்டு வந்துள்ளனர்.

அது சரி. தண்ணீர் மட்டுமே அருந்தி வருவதால் இருந்த இடத்திலேயே சோம்பலாக அமர்ந்துள்ளார்களா என்றால் அதுதான் இல்லை. இனியன் தினசரி பத்து கிலோ மீட்டராவது சைக்கிள் ஓட்டி வருகிறார். இளங்கோவன் காலையில் எழுந்ததும் வயலில் விவசாய வேலைகளைப் பார்க்கச் சென்று விடுகிறார். அதன் பின்னர் இருவரும் தாய்த் தமிழ்ப் பள்ளிக்கு வந்து அலுவல்களைக் கவனித்துக் கொள்கின்றனர்.

இந்த ஏழு மாத கால அளவில் இருவரும் தங்கள் உடல் எடையில் பதினைந்து கிலோ குறைந்து காணப்படுகின்றனர். வெறும் தண்ணீரை மட்டுமே குடித்துக் கொண்டு ஒரு வார காலப் பயணம் மேற்கொண்டு மோட்டார் பைக்கில் சுமார் ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் சுற்றி வந்துள்ளனர் இருவரும்.

இந்த நீர் உணவு முறையைத் துவங்கிய தினத்திலிருந்து இவர்களது செயல்பாடுகளை நாள் தவறாமல் டைரி ஒன்றில் விவரமாக எழுதி வந்துள்ளனர். இந்திய மற்றும் அமெரிக்க விண்வெளி ஆய்வு மையங்களுக்கும், இவர்களது இந்த முயற்சியினைத் தெரியப் படுத்தியுள்ளனர்.

"வாயைக் கட்டினால் நோயைக் கட்டலாம் எனக் கூறுவதற்கு ஏற்ப வாழ்ந்து வருகிறோம். நாம் உட்கொள்ளும் உணவுதான் நமக்கு நஞ்சு. அதனைத் தவிர்த்தால் நோயின்றி வாழலாம். நீர் உணவு முறையை மேற்கொண்ட பிறகு உடல் முன்பை விடத் தற்பொழுது நன்றாகவே இருக்கின்றது. நாங்கள் இந்தத் தண்ணீர் உணவு முறையை மேற்கொண்ட பிறகு, எங்களைச் சந்தித்துப் போனவர்களில் இருபத்தைந்து நபர்கள் இப்பொழுது இதுபோன்ற தண்ணீர் உணவு முறையைக் கடைபிடித்து வருகின்றனர்!" என்கிறார்கள் இருவரும்.

— ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

நெஞ்சம் உண்டு...



"ஓடையூர் எல்லாம் இறங்குங்க... அது யாருய்யா ஓடையூர் வந்தா சொல்லச் சொன்னது? பச்சை சட்டை, ஓடையூர் வந்துருச்சு. இறங்கு..." என்று கண்டக்டர் சொல்ல, இறங்கினேன். என்னோடு இன்னும் இரண்டு கிராமத்து மனிதர்கள் இறங்கினார்கள். கூலிங்கிளாஸைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டு ஊரைப் பார்த்தேன்.

அந்த மாலை நேரம் பொன்னில் நனைத்த மாதிரி கிராமத்தை வெகு அழகாக ஆக்கியிருந்தது. சாலையில் சோளக் கதிர்கள் இறைந்து கிடந்தன. சோளத்தைக் காயப் போட்டிருந்தார்கள். ஓடையூரில் சோளம் நிறைய விளையும் என்று நண்பர் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. யாரிடம் விசாரிப்பது சண்முகத்தைப் பற்றி?

யாருக்காவது சண்முகத்தைத் தெரியுமா? நடந்தவாறு பைக்குள் கையை விட்டு அந்தச் சின்னக் காகிதத் துண்டை எடுத்தேன். பிரித்தேன். சண்முகம், வயது அறுபது. பணிபுரிவது வேலய்யா ரைஸ் மில்லில் என்று எழுதியிருந்தது. பஸ் ஸ்டாப்பை ஒட்டியிருந்த சின்னப் பெட்டிக்கடை அருகே சென்று, "வேலய்யா ரைஸ் மில் எங்கேயிருக்கு?" என்று கேட்டேன். கடைக்காரர் யோசித்தார். கடைக்குள் இருந்த இன்னொருவர், "அதாங்க செட்டியாரு ரைஸ் மில்லு" என்றார். "அப்படிக் கேளுங்க... வேலய்யா ரைஸ் மில்லுன்னா யாருக்குத் தெரியும்?" என்றவர்,

"நீங்க இப்படியே போங்க. ஒரு வாய்க்கால் வரும். வாய்க்காவுக்கு அந்தப் பக்கம் ரெண்டு மூணு ரைஸ் மில்லு இருக்கு. அதுல ஒண்ணுதான் செட்டியார் ரைஸ் மில்லு. அங்க போய் விசாரிச்சுக்கங்க" என்றார்.

நன்றி சொல்லிவிட்டு நடந்தேன். மணி ஐந்து. எப்படியும் ஆறு மணிக்குள்ளாகப் பேட்டி எடுத்து, இரவுக்குள் டவுனுக்குப் பஸ் ஏறினால், விடியலுக்குச் சென்னையில் இருக்கலாம். தினசரியோடு ஞாயிற்றுக்கிழமை இலவசமாக வரும் வார இதழில் இவரின் பேட்டியை வெளியிட்டு விடலாம். பேட்டி வெளிவருவது இருக்கட்டும். முதலில் இவர் எனக்குப் பேட்டி கொடுக்க வேண்டுமே...

ஏற்கெனவே இரண்டு மூன்று பத்திரிகைகாரர்கள் பேட்டி எடுக்கப் போன போது, யாரையும் பார்க்க முடியாது என்று அனுப்பி விட்டதாய் ஒரு தகவல். "அதனால் என்ன... அதே மாதிரிதான் இப்பவும் முடியாதுன்னு சொல்வார்ன்னு ஏன் நினைக்கிறே,... அதெல்லாம் கொடுப்பார். அவங்களுக்குக் கிடைக்காத ஒரு வாய்ப்பு நமக்குக் கிடைக்கலாம்" என்று ஆசிரியர் நம்பிக்கையுடன் சொல்லியிருந்தார்.

சண்முகம் முன்னாள் தீவிரவாதி. நக்ஸலைட். கிட்டத்தட்ட பதினான்கு வருடங்கள் சிறையில் இருந்துவிட்டு வெளியே வந்தவர். ஒரு முன்னாள் தீவிரவாதியின் இன்னாள் வாழ்க்கை எவ்விதம் உள்ளது

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட வைட்டமின் சிறுகதை - 10



என்பதைக் கண்டு தீவிரவாதியிடம் பேட்டி எடுக்க வேண்டும். இப்போது தீவிரவாதிகளின் காலம். தீவிரவாதிகளைப் பற்றியச் செய்திகளை வெளியிட வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமோ என்னவோ?

யோகி

சண்முகம் விடுதலையாகி நாலைந்து வருடங்கள் ஆகி விட்டன. அவரைப் பற்றி யாருக்கும் எதுவும் தெரியாமல்தான் இருந்தது. சில மாதங்கள் இந்தப் பகுதியில் நடந்த ஜாதி மோதலின் போது, அமைதி வேண்டி இப் பகுதி மக்கள் பலரும் தங்கள் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்கள். அப்போது இந்த சண்முகம், முன்னாள் தீவிரவாதி என்ற அறிமுகத்தோடு "வன்முறையால் யாரும் எதையும் பெற முடியாது. இருக்கும் கொஞ்சநஞ்ச நிம்மதியையும் பிறகு இழந்து விடுவோம். அனுபவப்பட்டவன் என்பதால் இதைச் சொல்கிறேன். எல்லா சமூக மக்களும் இதை உணர வேண்டும்" என்கிற ரீதியில் பேசியிருந்தார்.

யார் இந்த முன்னாள் தீவிரவாதி என்று சில பத்திரிகைகள் மோப்பம் பிடித்து, சண்முகத்தை நெருங்கி பேட்டி எடுக்க முனைந்தன. பேட்டி தர மறுத்து விட்டார். இப்போது என் முறை!

பெட்டிக்கடைப் பெரியவர் சொன்ன வாய்க்கால் வந்தது. சின்னப் பாலம். பாலத்தைக் கடந்தேன். வாய்க்காலை ஒட்டி மில்கள். வரிசையாய்ப் புகை போக்கிகள். ஒரு ரைஸ் மில் முன்னால் நின்றேன். எந்த ரைஸ் மில்லிலும் பெயர்ப் பலகை இல்லை. ரைஸ் மில்லில் இருந்து வந்த ஒருவரிடம், "செட்டியார் ரைஸ் மில்லு எது?" என்று கேட்டேன். "அந்தக் கடைசி ரைஸ் மில்லு."

"வேலய்யா ரைஸ் மில்லுங்கிறதும் அதானே...?"

"ஆமா ரெண்டும் ஒண்ணுதான்."

கடைசியில் இருந்த ரைஸ் மில்லை நோக்கி நடந்தேன். திடீரென்று ஏதோ ஒரு இம்சை

உன்னுக்குள் தோன்றியது. தீவிரவாதியைச் சந்திக்கப் போவது குறித்த பயமா...?

பயமா.... எனக்கா... எப்படிப்பட்ட கலவரமான பகுதிகளுக்கெல்லாம் போய் இருக்கும் எனக்கென்ன பயம்? இந்த ஏகாந்த நிலை ஒரு மாதிரியாய் இருந்தது. நகரத்தில் அமைதியற்ற சூழலில், சப்தங்களுக்கு நடுவே வளர்ந்தபடியால், இந்த இயல்பான நேர்மையான அமைதி கூட அச்சத்தை உண்டு பண்ணுகிறதோ?

கடைசியாய் இருந்த ரைஸ் மில் முன் சென்றேன். யாரோ ஒருவர் வாசலில் நின்றிருந்தார். உள்ளே நிறையப் பேர் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். இருப்பதிலேயே பெரிய ரைஸ் மில் இதுதான். "சார்... இங்கேதானே சண்முகம்ங்கிறவர் வேலை பார்க்கிறார்..."

"ஆமா நீங்க யாரு?"

"நான் பத்திரிகையிலிருந்து வரேன். அவரைப் பார்க்கணும்."

"பத்திரிகையா?" என்று அலட்சியமாய்க் கேட்டார். அடிக்கடி யாராவது இப்படி வந்து போய்க் கொண்டிருக்க வேண்டும் போலும். பத்திரிகை பெரிய விஷயமாய் அவருக்குத் தோன்றவில்லை. "உங்களை மாதிரி சிலர் வர்றாங்க. சண்முகம் அய்யா யாரையும் பார்க்க மாட்டாரு" என்றார்.

"இல்லேங்க... பார்க்கணும். யாருக்கும் தொந்தரவு கொடுக்காம, எவ்வளவு சீக்கிரத்துல பார்த்துட்டுப் போக முடியுமோ, அவ்வளவு சீக்கிரத்துல பார்த்துட்டுப் போயிடுறேன். சென்னையில் இருந்து வந்திருக்கேன்" என்றதும் அவர் மனசு இலேசாக இளகியது.

"இருங்க வரேன்..." என்று உள்ளே போனார். கொஞ்ச நேரத்தில வந்தார். "வாங்க!" என்று உள்ளே கூட்டிப் போனார்.

ஒரு ஸ்டூலுக்குக் கீழே காலை நீட்டிக் கொண்டு ஒருவர் கணக்கு எழுதிக் கொண்டிருந்தார். அவர் மட்டும்தான் அந்த அறையில் இருந்தார். அவர்தான் சண்முகமா... ரொம்பவும் மெலிந்து காணப்பட்டார். நெற்றியில் விபூதி. விபூதிக்கு நடுவே குங்குமம். சப்தம் கேட்டு நிமிர்ந்தார். தலைமுழுக்க நரைத்த முடி. ஆனால் துளிக்கூட வழுக்கை விழாமல் இருந்தது. முடி சிலிர்த்துக் கொண்டு நின்றது.

"நீங்கதான் பத்திரிகையில் இருந்து வந்திங்களா?"

"ஆமா சார்."

"தம்பி சொல்லுங்க. யாருக்கும் சிரமம் கொடுக்காம கொஞ்ச நேரத்துல பார்த்துட்டுப் போயிடுறேன்னு சொன்னீங்

> "குப்புசாமி நேத்து உங்க முன்னாலே கையைக் கட்டிப் பரிதாபமா நின்னு கெஞ்சினானே... என்னடா...?"
>
> "ஆமா... போக்கத்தவன்... கொடுத்த கடனைத் திருப்பிக்கேட்கிறான்..."
>
> — டி. மோகன்


களாமே... சிரமம் கொடுக்கக் கூடாதுன்னு நீங்க சொன்ன அந்த ஒரு வார்த்தைதான் உங்களைப் பார்க்கும்படி தூண்டுச்சு. அதோடு உங்க பத்திரிகை நிஜமாகவே தேச நலனுக்காகவே உழைக்கிற பத்திரிகை. அந்தப் பாரம்பரியத்துல வந்த பத்திரிகை. நம்ம பேட்டியக் காசாக்க முயலுற பத்திரிகையும் இருக்கு. பரபரப்புக்காக வெளியிடுகிற பத்திரிகையும் இருக்கு. நீங்க அப்படி இல்லே. அதனாலும் பார்க்க நினைச்சேன்" என்றவர், "உட்காருங்க" என்று பக்கத்தில் இருந்த பலகையைப் போட்டார். அந்த அறையில் மின்விசிறி இருந்தது. ஆனால் இயங்கவில்லை. எனக்கு வியர்ப்பதைப் பார்த்து அவராக எழுந்து, மின்விசிறியை இயக்கினார்.

கண்களை மூடிக் கொண்டார். கொஞ்ச நேரம் போகட்டும், பேசலாம் என்று இருந்தேன். பிறகு அவராகவே, "என்னைப் பத்தி என்ன தெரிஞ்சுக்கணும்... ஏன் நா உங்களையெல்லாம் பார்க்க விரும்பறது இல்லைன்னா, உங்ககிட்ட நா பேசும்போது பழசை ஞாபகப்படுத்தித்தான் பேசணும். பழசை நான் ஞாபகப்படுத்திக்க விரும்பலை. அந்த வாழ்க்கையை முற்றிலும் நான் மறக்க விரும்பறேன். எத்தனை எத்தனை சாவுகள், ரத்தக்களறிகள்... கொடுமைகள், வேண்டாம் சாமி" என்று தலையைக் குனிந்து கொண்டார்.

"நா அதுபத்தி கேட்க விரும்பல. உங்கள் பிள்ளைப்பிராயம், பள்ளிப் பிராயம்... தீவிரவாத இயக்கத்தில் சேர்ந்தது எப்போது, பிறகு அதிலிருந்து மீண்டது எப்போது... உங்க சிறை வாழ்க்கை..."

"எல்லாத்தையும் சொல்றேன் தம்பி" என்றார். "சார்... உங்க வேலை நேரத்துல உங்களுக்கு இடைஞ்சலா வந்து இருக்கேனா... உங்களுக்குத் தொந்தரவு தர்றேன்னா..."

"இல்ல தம்பி. மதியம் வரைதான் எனக்கு வேலை. மதியத்துக்கு மேல் வேலை இல்ல. ஆனா எனக்குப் போக்கிடம் இல்ல. இங்கே



யேதான் படுத்துக்கறது. இங்கேயேதான் சாப்பாடு!"

"குடும்பம் இல்லையா சார்.."

"இருக்கு... நா அவங்களுக்கு எதுவும் ஒரு கடமையாவோ, இல்ல பாசமாகவோ செய்ய லையே. குடும்பத்தை விட்டுட்டு தலை மறைவு வாழ்க்கை.. அவங்களுக்கு இன்னிக்கு பாரமா இருக்க விரும்பல. அதோட, என் புள்ளைங்க என்னைச் சேர்த்துக்க மாட் டேன்னுட்டாங்க. ஒரு தீவிரவாதியா இருந்த என்னை அவங்க விரும்பல. இன்னிக்கு எல்லோரும் நல்லா இருக்காங்க. என்னால் அவங்களோட சந்தோஷத்துக்குப் பங்கம் வர வேண்டாம்னு நினைச்சு, நா ஒதுங்கியே இருக்கேன். நா செத்துப் போனா மட்டும் வரட்டும். அவங்கவங்களுக்கு ஆயிரம் வேலை!"

"மனைவி?.."

"இருக்காங்க. தன் பிள்ளைங்களோட இருக்காங்க. என் கூடவே இருக்க விரும்பி னாங்க. நாந்தான் பிள்ளைங்கக்கூடவே இருக் கச் சொன்னேன். பிள்ளைங்கள வளர்க்க ரொம்பக் கஷ்டப்பட்டாங்க இப்ப புள் ளைங்க நல்லா இருக்கும் போது, புள்ளைங் களோட இருந்து சந்தோஷத்தை அனுபவிக் கட்டுமே... என்னால் அவங்களுக்கு எந்த காலத்துலயும் எந்த பிரயோஜனமும் இல்ல. நான் பதினைஞ்சு வருஷம் ஜெயில்லே இருந் தேன். பதினைஞ்சு வருஷமா அரும்பாடு பட்டு குழந்தைகளை வளர்த்தா. ரெண்டு பசங்க. ஒரு பொண்ணு. கல்யாணம் பண்ணிக் குழந்தை எல்லாம் பெத்துக்கிட்ட பின்தான் தீவிரவாத இயக்கத்துல சேர்ந் தேன். எவ்வளவு பெரிய முட்டாள் நான். வீடு, பொண்டாட்டி, பிள்ளைங்களப் பத்தி உணராம, நா உழைக்கும் வர்க்கத்தைக் காப் பாத்தப் போறேன்னு ஆயுதத்தைத் தூக்கி னேன். அன்றிலிருந்து என் மனைவிக்குத் துயரம்தான். யாருக்கும் பிரயோஜனம் இல்லாம வாழ்ந்திருக்கேன்!"

"எது உங்களைத் தீவிரவாத இயக்கத்துல சேரும்படி தூண்டியது?"

"எல்லாமே. அப்போ அவங்க பேச்செல் லாம் அதிசயமா இருந்தது. இவங்க என் னவோ செய்யப் போறாங்கன்னு தோணுச்சு. என்னை ஈர்த்தது. என்னை மாதிரியே பல இளைஞர்கள் தீவிரவாதிகளானோம். நாலைந்து வருஷம் இந்தப் பிராந்தியத்தில் நாங்கள் - அரசாங்கத்தையே கதிகலங்கச் செய்தோம். பணக்காரர்களையும், எங்கள் சொல் பேச்சு கேட்காதவர்களையும் கொன்று குவித்தோம். அப்போது பத்துப் பதினைஞ்சு கிராமங்கள் எங்கள் ஆளுமை யின் கீழ் இருந்தது. அதோ தெரியுதே கொண்டை மலை.. அந்த மலை நாங்க பதுங்கி வாழத் தோதா இருந்தது. பொம் பளையோட கொண்டை மாதிரி இருக்கும் அந்த மலை. அதனால் கொண்டை மலைன்னு பேரு வந்துச்சு" என்றார்.

ஜன்னல் வழியே அந்த மலை தெரிந்தது.

"நேருக்கு நேரா போலீசைச் சுட்டுக் கொன்னு இருக்கோம். இந்த பத்து, பதி னைஞ்சு கிராமம் நூறு இருநூறா மாறும். அப்புறம் அது ஆயிரம் ரெண்டாயிரமா மாறும். ஒருநாள் இந்தத் தமிழகமே எங்க கையில், என்றெல்லாம் கற்பனை பண்ணி னோம். தலைவர்களால் மூளைச்சலவை செய்யப்பட்டோம். ஆனா மக்கள் என்ன விரும்பினாங்க... நிம்மதிய... அடிமைகளா இருந்தாலும் பரவாயில்ல. துப்பாக்கிக் குண்டு வெடிக்காம, வன்முறை இல்லாம வாழ ஆசைப்பட்டாங்க. எங்க நோக்கம் என் னன்னு தெரியாமலே ஆயுதங்களை எடுத் தோம். அறிவு தெளிவா இருந்திருந்தா, நா ஏன் குடும்பத்தை விட்டு வர்றேன். அதுல இருந்து தப்பிக்க இதுக்கு வந்தேன் போலும். மக்கள் ஆதரவு இல்லாத எந்தப் போராட் டமும் ஜெயிக்காது. எங்களுக்கு மக்கள் தந்த ஆதரவு குறையத் தொடங்கியது. அவங்க சலிப்படைஞ்சிட்டாங்க. நாங்க செய்யறதை எல்லாம் செஞ்சிட்டு தலைமறைவாயிடு வோம். ஆனா பாவம் மக்கள்தானே போலீஸ் கிட்ட வதைப்படுவாங்க.."

"போலீஸாரின் ஒரு மூர்க்கத்தனமான தேடுதல் வேட்டையில் நாங்க பிடிபட்டோம். எங்க கண் முன்னாலேயே தலைவரைப் போலீஸ் சுட்டுக் கொன்னாங்க. பழிக்குப் பழி தீர்த்துட்டாங்க. தலைவர் இறந்து போக, இயக்கமும் தடைசெய்யப்பட்டது. நாள டைவில் அழிஞ்சு போச்சு. பிடிபட்டவங்க சிறையில். பிடிபடாதவங்க தங்கள் வாழ்க் கையை மாத்திக்கிட்டாங்க. எதுவும் நிரந்தரம்

'ஹரிகதை'ப் பள்ளி!

சென்னையில் சென்ற ஆண்டு நடைபெற்ற ஹரிகதை நிகழ்ச்சிகளின் போது, இக் கலையிலிருந்து தாம் ஓய்வு பெறப் போவதாகச் சொல்லியிருந்தார் கல்யாணபுரம் ஆராவமுதன்.



• வகுப்பு



• கல்யாணபுரம் ஆராவமுதன்.

இச் செய்தியை அடுத்து 'ஹரிகதை' என்கிற அரிய கலைக்குப் புத்துயிர் அளிக்கும் வகையில், ஸ்ரீரங்கம், ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமத்தில் அமைந்திருக்கும் வேத பாடசாலையில் ஹரி கதை பயிற்சி வகுப்புகள் துவங்கப்பட்டிருக்கிறது. பாடசாலையின் அறுபத்தி நான்கு மாணவர்களில் பதினான்கு பேர் துவக்க நாளன்றே தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டு ஹரிகதை வகுப்பில் ஆஜரானது ஒரு நல்ல செய்தி.

''தமிழகத்தில் ஹரிகதை என்பது முற்றிலும் அழிந்து விடுமோ என்கிற பெருங்கவலை என்னை ஆட்கொண்டிருந்தது. ஆண்டவன் ஸ்வாமிகளின் திருவுள்ளத்தினால் அக் கவலை அகன்று விட்டது. ஆர்வமாக மாணவர்கள் சேர்ந்துள்ளது மகிழ்ச்சியைத் தருகிறது. ஸ்ரீரங்கத்தில் மட்டுமின்றி, சென்னை ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமத்திலும் பகுதி நேர வகுப்பில் ஹரிகதை சொல்லித்தர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன!'' என்கிறார் கல்யாணபுரம் ஆராவமுதன்.

கட்டுரை: ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

படங்கள்: லோட்டஸ் சுரேஷ்

இல்லையே. ஜெயில்ல இருந்து வந்தபின் யாரையும் பார்க்க விரும்பலை...''

''பையன் போலீஸ்ல வேலை பார்க்கிறான். சின்னவன் தனியார் நிறுவனத்துல பணியில் இருக்கான். வீடு நம்மைச் சேர்த்துக் காதுன்னு தெரிஞ்சதும் வேலை தேடினேன். என்னைப் பத்தி தெரிஞ்ச யாரும் எனக்கு வேலை தரலை. கடைசியா இவர் வேலை கொடுத்தார். நா நேத்து வரை தப்பான வாழ்க்கை வாழ்ந்தேனான்னு எனக்குத் தெரியாது. அன்னிக்கு அது சரியாப்பட்டது. அவ்வளவுதான்'' என்று மொத்தமாய்ப் பேசி விட்டது போன்று மௌனமானார். தன் மனசில் இருப்பதை எல்லாம் கொட்ட, அவர் யாரையாவது தேடி இருக்க வேண்டும் போலும்..

அப்போது ஒருவர் அந்த அறைக்குள் நுழைந்தார். சண்முகம் உடனடியாக எழ முயற்சித்தார். ''இருக்கட்டும் உட்காருங்க..'' என்றவர் என் பக்கம் திரும்பினார். வந்தவர் துண்டு அணிந்திருந்தார். அவர் துண்டு அணிந்திருந்த விதம் வித்தியாசமாய் இருந்தது. ''இவர் பத்திரிகையில் இருந்து வந்திருக்கார்'' என்ற சண்முகம் என் பக்கம் திரும்பி, ''அய்யாவோட ரைஸ் மில்லுதான் இது. எங்க முதலாளி'' என்று எழுந்த சண்முகம், தன் முதலாளியின் அருகே சென்றார். ''தம்பி... நா இப்போ சொல்வதை உங்க பத்திரிகையில் அவசியம் எழுதுங்க..'' என்றவர் தன் முதலாளியின் துண்டை இழுத்தார்.

இடதுபக்கம் சட்டைக் கை தொளதொளவென்று ஆடியது. தோள்பட்டைக்குக் கீழ் கை வெட்டுப்பட்டிருந்தது. கை இல்லை என்பதை உணர முடிந்தது. ''என்னப்பா இதையெல்லாம் காட்டிட்டு...'' என்று முதலாளி துண்டைச் சரிசெய்தார்.

''இவருக்கு இடது கை இல்லை. ஏழைகளைச் சுரண்டறார்னு இவரது கையை வெட்டினதே நான்தான். நல்ல மனிதர். ஆனா யார் எப்படின்னு தெரியாம அந்தப் பாவத்தைச் செஞ்சேன். இன்னிக்கு அவர்தான் சோறு போடுறார்'' என்று கண்ணீர் சிந்தினார்.

மனசு கனமானது. முதலாளி இலேசாய்ச் சிரித்தார். 'விடுய்யா. எதுக்குப் பழசையெல்லாம் பேசிட்டு'' என்றார்.

தி.மு.க. கதவைத் தட்டும் ம.தி.மு.க.!





"உடல்நலமில்லாமல் இருக்கும் மத்திய அமைச்சர் மாறன் குணமடைய, வை.கோ தந்தி கொடுத்தது, மகன், மற்றும் மனைவியை அனுப்பி விசாரித்தது, துரைமுருகன் வைகோவைச் சிறையில் சந்தித்தது, போன்ற நிகழ்வுகள், தி.மு.க.வுடன், ம.தி.மு.க. நெருங்கி வந்து விட்டதோ என்று அரசியல் வட்டாரத்தைப் பேச வைத்து விட்டன. "அ.தி.மு.க.வுடன் இனி எந்தக் காலத்திலும் ம.தி.மு.க. கூட்டணி வைத்துக் கொள்ள முடியாது; எனவே அறிவாலயக் கதவைத் தட்டுகிறார் போலும்" என்கிறார் ஒரு தி.மு.க. மாவட்டச் செயலாளர். "கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக தில்லித் தொடர்பில் இருந்து வரும் வைகோ போன்ற துடிப்பான தலைவருடைய துணை, ஜெயலலிதாவை எதிர்க்கும் நடவடிக்கைகளில் தி.மு.க.வுக்கு இன்னமும் வலுவைக் கூட்டும்" என்கிறார் ஒரு ம.தி.மு.க. பிரமுகர். தி.மு.க. இளைஞரணி, வை.கோ., விவகாரத்தை உற்றுநோக்கி வருகிறது.

மூப்பனார், வாழப்பாடி ஆகியோர் தங்களது ஆக்ரோஷமான கோஷ்டி மோதலில் காங்கிரஸை கலக்கியவர்கள். அவர்கள் மறைந்த நிலையில் இப்போது அது இளைய தலைமுறைக்குக் குடி பெயர்ந்திருக்கிறது. தமிழ்நாடு காங்கிரஸில் இப்போதுள்ள கோஷ்டிகள் இரண்டு. ஒன்று வாசன்; மற்றொன்று இளங்கோவன். காங்கிரஸில் இருக்கும் சில்லறைத் தலைகள் த.மா.கா. கோஷ்டியைக் கூட்டமாக எதிர்க்க, இளங்கோவனுக்குப் பின்னால் அணிவகுக்கத் துவங்கி விட்டார்கள். ஆனால், அப்பாவைப் பின்பற்றி தில்லியில் அட்டகாசமாக பாலிடிக்ஸ் செய்கிறார் வாசன். அப்பாவின் பழைய நண்பர்களின் துணையோடு, இது வரை தனது விருப்பங்களுக்கு ஏற்ப சோனியாவைச் செயல்பட வைத்துவிட்டார் வாசன், என்கிறார்கள். விசுவாசமிக்க காங்கிரஸ்காரர்கள் ஒதுக்கப்படுவதைக் கண்டு ஒன்றும் செய்ய முடியாமல் முழிக்கிறார் இளங்கோவன். அவருக்கு தில்லியில் தேவை 'காட்ஃபாதர்' தீபாவளிக்குப் பின் நிர்வாகிகள் பட்டியலை வெளியிடும் சமயத்தில் கதர்ச் சட்டைகள் கைகலப்பு சாத்தியமே என்கிறார்கள்.

— சஞ்சயன்

உத்வர்த்தனம் மஸாஜ்!

சமீபத்தில் ஒரு சுவாரசியமான கேஸ் வந்தது. அந்த இளம் பெண்ணின் பெயர் சித்ரா. பெயருக்கு ஏற்ப சித்திரம் போலவே இருந்தாள். அவளது தாயாருடன் என்னைப் பார்க்க வந்திருந்தாள். நாடியைப்.பிடித்து, நோயாளியின் அவஸ்தையைக் கேட்டதுமே என்ன பிரச்னை என்று தெளிவாகிவிட்டது. சித்ராவுக்கு 'உதாவர்த்த யோனி' என்ற நோய் ஏற்பட்டிருந்தது.

உதாவர்த்த யோனி என்பது, மாதவிடாய் சமயத்தில் ஏற்படுகின்ற கடும் வலி. 'spasmodic dysmenorrhoea' என்று சொல்லப்படும் இந்த நோய், அபானவாயுவின் சீர்கேட்டால் நேருகிறது. ஆனால் சித்ராவோ, மிகவும் பயந்துவிட்டிருந்தாள்.

"இடுப்பு, அடி வயிறு, கைகால் எல்லாமே கடுமையாக வலிக்கிறது" என்கிறாள். "வலி நிவாரணி போட்டாலும் பிரயோஜனமில்லை. கர்ப்பப்பையில் ஏதேனும் கோளாறாக இருக்குமா? திருமணம் நிச்சயம் செய்திருக்கிறோம். பின்னாளில் பிரச்னை வருமோ என்று பயப்படுகிறாள்" என்று அம்மாவும் பதற்றப்பட்டார்.


அந்தப் பெண் சாப்பிட்ட மருந்து மாத்திரைகளைப் பார்த்தால், எனக்கே தலை சுற்றியது. அத்தனை தினுசு.

சித்ராவுக்கு, நல்லெண்ணெய், பூண்டு சிகிச்சை நல்லபலன் தர முடியும் என்று எடுத்துச் சொன்னேன். அதன்படி, நல்லெண்ணெயில், சில பற்கள் பூண்டு போட்டு, சூடாக்கி, தொப்புளுக்கு அடியில் தேய்த்து, குளிக்கச் சொன்னோம். பதினைந்து நாட்களுக்குப் பிறகு, அப்யங்க ஸ்நானம், பூண்டு, ஆமணக்கு எண்ணெய் கலந்து தயாரிக்கப்பட்ட, எண்ணெயை, தினமும் ஒரு ஸ்பூன் காலை, வெறும் வயிற்றில் வெந்நீருடன் சாப்பிடக் கொடுத்தோம். இவ்வாறு தொடர்ந்து சாப்பிட்டு, எண்ணெய்க் குளியலும் எடுக்கவே, சித்ராவுக்கு யோனி ரோகம் குணமானது. அதனால் தான், பெண்கள் கண்டிப்பாக, 'அப்யங்க ஸ்நானம்' செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

ரொம்பப் பரபரப்பா உள்ளவங்களும், ஸ்ட்ரெஸ் உண்டாகி அவதிப்படறவங்களும், வீட்டிலேயே அப்யங்க ஸ்நானம் பண்ணிக்கலாம். மஸாஜ் சென்டருக்கு எல்லாம் போக வேண்டிய அவசியமில்லை. இதைத் தவறாமல் பண்ணினால் ஆர்த்ரைடிஸ் மாதிரியான நோய்கள் எல்லாம் வராது. நல்ல தூக்கத்தைத் தரும். தூக்க மாத்திரை எல்லாம் போட்டுப் பழக்க வேண்டாம். ராத்திரி சில சொட்டுக்கள் தேங்காய் எண்ணெய் எடுத்து பாதத்திலும், சிரஸ்ஸிலும் 'அப்யங்கம்' பண்ணிக்கிட்டா அமைதியான தூக்கம் வரும்.

"தூக்கமே இல்லை டாக்டர்.."ன்னு நிறையப் பேர் என்கிட்டே வருவதுண்டு. அவங்களுக்கு க்ஷீர பலா'ன்னு ஒரு தைலம் கொடுத்து, பயன்படுத்தச் சொல்வேன். ஒரு பத்து சொட்டு எடுத்துத் தலையிலும், பாதத்திலும் தேய்ச்சு விட்டா, சுகமாகத் தூக்கம் வரும். பக்க விளைவுகள் எதுவுமில்லை.பார்வைக் கோளாறு, கண் நோய் எதுவும் இல்லாமல் இருப்பதற்குக் காரணமே, இந்த அஞ்சனமிடும் (மை இடுதல்) முறையும், அப்யங்கமும்தான்.

கபம் கூடி குண்டாக இருப்பவர்கள் இருக்கிறார்கள். இத்தகையவர்கள் எண்ணெயைவிட, டிரை பௌடர்களை வைத்து மஸாஜ் செய்து கொள்வது நல்லது. கொழுப்பைக் குறைக்கக்கூடிய ஆற்றல் உண்டு. இந்தச் சிகிச்சை முறைக்கு



'உத்வர்த்தனம்' என்று பெயர்.

உத்வர்த்தனம் என்பது, குறிப்பிட்ட சில தானியங்களை, வறுத்து, பொடித்து செய்யக்கூடிய மஸாஜ். கொள்ளை, வறுத்து இலேசாகப் பொடித்து, அதைக் கீழிருந்து மேலாகத் தேய்க்கணும்.

பொதுவாக, எண்ணெய் தேய்க்கும்போது, மேலிருந்து கீழாகத் தேய்ப்பதுதான் சரி. மேலிருந்து கீழே தடவுவது வாதத்துக்கு நல்லது. கபத்துக்கு நேர்மாறாக, கீழிருந்து மேலாக, தடவணும் இருபது நிமிடம். தினமும் தேய்த்தால் உடல் எடை குறையும்.

அடுத்தது குளியல் (ஸ்நானம்) என்பது உள்ளும் புறமும் தூய்மையாக இருக்கணும் என்பது நியதி. வெளியிலே சுத்தி பண்றது என்பது குளிக்கிறதுதான். ஆற்றங்கரை மாதிரியான இடத்திலே குளிக்கணும். ஆனால் சென்னை மாதிரியான இடத்திலே, தண்ணீரைக் காசு கொடுத்து வாங்கிக் குளிக்க வேண்டியிருக்கு. உப்புத் தண்ணியா இருந்தால், தலை முடி கொட்டுகிறது.

தினமும் குளிப்பதால், உடல் சுத்தமாகும். மனம் சுத்தமாகும். மனம் சுத்தமானால், உற்சாகம் வரும். களைப்பு நீங்கும். பசி வரும். சுக்ல தாது விருத்தியாகும். ஆயுள் வளரும்.


கண் நோய், முக நோய், பீனஸம், வயிற்றுப் போக்கு, அஜீரணம் போன்றவை இருப்பவர்கள் தலைக் குளிக்கக்கூடாது. ஒரு சிலர் சாப்பிட்ட பிறகு குளிப்பார்கள். இதுவும் தவறான பழக்கம். அப்படிச் செய்தால், கபத்தை உருவாக்கி, அல்லது கபத்தைக் கூட்டச் செய்து, கப நோய்கள் உண்டாக்கும். பொதுவா, எண்ணெய் தேய்ச்சு குளிக்கிறது நல்ல பழக்கம்தான் என்றாலும், ஒரு சிலர் எண்ணெயைத் தேய்த்துக் குளிக்கக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இருமல், காய்ச்சல், சளி, வயிற்றுப் போக்கு, கபம் கூடியிருக்கும் சமயங்கள், மாதவிடாய்க் காலங்கள் போன்ற சமயங்களில் எண்ணெய் தேய்க்கக்கூடாது. இந்த எண்ணெய் சிகிச்சை முறையை ஆதாரமாக வைத்துத்தான் அப்யங்கம், சிரோதாரை, சிரோபிழிச்சல் என்று சொல்லப்பட்ட சில எண்ணெய்க் குளியல் வகைகள், கேரளத்தில் மிகவும் பிரபலமாகச் செய்யப்படுகின்றன. இதைப் பற்றிப் பின்னாளில் விரிவாகப் பார்க்கவிருக்கிறோம்.

பழைய காலத்திலே அஞ்சனம் (மை) போட்டுக் கொள்வதும் மக்களிடையே இருந்தது. கண்ணுக்கு மை எழுதுவதுதான் அஞ்சனமிடுவது. அதற்கு 'சௌபீராஞ்சனம்' என்று பெயர். 'சுர்மா'ன்னு சொல்வாங்க. அதைப் பயன்படுத்தி, கண் மை போட்டுக்குவாங்க. ரஸாஞ்சனம் (மர மஞ்சள் சேர்த்துச் செய்யப்படும் கண் மை) ஏழு நாளைக்கு ஒரு தடவை, கண்ணிலே தேய்த்து, சிகிச்சை உண்டு. கண்ணைச் சுத்திச் செய்வாங்க. இதனால் கண் நோய்கள் அண்டாது. உஷ்ண ஜலம் பயன்படுத்தறது பொதுவாகவே வாத, கபத்துக்கு நல்லது. கை கால் வலி இருந்தால், வெந்நீரில் குளிக்கலாம். வியர்வை, கை கால் எரிச்சல் இருந்தால், குளிர்ந்த நீரில் குளிக்கலாம்.

உங்கள் ப்ரக்ருதிக்கு ஏற்ற நீரில், சுத்தமாகக் குளித்துவிட்டு, சுத்தமான ஆடைகளை அணிந்து சாப்பிடலாம். 'சாப்பிடலாம்' என்று ஒரு வார்த்தையில் சொல்லி விட்டாலும், ஆகாரம் என்பது மிகப் பெரிய விஷயம் என்பதை மனத்தில் கொள்ள வேண்டும். ஏனென்றால், நாம் என்ன சாப்பிடுகிறோமோ, அதுதான் ஜீரண சத்தாகி, ரத்தமாகி, நம் உடலையும் மனத்தையும் கட்டுப் படுத்துகிறது. எனவே என்ன சாப்பிடலாம், எப்படிச் சாப்பிடலாம் என்பதை அடுத்த இதழில் விரிவாகப் பார்ப்போம்.

புகைப்படம் உதவி : **எஸ்.என்.ஏ. ஔஷத ஷாலா, கேரளா**

வெத்தலைப் பட்டிப் புகழேந்தி



"**வ**ற்றிப் போன கிணத்துல போய் ஏன் தண்ணி இறைக்க முயற்சிக்கறீங்க? நேரமும், காசும்தான் வீணாகும்."

இசையமைப்பாளரிடம் அந்தப் படத்தின் தயாரிப்பாளர் சப்தம் போடுவதை, அறையின் வெளியே நின்றபடி கேட்டுக் கொண்டிருந்தேன்.

வற்றிப் போன கிணறு!

எனக்குள் கோபம் பொங்கியது.

"புரட்யூசர் சார், கொஞ்சம் பொறுங்க. நானும், அவரும் சேர்ந்து எவ்வளவு அருமையான பாட்டுகளைக் கொடுத்திருக்கோம்னு உங்களுக்கே தெரியும். என் டியூனும், அவரோட பாடலும் சேர்ந்து, பல படங்களை வெற்றிப்படமாக்கியிருக்குன்னு பலருக்குத் தெரியும்."

இசையமைப்பாளர் கெஞ்சினார். அவர் சொல்வதும் உண்மைதான். நாங்கள் இணைந்து பணியாற்றிய முதல் படமே ஹிட்!

ஆறு பாடல்களுமே வெகுவாக இரசிக்கப்பட்டன. காசெட்டுகள் விற்பனையும் அமோகம். இருவருக்குமே தேசிய விருது வாங்கிக் கொடுத்தன.

அதன் பிறகு எங்கள் கொடிதான் கடந்த ஐந்து வருடங்களாகப் பறந்தது.

"புதுசு, புதுசாய் நிறையப் பசங்க பாட்டு எழுத வந்திருக்காங்க. நல்லாவே எழுதறாங்க. பாருங்க. வட்டிக்குப் பணம் வாங்கியிருக்கேன். இன்னும் நாலைஞ்சு நாளைக்குள்ள முடிச்சுடுங்க. உங்க மியூசிக்கை வைச்சுத்தான் அடுத்த வாரம் ஜெய்ப்பூரில் டூயட் காட்சி ஷூட் பண்ணனும்."

புரட்யூசர் வெளியே வருவது தெரிந்ததும், நான் நகர்ந்து வேறு பக்கம் சென்று விட்டேன்.


புதுமைக்கவி புகழேந்தி!

எனக்குக் கிடைத்த பட்டம்! என் வார்த்தைகளில் மண்ணின் இயல்பும், அழகும் மிளிர்வதாய்ப் பத்திரிகைகள் பாராட்டித் தள்ளின.

வார்த்தைகளில் வாழ்க்கையின் நிதர்சனம் வெகு அழகாய் வெளிப்படுவதாய் சினிமா இண்டஸ்ட்ரி புகழ்ந்தது.

இதுவரை மூன்று தேசிய விருதுகள் கிடைத்து விட்டன.

ஆனால் என்ன பிரயோஜனம்? இதோ சில நாட்களாய் என்னையே



நான் தொலைத்துவிட்டது போல இருக்கிறது.

கிருஷ்ணா

"கவிஞரே, முன்னே மாதிரி ஒரு கவர்ச்சியும், தாக்கமும் இல்லையே. இன்னும் நல்ல வரி வந்தால் பரவாயில்லை."

இசையமைப்பாளர் காத்திருந்தார் எனது தமிழுக்காக.

நானும் இரண்டு, மூன்று நாட்களாய் மூளையைக் கசக்கிக் கொள்கிறேன். உண்டியலைக் கவிழ்த்தது போல கவீர், கவீர் என வந்து விழுமே வார்த்தைகள். எங்கே போய் விட்டன அவை? நிஜமாகவே வறண்டு போய் விட்டேனா? முதன் முதலாய் பயம் பிடித்துக் கொண்டது. வீட்டுக்குத் திரும்பி, அறைக்குள் முடங்கினேன். கண்ணாடியில் என்னைப் பார்த்துக் கொண்டேன். அதே புகழேந்திதான். என்ன, கொஞ்சம் சதை போட்டிருக்கிறேன். முன்புறம் வழுக்கை 'ஹலோ' என்று எட்டிப் பார்த்தது. வேறு எந்த மாற்றமுமில்லை!

தமிழ்ப் புத்தகங்களைப் புரட்டினேன். ம்ஹூம்! ஏட்டுச் சுரைக்காய் வேறு! என்னில் பீறிடும் ஊற்று வேறு.

ஏ தமிழே! எனது மன ஊற்றே, எங்கே தொலைந்து போனாய்? பைத்தியம் போல் வீறிட்டேன். என் குரல் கேட்டு மனைவியும், அம்மாவும் ஓடி வந்தனர்.

கொஞ்ச நேர அமைதிக்குப் பின் அம்மா சொன்னாள்,

"ரொம்ப நாளாகவே உன்னிடம் சொல்லணும்னு நினைச்சேன்."

அம்மா பீடிகை போட, அவள் முகத்தையே பார்த்தேன்.

"நம்ம ஊரு கருப்பண்ணசாமிக்கு பானகம் கரைச்சு, தேங்காய் உடைக்கணும். உங்கப்பா இருந்தப்ப மாசாமாசம் அமாவாசை அன்னிக்குப் பண்ணுவாரு. அவரோட அந்த வழக்கம் விட்டுப் போச்சு. உனக்கோ சாமி, பூஜையெல்லாம் அவ்வளவாய்ப் பிடிக்காது. ஒரு தரம் நம்ம கிராமத்துக்குப் போய்க் கருப்பரைப் பார்த்துட்டு வந்துட்டால் சரியாயிடும்."

அம்மாவை வெறித்தபடி நின்றேன். நான் நாத்திகனும் இல்லை, ஆத்திகனும் இல்லை. விழுந்து, விழுந்து சாமி கும்பிட மாட்டேன், வெட்டிவாதம் பேசி இழிவு படுத்தவும் மாட்டேன். யோசித்தேன். எதைத் தின்றாவது பித்தம் தெளிய வேண்டும். என் ஊற்றுக் கண் அடைப்பு நீங்க வேண்டும்.

"நாளைக்கு அமாவாசை வருது" என்றாள் அம்மா.

தலையசைத்தேன்!

எங்களைக் கண்ட மகிழ்ச்சியில் ஊரே அமர்க்களப்பட்டது. இருநூறு வீடுகள் கொண்ட சிறிய கிராமம் அது. அனைவரும் சினிமா பற்றி ஆர்வமாக விசாரித்தனர். சிம்ரன், ஜோதிகா, மாதவன், அஜீத் என்று அவரவர்கள் இஷ்ட நடிகர் பற்றிக் கேட்டனர். என்னை அவர்கள் வடிவில் கண்டது போலக் களிப்படைந்தனர்.

"புகழ், வர்ரியா இப்படிக் காலாற நடந்துட்டு வரலாம்." சித்தப்பாவுடன் நடந்தேன்.


செம்மண் பூமி எங்களுடையது. கொள்ளிடப் பாசனம். வேட்டி கட்டிக் கொண்டு, வெற்று மார்புடன் சித்தப்பா, வாய் மூடாமல் பேசியபடி வந்தார்.

சிவன் கோவில் கும்பாபிஷேகம், கோவில் குளத்தில் மல்லிகா டீச்சர் விழுந்து தற்கொலை செய்து கொண்டது, போன வருடம் மழை பொய்த்துப் போனது, விவசாயம் பாதித்தது, எம்.எல்.ஏ. தேர்தலில் ஊரில் அடிதடி நடந்தது, எங்கள் வீட்டுக் கொல்லைப்புற தென்னை மரத்தில் இடி விழுந்தது, என்று மூச்சு விடாமல் எல்லா விஷயங்களையும் எனக்குள் ஏற்ற முயற்சி செய்து கொண்டிருந்தார்.

''குறைஞ்சது பதினைந்து பேர் ஏறினால்தான் பஸ்ஸை ஸ்டார்ட் பண்ணுவீங்களா, ஏன்?''

''பஸ் தள்ளினால்தான் ஸ்டார்ட் ஆகும். அதுக்கு ஆள் வேணுமே!''

— எஸ். முகமது யூசுப்



அடுத்த நாள் விடிகாலையிலேயே வீடு விழித்துக் கொண்டது.

குளித்து முடித்து, நெற்றி நிறைய விபூதி பூசி, வேட்டி கட்டி, வெற்று மார்புடன் கருப்பண்ணசாமி கோயிலை நோக்கி நடந்தேன். எங்கள் வீட்டிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில், ஊரின் வடக்கு மூலையில் இருந்தது கோவில்.

பெரிய ஆலமரம் சுற்றி வர விழுது விட்டு, கருப்பருக்கு இயற்கையான நிழற் கூரையாய் வளர்ந்திருந்தது.

அந்த ஆலமரத்தின் வயது இருநூறு, முந்நூறு வருடத்திற்கும் மேல் இருக்கும் என்பார்கள் ஊர்ப் பெரிசுகள்.

ஆலமரத்தின் விழுதுவிட்டு ஓங்கி, உயர்ந்து, பக்கமெல்லாம் நிழல் பரப்பி நின்ற நிலையை தூரத்திலிருந்து பார்க்கும்போதே, மனத்தில் ஒரு கம்பீரமான அமைதி எழும். மனத்திலுள்ள பாரங்களை அப்படியே கொடுத்து சரணடையச் சொல்லும் தாயின் மடியின் அரவணைப்பும், பாதுகாப்பும் கிடைப்பது போல மனசு சமாதானமடையும்.

கையில் வாளுடன், மீசையை முறுக்கியபடி, உருட்டும் கண்களால் பார்த்தபடி நிற்கும் கருப்பர் முன் சென்று வணங்கினோம்.

'நானிருக்கிறேன் உங்களையெல்லாம் பாதுகாக்க' என்று சொல்லாமல் சொல்லி நின்றிருந்தார் கருப்பண்ணசாமி.

"சாமி, ஏதாவது குத்தம் நடந்திருந்தாலும் மன்னிச்சு, எங்க மனசை குளிரவையப்பா" என்று அம்மா குரலெடுத்து வேண்டினாள்.

பூசாரியிடமிருந்து திருநீறு வாங்கி, என் நெற்றி, மார்பு, கைகளில் எல்லாம் பூசி விட்டாள். வீடு திரும்பும்போது வெயில் ஏறிவிட்டது. செருப்புப் போடாத கால்கள் கொதித்தன.

வீட்டுக்குள் நுழைந்து, கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொண்டு, கை, கால் கழுவ எழுந்தேன். அந்த அறையிலிருந்த பீரோ கண்ணாடியில் என் உருவம் தெரிய, யதேச்சையாய்ப் பார்த்தேன். நேற்று பட்டணத்தில் கண்ணாடியில் பார்த்த உருவத்திற்கும், இதோ இப்போது தெரியும் உருவத்திற்கும் தான் எத்தனை வேறுபாடு?


அப்போது தெரிந்தது புதுமைக்கவி புகழேந்தி என்ற பட்டணத்து நாகரிக மனிதன். இதோ இப்போது தெரிவது 'வெத்தலைப் பட்டிக் கிராமத்து புகழேந்தி பயல்!'

அன்று இரவு பாயில்லாமல், வெறும் சிமெண்ட் தரை ஜில்லிப்பில் முதுகு படும் படி படுத்துத் தூங்க முயன்றேன்.

தூக்கம் வரவில்ல! கவிதை வந்தது. ❍

நிறைய மார்க்கோடு நிறைவு!





ஒப்புக்காவது, 'முன்னளவு ஃபார்மில் இல்லாததால்...', 'புதியவர்களுக்கு வழி விட வேண்டுமென்பதால்...', '...உடல் உபாதைகளால்...' என்று எதையாவது சொல்வார்கள். ஆனால் மார்க் வா நெத்தியடியாக, "ஒருநாள் பந்தயங்களிலிருந்து என்னைத் தூக்கிவிட்டார்கள். இங்கிலாந்துக்கெதிராக ஆடவிருக்கும் டெஸ்ட் தொடரிலும், என்னை விலக்கி வைத்து விட்டார்கள். மறுபடியும் நான் ஆஸ்திரேலிய அணியில் இடம் பெற மாட்டேன் எனத் தோன்றுகிறது. எனவேதான் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வெடுத்துக் கொள்கிறேன்" என்று கூறியிருக்கிறார். அதாவது, விருப்ப ஓய்வல்ல, கட்டாய ஓய்வு.

கிரிக்கெட் சரித்திரத்தின் ஒரு முக்கியப் பக்கம் மார்க் வா. 1993லிருந்து இடைவிடாமல் 107 டெஸ்ட் பந்தயங்களில் இடம் பெற்றவர். 2000-02ல் தொடர்ந்து 16 டெஸ்ட்களை வென்று சாதனை படைத்தது ஆஸ்திரேலிய கிரிக்கெட் குழு. அதில் மார்க் வாவுக்கு முக்கிய இடம் உண்டு.

மற்றொரு கிரிக்கெட் வீரரான ஸ்டீவ் வாவின் (இரட்டையர்) தம்பி இவர். (இன்னமும் ஸ்டீவ் வா அணியில் இருக்கிறார்.) அற்புதமான பேட்ஸ்மேன் மார்க் வா - 8,029 டெஸ்ட் ரன்களை எடுத்திருக்கிறார். அதில் 20 சதங்கள். ஃபீல்டிங்கில் சூப்பர்.

59 விக்கெட்டுகளையும் தனது பந்து வீச்சில் (டெஸ்ட்டில்) வீழ்த்தியிருக்கிறார். (ஒருநாள் கிரிக்கெட்டில் வீழ்த்தியது 85 விக்கெட்டுகள்).


தலையில் தொப்பியும், கண்களில் குளிர் கண்ணாடியும் அணிந்து கொண்டு சுறுசுறுப்பாக இயங்கும் இவர், அணியில் இல்லாமல்போனது இன்னும் சில காலத்துக்காவது கிரிக்கெட் ரசிகர்களுக்குப் பளிச்சென ஒரு வெற்றிடத்தைப் புலப்படுத்தும். அதுவே வா பெற்ற 'மார்க்'கிற்குச் சாட்சிதானே!

— குல்லூ

தாலாட்ட வருவாளா?



• சித்ரா



அலுவலகம் போய் வந்த அலுப்பும், மெகா தொடர் பார்த்த களைப்பும், கண்களை அழுத்த, குழந்தைக்கு முன்பே தூங்கிப் போகும் இன்றைய இளம் தாய்மார்களுக்குத் தாலாட்டுப் பாடத் தெரியுமா? இங்கே சில அம்மாக்கள் தங்களின் தாலாட்டு அனுபவம் பற்றி பாடுகிறார்கள், சாரி... பகர்கிறார்கள்.

தேவி அண்ணாதுரை :

இன்னும் நூறு வருஷம் கழிச்சு, தாலாட்டுப்பாடி குழந்தையைத் தூங்கச் செய்ய ரோபோ வந்த பிறகு, இதே கேள்வியை ஒரு தமிழ் நாட்டுத் தாய்க்கிட்டே கேட்டுப் பாருங்க. தாலாட்டுத் தெரியும்ன்னுதான் சொல்லுவாங்க. ஆராரோ, ஆரீரரோங்கிற வார்த்தை நம்ம இரத்த அணுக்களோட ஊறிப் போன ஒண்ணு. எவ்வளவு செல்வச் செழிப்பில் வளர்ந்த தமிழ்ப் பொண்ணும் தாயான பிறகு, தன்னையும் அறியாமல் தாலாட்டுப் பாடுவா. அதுக்குப் பேர்தான் தாய்மை!

தாலாட்டுக்கு வார்த்தைகள் போட்டுத்தான் பாடணுங்கற அவசியமில்லை. நம்ம குழந்தை இப்போ அமைதியா தூங்கணும்னு மனசுல நினைச்சு... 'ஹம்' பண்ணினாலே போதும். குழந்தைகள் உடனே தூங்கிடும். இதை என்னோட அனுபவத்துலேர்ந்து சொல்றேன்.

பிரமீளா பிரசாந்த் :

தாலாட்டு தெரியுமான்னு சுலபமாக் கேட்டுட்டீங்க... அது எவ்வளவு கஷ்டமான 'ஜாப்'புன்னு பாடிப் பார்த்தால்தான் தெரியும். ஏன்னா குழந்தையைத் தொட்டில்லே போட்டு ஆட்டினாலும் சரி, மடியிலே கிடத்தி தட்டிக் கொடுத்தாலும் சரி, தாலாட்டு ராகமும், குழந்தையை ஆட்டி விடுற வேகமும் ஒரே சீரா இருக்கணும். இல்லேன்னா நம்ம பாடுற தாலாட்டு சரியில்லேன்னு தொட்டில்லேர்ந்து அவ பாட ஆரம்பிச்சுடுவா. தாலாட்டுப் பாடியும் தூங்கலேன்னா இருக்கவே இருக்கு சுசீலா அம்மா கேசட். அதை ஸ்டீரியோ டேப் ரிக்கார்டரில் போட்டு மெல்லமா வெச்சுடுவேன். எல்லாம் சாஃப்ட்டான மெலோடியஸ் பாட்டுக்கள். இரண்டு பாடல்கள் முடியறதுக்குள்ளே தூங்கிடுவா. இப்போதைக்கு எனக்குப் பதிலா சுசீலா அம்மாதான் எங்க வீட்லே



* ராஜேஸ்வரி குமார்

* தேவி



* பிரமிளா



தாலாட்டுப் பாடுறாங்க.

ராஜேஸ்வரி குமார் :

நல்லாவே பாடுவேன். ஆனால் ஒரு வயசு வரைக்கும்தான் குழந்தைகள் தாலாட்டுப் பாடுறதைக் கேட்டுத் தூங்கறாங்க. அப்புறம் நீ தூங்கு நான் பாடுறேன்னு நமக்கே பாடு வாங்க! என் மகனை எடுத்துக்கோங்க. அவனைப் படுக்க வைத்து முதுகிலே தட்டிக் கொடுத்து, தூங்கச் சொன்னால், அவன் தனக்குப் பக்கத்துலே ஒரு பொம்மையைப் போட்டுக்கிட்டு அது முதுகிலே தட்டிக் கொடுப்பான்... அப்படியொரு துறுதுறு...

சித்ரா தியாகராஜன் :

வேலைக்குப் போகும் பெண்களுக்குத் தாலாட்டுப் பாட நேரம் இருக்கிறதில்லை. நேரம் இருந்தாலும் தாலாட்டுப் பாடத் தெரியாதுங்கிறதுதான் உண்மை. நான் வழக்கறிஞராக இருக்கேன். அலுவலகம் போய் வரவே நேரம் சரியா இருக்கு... அதனாலே என் மகளை வளர்க்கிறது என்னோட அக்காதான். அவங்க நல்லாவே தாலாட்டுப் பாடுவாங்க. குழந்தைகளோட சைக்காலஜி தெரிஞ்சுகிட்டாலே, அவங்களை சரியா தூங்க வெச்சுட லாம். அதுக்கு அவங்க கூடவே யாராவது ஒருத்தர் இருக்கணும். என்கிட்டே இருக்கும் போது விளையாடிட்டு இருப்பா. அவங்க பெரியம்மா கைக்குப் போய்ட்டா உடனே, தூங்கிடுவா. அப்படியொரு பந்தம் அவங்க அணைப்பிலே கிடைக்குது. இந்த அரவணைப்பு இருக்கிறபோது தாலாட்டெல்லாம் எதுக்கு?

— ஸ்ரீ சக்கரம்

படங்கள் : ராஜன்



கோவை

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்

வழங்கும்

தேசத்தின் குரல்!

காலை 8.30மணி
ஞாயிறு தோறும்

மகாத்மா காந்தி எப்படி பேசினார் ?

சுபாஷ் சந்திர போஸ் எப்படி உரையாற்றினார் ?

சுதந்திரம் வாங்கியவுடன் நேருவின் குரல் எப்படியிருந்தது?

சுதந்திரம் கொடுத்தவுடன் மவுண்ட் பேட்டன் குரல் எப்படியிருந்தது?

**தன்னிகரற்ற மறைந்த தேசத்தலைவர்களின்
பேச்சுக்களை, அவர்தம் குரலிலேயே
அப்படியே வானொலியில் கேட்க, பொன்னான வாய்ப்பு இது !**

தேசத்தின் குரல் !
வழங்குகிறார்கள் ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்.

ஒவ்வொரு ஞாயிறு அன்றும் காலை 8.30 மணிக்கு,
சென்னை, கோவை, திருச்சி, மதுரை,
வானொலி நிலையங்களில் கேட்டு மகிழுங்கள் !
தவறவிடக் கூடாத அரிய ... மிக அரிய.... வாய்ப்பு இது !

கோவை

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்

PRODUCERS OF PURE GHEE SWEETS

DIMENSIONS/SKS/02-03



சிவகாமியின் சபதம்

பதினேழாம் அத்தியாயம்

சின்னக்கண்ணன்

ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுக் காலம் பிரிந்திருந்த பிறகு, சிவகாமியும் கமலியும் சந்தித்த போது, அந்த இளம் பிராயத் தோழிகளுக்கு ஏற்பட்ட உள்ளக்கிளர்ச்சியை விவரிக்க முடியாது.

ஒருவரையொருவர் தழுவிக் கொண்டார்கள்; ஒருவருடைய தலையை ஒருவர் தோளில் வைத்துக்கொண்டு கண்ணீர் விட்டார்கள்! விம்மி அழுதார்கள்; திடீரென்று சிரித்தார்கள்; ஒருவரையொருவர் வாழ்த்திக் கொண்டார்கள்; உடனே வைது கொண்டார்கள்.

இருவரும் ஏக காலத்தில் பேச முயன்றார்கள்; பிறகு இருவரும் சேர்ந்தாற்போல் மௌனமாயிருந்தார்கள்.

அந்த ஒன்றரை வருஷத்துக்குள் இருவருடைய வாழ்க்கையிலும் எத்தனை எத்தனையோ முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்திருந்தன. அவற்றில் எதை முதலில் சொல்வது, எதை அப்புறம் சொல்வது என்று நிர்ணயிக்க முடியாமல் தவித்தார்கள். அந்தப் பிரச்னையை அவர்களுக்காகச் சின்னக்கண்ணன் தீர்த்து வைத்தான்.

தொட்டிலில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த குழந்தை, தான் விழித்துக் கொண்டுவிட்டதை ஒரு கூச்சல் மூலம் தெரியப்படுத்தியதும், கமலி ஓடிப் போய் குழந்தையைக் கையில் எடுத்துக்கொண்டு வந்தாள்.

சிவகாமி சின்னக் கண்ணனைக் கண்டதும் சற்று நேரம் திகைத்துப் போய், பார்த்தது பார்த்தபடி நின்றாள்.

அமரர் கல்கி

வெளிப்படையில் அவள் ஸ்தம்பித்து நின்றாளே தவிர, அவளுடைய உடம்பின் ஒவ்வோர் அணுவும் அப்போது துடித்தது. அவளுடைய இதய அந்தரங்கத்தின் ஆழத்திலிருந்து இதுவரை அவளுக்கே தெரியாமல் மறைந்து கிடந்த ஏதோ ஓர் உணர்ச்சி பொங்கி வந்து, மளமளவென்று பெருகி, அவளையே முழுதும் மூழ்கடித்துவிட்டது போலிருந்தது.

''ஏனடி இவ்விதம் ஜடமாக நிற்கிறாய்? சின்னக் கண்ணன் உன்னை என்ன செய்தான்? இவன் பேரில் உனக்கு என்ன கோபம்?'' என்று கமலி கேட்டதும், சிவகாமி இந்தப் பூவுலகத்திற்கு வந்தாள்.

''கமலி! இவன் யாரடி? எங்கிருந்து வந்தான்? எப்போது வந்தான்? - என்னிடம் வருவானா?'' என்று சிவகாமி குழறிக் குழறிப் பேசிக்கொண்டே இரண்டு கைகளையும் நீட்ட, குழந்தையும் சிவகாமியின் முகத்தைத் தன் அகன்ற கண்கள் இன்னும் அகலமாக விரியும்படி பார்த்துக்கொண்டே, அவளிடம் போவதற்காகக் கைகளையும் கால்களையும் ஆட்டிக்கொண்டு பிரயத்தனப்பட்டது.

''உன்னிடம் வருவானா என்றா கேட்கிறாய்? அதற்குள் என்னவோ மாயப் பொடி போட்டுவிட்டாயே! கள்ளி - மாமல்லருக்குப் போட்ட மாயப்பொடியில் கொஞ்சம் மிச்சம் இல்லாமல் போகுமா?'' என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே கமலி குழந்தையைச் சிவகாமியிடம் கொடுத்தாள்.

மாமல்லரைப் பற்றிக் குறிப்பிட்டது சிவ



காமிக்குக் குதூகலத்தையும் நாணத்தையும் ஒருங்கே அளித்தது. அவள் குழந்தையைக் கையில் வாங்கி மூக்கும் விழியும் கன்னமும் கதுப்புமாயிருந்த அதன் முகத்தைப் பார்த்துக்கொண்டே, "ஆமாண்டி அம்மா, ஆமாம்! நீ கண்ணனுக்குப் போட்ட மாயப் பொடியில் கொஞ்சம் மீந்துக் கொடுத்ததைத்தானே நான் மாமல்லருக்குப் போட்டேன்? - பார்! அப்படியே அப்பாவின் முகத்தை உரித்து வைத்தது போலிருக்கிறது! கமலி! இவன் அப்பா எங்கே?'' என்று கேட்க, கமலி, ''இது என்ன கேள்வி? மாமல்லர் எங்கே இருக்கிறாரோ, அங்கேதான் இவன் அப்பா இருப்பார்!'' என்றாள்.

''ஓஹோ! அப்படியானால் அண்ணனும் இன்று அரண்மனையில்தான் இருந்தாரா? சபையில் என்னுடைய நாட்டியத்தைப் பார்த்திருப்பார் அல்லவா? நீ ஏனடி வரவில்லை?'' என்று சிவகாமி கேட்டதும் கமலி, ''என்ன தங்கச்சி உளறுகிறாய்? உன் அண்ணனாவது நாட்டியம் பார்க்கவாவது? உனக்குத் தெரியாதா, என்ன? மாமல்லர்தான் தெற்கே பாண்டியனோடு சண்டை போடுவதற்குப் போயிருக்கிறாரே?'' என்றாள்.

இதைக் கேட்டதும், சிவகாமிக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில், தன் மடியில் இருந்த குழந்தையைக்கூட மறந்துவிட்டு எழுந்தாள். குழந்தை தரையில் 'பொத்' என்று விழுந்து, 'வீர்' என்று கத்திற்று. கமலி அலறும் குரலில், "அடிப்பாவி! ஏனடி குழந்தையைக் கீழே போட்டாய்? நீ நாசமற்றுப் போக! உன்னைப் புலிகேசி கொண்டு போக!'' என்றெல்லாம் திட்டிக்கொண்டே, சின்னக் கண்ணனை எடுத்து மார்போடு அணைத்து இப்படியும் அப்படியும் ஆட்டிக் கொண்டே, ''வேண்டாமடா, கண்ணே! வேண்டாமடா!'' என்று சமாதானப்படுத்தினாள். குழந்தை மீண்டும் மீண்டும் வீரிட்டு அழுத வண்ணம் இருக்கவே, கமலி கோபங்கொண்டு "அடே வாயை மூடுகிறாயா? அல்லது புலிகேசியை வந்து உன்னைப் பிடித்துக் கொண்டு போகச் சொல்லட்டுமா?'' என்றாள். குழந்தை அதிகமாக அழுதால் இந்த மாதிரி புலிகேசியின் பெயரைச் சொல்லி பயமுறுத்துவது வழக்கமாயிருந்தது. அதனால் தான் சிவகாமியையும் மேற்கண்டவாறு சபித்தாள்.

குழந்தை ஒருவாறு அழுகையை நிறுத்தியதும் அதைக் கீழே விட்டு விட்டுக் கமலி சிவகாமியைப் பார்த்தாள். அவளுடைய திகைப்பைக் கவனித்துவிட்டு, ''தங்கச்சி! மாமல்லர் பாண்டியனோடு யுத்தம் செய்யப் போயிருப்பது உனக்குத் தெரியாதா, என்ன?'' என்று கேட்டாள்.

''தெரியாது, அக்கா!'' என்று சிவகாமி உணர்ச்சி பொருந்திய கம்மிய குரலில் கூறினாள். தான் சபையில் நடனமாடியபோது, மாமல்லர் எங்கேயோ மறைவான இடத்திலிருந்து பார்த்துக் கொண்டிருப்பார் என்று எண்ணியதை நினைத்து ஏமாற்றமடைந்தாள்.

ஆம்! கமலி சொல்வது உண்மையாகத்தான் இருக்க வேண்டும். மாமல்லர் மட்டும் இங்கு இருந்திருந்தால் அந்தக் காட்டுப் பூனையின் முன்னால் தன்னை ஆட்டம் ஆடச் சொல்லிப் பார்த்துக் கொண்டிருப்பாரா?

மாமல்லர் இல்லாத சமயத்தில் புலிகேசியின் முன்னால் தான் ஆடியதை நினைத்தபோது சிவகாமிக்கு இப்போது அசாத்திய வெட்கமாயிருந்தது. மகேந்திர பல்லவர் மீது கோபம் கோபமாய் வந்தது. மாமல்லர் இல்லாதபோது அவர் இல்லை என்கிற தைரியத்தினாலேயே சக்கரவர்த்தி தன்னைப் புலிகேசியின் முன்னால் ஆடச் சொல்லி அவமானப்படுத்தியிருக்கிறார்.

இத்தகைய குழப்பமான எண்

ணங்கள் சிவகாமியின் உள்ளமாகிற ஆகாசத்தில் குமுறி எழுந்தன. திடீரென்று, மின்னலைப் போல் ஓர் எண்ணம் தோன்றிக் குழப்பமாகிற கரிய இருளைப் போக்கியது. அந்த மின்னல் ஒளியிலே அவள் கண்டு தெரிந்து கொண்ட விஷயம், தன்னைக் கெடுப்பதற்கு மகேந்திர பல்லவர் செய்த சூழ்ச்சி எவ்வளவு பயங்கரமானது என்பதுதான். அதாவது மாமல்லர் தெற்கே போகும்போது தன்னை மண்டபப்பட்டில் சந்திக்காதிருக்கும் பொருட்டே, தன்னை இங்கே சக்கரவர்த்தி வரவழைத்திருக்கிறார்! - என்று அவள் முடிவு செய்தாள்.

சிவகாமியின் முகத் தோற்றத்தையும் அவளுடைய கண்களில் ஜொலித்த கோபக் கனலையும் கவனித்த கமலி சிறிது நேரம் தானும் வாயடைத்துப் போய் நின்றாள். அப்புறம் சமாளித்துக்கொண்டு "தங்கச்சி! இது என்ன கோபம்? ஒன்றும் முழுகிப் போய்விடவில்லையே! மாமல்லருக்கு யுத்தம் புதிதா? பாண்டியனை முறியடித்துவிட்டு வெற்றி வீரராகத் திரும்பி வரப் போகிறார்! அதுவரையில்...!" என்று கமலி சொல்லி வந்தபோது, "ஆ! போதும்! போதும்! வாதாபிப் புலிகேசியை ஜயித்து வாகைமாலை சூடியாகிவிட்டது; - பாண்டியனை ஜயிப்பதுதான் மிச்சம்! போடி, அக்கா, போ! இந்தப் பல்லவ குலத்தாரைப் போல் மானங்கெட்டவர்களை நான் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை" என்றாள் சிவகாமி.

கமலிக்குத் தூக்கிவாரிப் போட்டது! "இது என்ன இவள் இப்படிப் பேசுகிறாள்? சூரியனிடம் காதல் கொள்ளத் துணிந்த பனித்துளிக்கு ஒப்பிட்டுத் தன்னைத்தானே எத்தனையோ தடவை நொந்துகொண்ட சிவகாமிதானா இவள்? குமார பல்லவரின் ஒரு கடைக்கண் நோக்குக்காகத் தன் உயிரையே கொடுக்கச் சித்தமாயிருந்த சிவகாமிதானா இவள்?

இப்படிக் கமலி எண்ணி வியந்துகொண்டிருக்கும்போதே, சிவகாமியினுடைய முகபாவம் மாறியது. கமலியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, "அக்கா! ஏதோ பிதற்றுகிறேன். மன்னித்து விடு. எல்லாம் விவரமாகச் சொல்லு. மாமல்லர் எப்போது யுத்தத்துக்குப் போனார்? வாதாபிச் சக்கரவர்த்தி காஞ்சிக்கு வருவதற்கு முன்னாலா? அப்புறமா? அவருடன் அண்ணனைத் தவிர இன்னும் யார் யார் போயிருக்கிறார்கள்? எல்லாம் விவரமாகச் சொல்லு. போகும்போது அண்ணன் உன்னிடம் என்ன சொல்லிவிட்டுப் போனார்? என்னை இங்கே சக்கரவர்த்தி நாட்டியம் ஆட வரவழைக்கப் போவது அவர்களுக்குத் தெரியுமா? சொல்லு அக்கா! ஏன் மௌனமாயிருக்கிறாய்? என் பேரில் உனக்குக் கோபமா?" என்று கேள்விகளை மேலும் மேலும் அடுக்கிக் கொண்டே போனாள்.

அதன் பேரில் கமலியும் தனக்குத் தெரிந்த வரையில் கூறினாள். சிவகாமி நாட்டியமாடுவதற்காக வரப்போகும் செய்தி யுத்தத்துக்குப் போனவர்களுக்குத் தெரிந்திருக்கவே நியாயமில்லையென்றும், தனக்கே இன்றுதான் தெரியுமென்றும் சொன்னாள். எல்லாவற்றையும் கேட்டுவிட்டுச் சிவகாமி, "அக்கா! நீ ஒன்றும் தப்பாக நினைத்துக் கொள்ளாதே! உன்னை நான் பார்த்து எத்தனையோ நாளாயிற்று. உன்னோடு பேசுவதற்கு எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன. உன் குழந்தை இந்தக் கண்மணியோடு எத்தனை யுகம் கொஞ்சினாலும் எனக்கு ஆசை தீராது. ஆனாலும் இப்போது இங்கே இருப்பதற்கில்லை. மண்டபப்பட்டுக்கு உடனே புறப்பட்டுப் போக வேண்டும். அப்பாவிடம் இதோ சொல்லப் போகிறேன்!" என்றாள்.



பதினெட்டாம் அத்தியாயம்

"புலிகேசிக்கு தெரியுமா?"

மறுநாள் மாலை கண்ண பிரானுடைய வீட்டுக் கூடத்தில் ஆயனர், சிவகாமி, கமலி, கமலியின் மாமனார் ஆகியோர் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். புலிகேசியும் மகேந்திர பல்லவரும் நகர் வலம் வந்தது பற்றியும், அவர்கள் வடக்குக் கோட்டை வாசலில் ஒருவரிடம் ஒருவர் விடைபெற்றுக் கொண்ட காட்சியைப் பற்றியும், புலிகேசி அக்கோட்டை வாசல் வழியாக வெளியேறியது பற்றியும் யோகி அசுவபாலர் மற்றவர்களுக்குச் சொல்லிக்கொண்டிருந்தார். புலிகேசி காஞ்சிக்கு விஜயம் செய்த நாளிலிருந்து அந்த யோகி தமது யோக சாதனத்தை அடியோடு மறந்து நகரில் நடந்த களியாட்டங்களில் ஈடுபட்டிருந்தார் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

மேற்படி பேச்சுக்கு இடையிடையே அங்கே தவழ்ந்து வட்டமிட்டுக் கொண்டிருந்த சின்னக் கண்ணன் அவர்களுடைய கவனத்தைக் கவர முயற்சி செய்தான். கமலியும் அவனுடைய நோக்கத்துக்குத் துணை செய்கிறவளாய், பேச்சை மறித்து, சின்னக் கண்ணனுடைய பிரதாபங்களை அவர்களுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தாள். அப்போதெல்லாம் அசுவபாலர் அவளை, "ஐயோ! பைத்தியமே! இப்படியும் ஒரு அசடு உண்டா?" என்று சொல்லும் தோரணையில் பார்த்துவிட்டு, மேலே தமது வரலாற்றைத் தொடர்ந்தார்.

எல்லாம் முடிந்ததும் சிவகாமி, "மாமா, வாதாபிச் சக்கரவர்த்திதான் போய்த் தொலைந்துவிட்டாரே? கோட்டைக் கதவுகளை இனிமேல் திறந்து விடுவார்கள் அல்லவா?" என்று கேட்டாள்.

'எல்லாம் நாளை மறுநாள் தெரிந்துவிடும், அம்மா! எனக்கென்னவோ அவ்வளவு நம்பிக்கை ஏற்படவில்லை. அந்த வாதாபி சளுக்கனுடைய முகத்தில் பத்து நாளாக இருந்த முகமலர்ச்சியை இன்றைக்குக் காணோம். பல்லவரிடம் விடைபெற்று வெளியே போகும் சமயத்தில் முகத்தைக் கடுகடுவென்று வைத்துக்கொண்டிருந்தான்! அந்த ராட்சதன் என்ன செய்கிறானோ, என்னவோ?"

"அப்படி என்ன செய்துவிடுவான்?" என்று சிவகாமி கேட்டாள்.

"மறுபடியும் அவன் கோட்டையை முற்றுகை போடத் தொடங்கலாம்; அல்லது கோட்டையைத் தாக்கிப் பிடிக்க முயலலாம்."

"அப்படியெல்லாம் செய்வார்களா, என்ன? இத்தனை நாள் இவ்வளவு சிநேகம் கொண்டாடிவிட்டு?" என்று சிவகாமி வியப்புடன் கேட்டாள்.

"தங்கச்சி! இது என்ன நீ கூட இப்படிக் கேட்கிறாயே? இராஜகுலத்தினருக்கு விவஸ்தை ஏது? இன்றைக்குச் சிநேகிதர்களாயிருப்பார்கள்; நாளைக்குக் குத்திக் கொள்வார்கள். இன்றைக்குப் பெண் கொடுத்துச் சம்பந்தியாவார்கள்; நாளைக்குப் போர்க்களத்தில் சண்டை போடுவார்கள்!" என்றாள் கமலி.

ஆயனர், அசுவபாலரைப் பார்த்து, "வாதாபி அரசருக்கு என்ன கோபமாம்? ஏதாவது தெரியுமா?" என்று கேட்டார்.

"சளுக்கனும் பாண்டியனும் சிநேகிதர்களாம். கொள்ளிடக் கரையில் இரண்டு பேரும் ரொம்ப உறவு கொண்டாடினார்களாம். சளுக்கன் இங்கே வந்திருக்கும்போது, மாமல்லர் பாண்



டியன் மீது படையெடுத்துச் சென்றதில் இவனுக்குக் கோபம் என்று சிலர் சொல்லுகிறார்கள். இன்னும் ஒரு அபிப்பிராயம் என்ன தெரியுமா...?'' என்று அசுவபாலர் நிறுத்தினார்.

"என்ன சொல்லுங்களேன்?'' என்றார் ஆயனர்.

"சிவகாமியின் நடனத்தைப் பார்த்து விட்டு மயங்கிப் போய் வாதாபி அரசர் சிவகாமியைத் தம்முடன் அனுப்பும்படி கேட்டாராம். பல்லவேந்திரர் மறுத்து விட்டாராம்! - அதனால்தான் புலிகேசிக்குக் கோபமாம்!'' என்றார் அசுவபாலர்.

"அவன் நாசமாய்ப் போக! அவன் தலையிலே இடி விழ!'' என்றாள் கமலி அழுத்தந் திருத்தமாக.

அப்போது, ''ஆஹா! இவ்வளவு திவ்யமான ஆசீர்வாதம் யார் வாயிலிருந்து வருகிறது?'' என்று ஒரு குரல் கேட்டதும், அனைவரும் திடுக்கிட்டு எழுந்துநின்று, குரல் வந்த பக்கத்தைப் பார்த்தார்கள். அந்தக் கம்பீரமான குரல் சின்னக் கண்ணனுடைய கவனத்தைக் கூடக் கவர்ந்துவிட்டதாகத் தோன்றியது. அவனும் உட்கார்ந்தபடியே ஆவலுடன் குரல் வந்த திசையை நோக்கினான்.

வீட்டின் பின் வாசல் வழியாக உள்ளே வந்தவர் வேறு யாருமில்லை; மகேந்திர பல்லவ சக்கரவர்த்திதான்.

''அசுவபாலரே! நீர் சொல்லிக் கொண்டிருந்த வதந்தி என் காதிலும் விழுந்தது. ஆனால் அது உண்மையல்ல. வாதாபிச் சக்கரவர்த்தி சிவகாமியைத் தம்முடன் அனுப்பும்படி என்னைக் கேட்கவில்லை. பின்னே என்ன சொன்னார் தெரியுமா? 'இந்தப் பெண்ணுக்கு என்னவோ இவ்வளவு பிரமாத மரியாதை செய்கிறீரே? என்னுடன் வாதாபிக்கு அனுப்பினால் சாட்டையினால் அடித்து நாட்டியம் ஆடச் சொல்வேன்'' என்றார். அவ்வளவு ரஸிக சிகாமணி அந்த மூர்க்கப் புலிகேசி!'' என்றார் சக்கரவர்த்தி. அப்போது அவருடைய கண்களில் உண்மையான கோபத்துக்கும் வெறுப்புக்கும் அறிகுறி காணப்பட்டது.

அப்போது சிவகாமி ஓர் அடி முன் வந்து சக்கரவர்த்தியை ஏறிட்டுப் பார்த்து, ''பிரபு! அப்பேர்ப்பட்ட பரம ரஸிகரின் முன்னிலையிலே என்னை நாட்டியம் ஆடச் சொன்னீர்களே! அது தர்மமா?'' என்று கம்பீரமாகக் கேட்டாள்.

''அது தவறுதான், குழந்தாய்! புலிகேசியின் முன்னால் உன்னை நான் ஆடியிருக்கச் சொல்லக்கூடாதுதான். ஆனால் நான் கண்டேனா? அஜந்தாவின் அற்புத வர்ண சித்திரங்கள் எவனுடைய இராஜ்யத்தில் உள்ளனவோ, அவன் இப்பேர்ப்பட்ட ரஸிகத் தன்மையற்ற மூர்க்கனாயிருப்பான் என்று நான் நினைக்கவில்லை... ஆயனரே! ஒரு செய்தி கேட்டீரா? காஞ்சிக் கோட்டைக்கு வெளியே இத்தனை மாதம் சளுக்க சக்கரவர்த்தி தண்டு இறங்கியிருந்தாரல்லவா? ஒரு தடவையாவது மாமல்லபுரத்துக்குப் போய் அவர் பார்க்கவில்லையாம்! நான் கேட்டதற்கு, 'உயிருள்ள மனிதர்கள் இருக்கும்போது வெறுங் கல் பதுமைகளை யார் போய்ப் பார்த்துக் கொண்டிருப்பது?' என்று விடை சொன்னார். இது மட்டுமா? 'அஜந்தாவிலே அப்படி என்ன பிரமாதமாயிருக்கிறது? சுவரில் எழுதிய வெறுஞ் சித்திரங்கள்தானே?' என்றார். இப்பேர்ப்பட்ட மனுஷரிடந்தான் அஜந்தா வர்ண இரகசியத்தை அறிந்து வரும் பொருட்டு நாகநந்தியின் ஓலையுடன் பரஞ்சோதியை நீர் அனுப்பி வைத்தீர்; உமக்கு அது ஞாபகம் இருக்கிறதா?'' என்று மகேந்திர பல்லவர் ஆயனரை நோக்கிக் கேட்டார்.

ஆயனருக்கு அப்போது உண்டான அளவு கடந்த ஆச்சரியத்தை அவரு

அருள்வாக்கு

வெளிப் பொருள் அதுவாகவே ஆனந்தத்தைத் தரவில்லை என்பதைக் கொஞ்சம் ஆலோசித்தாலும் புரிந்து கொண்டு விடலாம். காஷ்மீர் சால்வை அதுவே ஆனந்தம் தருவது என்றால், எக்காலத்திலும் ஒருத்தனுக்கு ஹிதமாகத்தானே இருக்க வேண்டும்? ஆனால் அது எத்தனை விலை உயர்ந்ததாயிருந்தாலும், எத்தனை மழமழப்பாயிருந்தாலும் நல்ல கோடைக் காலத்தில் மேலே பட்டாலே தாங்காமல் தூக்கி எறிகிறோமே! அதனால் ஆனந்தம் அதிலேயே இல்லை என்று புரியத்தானே செய்கிறது? ரொம்பவும் அழகான ஒரு ராகத்தை நல்ல சாரீரமும் ஞானமும் உள்ள பாடகர் ஆலாபனை செய்கிறாரென்பதால் அது எப்போதும் ஆனந்தமளிப்பதாக உள்ளதா என்றால் நமக்கு ரொம்பப் பிரிய மானவர் "போய்" விட்டார் என்று சேதி வருகிறது; அப்போது ரேடியோவிலே அந்த ராகத்தை அந்த வித்வான் தேவகானமாகப் பாடுகிறாரென்றால் ஆனந்தமா தருகிறது? கேட்கப் பிடிக்காமல் நிறுத்தித்தானே விடுகிறோம்? ஜ்வரக்காரனுக்கு நல்ல பக்ஷணமோ, ஐஸ்க்ரீமோ ஆனந்தம் தருமா? சொல்லிக் கொண்டே போகலாம் - ஆனந்தம் வெளி வஸ்துவில் இல்லை என்று காட்டுவதற்கு, ஜீவனுடைய மனஸ் கலப்பதில்தான் ஆனந்தம் உண்டாகிறது. இவன் மனஸ் எதிலும் கலக்காமல் தூங்கிக் கொண்டிருக்கும் போது, எந்த வஸ்துவாவது ஆனந்தம் தருகிறதா? இந்த மனஸின் ஆனந்தமோ நிலையாய் இருப்பதேயில்லை. இதற்கு எத்தனை ஆனந்தமோ அதைப் போல ஆயிரம் மடங்கு அழுகை, இடுக்குவழியாக துளித்துளி வெளிச்சத்தை உள்ளே விட்டு பாக்கி முழுக்க இருட்டையே தருகிற பந்தல் மாதிரி, துளித்துளி ஆனந்தத்தோடு ஏராளமான துக்கத்தையே மனஸ் தருகிறது. இதன் க்ருத்ரிமம் இல்லாமல், இதற்கு ஆதாரமான ஆத்மாவுக்குப் போனால்தான் சாச்வத ஆனந்தமென்பது.



- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சாரிய சுவாமிகள்

டைய முகக் குறி காட்டியது. 'பல்லவேந்திரா! உண்மையாகவா? வாதாபிச் சக்கரவர்த்திக்கா நாகநந்தி ஓலை கொடுத்து அனுப்பினார்? இது தங்களுக்கு எப்படி....?" என்று தயங்கினார்.

"எப்படித் தெரிந்தது என்றுதானே கேட்கிறீர்? ஓலையை நானே படித்துப் பார்த்தேன். ஆனால் நாகநந்தி ரஸிகர், இந்த மூர்க்கப் புலிகேசியைப் போன்றவர் அல்ல. அவர் என்ன எழுதியிருந்தார் தெரியுமா? 'சைனியத்துடன் சீக்கிரம் வந்து பல்லவ ராஜ்யத்தையும் காஞ்சி சுந்தரியையும் நீ கைப்பற்றிக் கொள். சிவகாமியை மட்டும் எனக்குக் கொடுத்துவிடு!' என்று எழுதியிருந்தார்; எப்படியிருக்கிறது, விஷயம்...? ஆயனரே? உம்முடைய அத்தியந்த சிநேகிதர் நாகநந்தியினால் இந்தப் பல்லவ இராஜ்யத்துக்கு எப்பேர்ப்பட்ட ஆபத்து வருவதற்கு இருந்தது. தெரியுமா?" என்றார் சக்கரவர்த்தி.

ஆனால், ஆயனரோ சக்கரவர்த்தி கடைசியாகக் கூறிய வார்த்தைகளைக் கவனித்தவராகக் காணப்படவில்லை. வேறு ஏதோ யோசனையில் ஆழ்ந்தவராய்க் காணப்பட்டார். 'ஆஹா! புத்த பிக்ஷு கொடுத்த ஓலை வாதாபிச் சக்கரவர்த்திக்கா...? அப்படியானால், அஜந்தா வர்ண இரகசியம் புலிகேசி மகாராஜாவுக்குத் தெரியுமா?' என்று தமக்குத் தாமே மெதுவான குரலில் சொல்லிக் கொண்டார்.

(தொடரும்)

கொசுறாக ஒரு பட்டிமன்றம்!

தீபாவளிக்குப் போட்டி போட்டுக் கொண்டு எல்லா டீ.வி. சேனல்களும் பட்டிமன்றத்தை ஒளிபரப்பின. கொசுறாக நாமும் ஒரு பட்டிமன்றத்தை ஏற்பாடு செய்தோம். கற்பனையில்தான்!

(போயஸ் தோட்டத்தில் செல்வி ஜெயலலிதா தமது அறையில் தனியாக அமர்ந்து கொண்டு, ஏதோ தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறார். அப்போது, -"அக்கா!" என்று அழைத்தவாறே உள்ளே நுழைகிறார் உடன் பிறவா சகோதரி சசிகலா!)

ஜெ: வா சசி! உன்னைக் கூப்பிட வேண்டுமென்று இப்பதான் நினைத்தேன். நீயே வந்து விட்டாய்... உட்கார்!

சசி: என்ன பலமான யோசனை! அரசாங்கப் பிரச்னையா அல்லது கட்சி விவகாரமா?

ஜெ: நோ! நோ! அதைப் பற்றியெல்லாம் நான் கவலைப்படுவதே கிடையாது... இது ஒரு சுவையான சமாசாரம்!

சசி: சுவையானது என்றால்...? புரியலையே!

ஜெ: எப்போதும் 'சீரியஸ்' விஷயங்களைப் பற்றியே சிந்தித்து 'போர்' அடித்து விட்டது. அதற்கு மாற்றாக 'லைட்'டான ஒரு விஷயம் பற்றி நமக்குள் கருத்துப் பரிமாற்றம் நடத்திக் கொள்ளலாமே!

சசி: சஸ்பென்ஸ் போதும்... விஷயத்துக்கு வாங்க!

ஜெ: வந்தாச்சு... நீயே சொல் – மாலைச் சிற்றுண்டிக்குச் சிறந்தது மசால் தோசையா, போண்டாவா?

சசி: பட்டிமன்றத் தலைப்பு போல் இருக்கிறதே!

ஜெ: இன்னும் கொஞ்ச நாளில் இதையே தலைப்பாக்கி விடுவார்கள், பாரேன்!... அது சரி, நீ உன் அபிப்பிராயத்தைச் சொல்லவில்லையே!




சசி: நான் போண்டா கட்சி!

ஜெ: எனக்கென்னவோ மசால்தோசையைத்தான் பிடிச்சிருக்கு!

சசி: ஒரு வரியிலே சொன்னால் எப்படி? உங்கள் தரப்புக்கு ஆதரவாகப் 'பாயிண்ட்'களை அள்ளி விடுங்க... அதான் சுவாரஸ்யம்!

ஜெ: அவசரப்படாதே! இதோ ஆரம்பிக்கிறேன்... (தொண்டையைச் செருமிக் கொள்கிறார்.) ஹோட்டல்களிலே மசால் தோசையைப் பிளேட்டில் வைத்துக் கொண்டு வந்து வைப்பார்களே! அதுவே கண்கொள்ளாக் காட்சிதான்... பார்த்தாலே பரவசம் அடைவோம்... நெய்யின் மணம், பொன் நிறம், ஓரங்களில் பழுப்பு நிறத்தில் முறுகல், நடுவே மெத்தென்ற மீதிப் பகுதி; முத்துச் சிப்பியைத் திறக்கிறது போல, லாகவமாக தோசையின் விளிம்பைத்



தூக்கினால் 'கம்'மென்ற வாசனையுடன் – மஞ்சள் குளித்த இளம் பெண்ணின் நாணத்துடன் – மசாலா...

சசி: கேட்கிறபோதே நாக்கில் தண்ணீர் ஊறுகிறது அக்கா...

ஜெ: இன்னும் கேள்... முறுகல் விள்ளல் தனி ருசி, மற்றப் பகுதி வேறொரு ருசி... தோசையைப் பிட்டு, மசாலாவுடன் சேர்த்து வாயில் போட்டுக் கொண்டால் அது இமாலய ருசி! மசாலாவில் இடைச்செருகலாக இஞ்சி அகப்பட்டு, அதை மென்றால் இலேசான விறுவிறுப்பு. அதிர்ஷ்டவசமாக முழு முந்திரியோ, பாதி முந்திரியோ அகப்பட்டால் – தேவாமிர்தம்தான்!

தரஜா

சசி: ஐயோ! ஐயோ! பிரமாதமாக வர்ணிக்கிறீர்களே அக்கா!

ஜெ: இன்னும் கேள் சசி... மசால்தோசை என்பது தேர்தல் கூட்டணிக்கும் சமம்... மசால்தோசைதான் கூட்டணியில் பெரியகட்சி... கெட்டித் தேங்காய்ச் சட்னி, தக்காளிச் சட்னி, வெங்காயச் சட்னி, புதினா சட்னி, சாம்பார் – இவையெல்லாம் கூட்டணியில் இணையும் உதிரிக் கட்சிகள். இந்த உதிரிகள் நேரத்துக்குத் தகுந்தாற்போலப் பொங்கல், வடை, உப்புமா ஆகியவற்றுடனும் கூட்டு சேரும்!"



சசி: பேஷ்! பேஷ்!

ஜெ: மேலே சொன்ன உதிரிகளை எப்போது வேண்டுமானாலும் மசாலா தோசையுடன் சேர்த்துக் கொள்ளலாம். தேவையில்லை என்றால் ஒதுக்கியும் விடலாம். அதனால் 'பெரிய கட்சி'யின் பலம் அதாவது ருசி குறையாது!

சசி: சூப்பர் அக்கா!

ஜெ: அது மட்டுமா? மசால் தோசை பத்து அடி தொலைவில் வரும்போதே, அதன் மணம் ராக்கெட் வேகத்தில் புறப்பட்டு, நம் மூக்கில் நுழைந்து, நாக்கை நனைத்து விடும்!



சசி: அவ்வளவுதானா? இன்னும் ஏதாவது சொல்லணுமா?

ஜெ: கடைசியாக ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே! ஓ, ஸாரி! அசெம்பிளியில் பேசுகிற 'மூட்' வந்துவிட்டது! விஷயம் என்னவென்றால் மசால் தோசை போல 'வெரைட்டி'யுடன் தயாரிக்கப்படுகிற சிற்றுண்டி எதுவுமில்லை... சாதா மசாலா, ஸ்பெஷல் மசாலா, மைசூர் மசாலா, பொடி தூவிய மசாலா, டிரைஃப்ரூட்ஸ்/மிக்ஸ்ட் வெஜிடபிள் மசாலா – இப்படிப் பல ரகம்! ஆனால் உங்கள் போண்டாவில் சாதா போண்டா, வெஜிடபிள் போண்டா என்று இரண்டே வகைதான்!... மிஞ்சினால் மங்களூர் போண்டா!

சசி: போண்டாவை ஆதரித்துப் பேச இப்ப என்னை அனுமதியுங்கள் அக்கா!

ஜெ: எஸ், புரொஸீட்!

சசி: மசால் தோசை பற்றிச் சொன்னீர்களே, அதைப் பற்றி முதலில் ஒரு விஷயம்; அது ஹோட்டலுக்கும் விலைக்கும் ஏற்றபடி இளைக்கும், பருக்கும்! சுவையும் வித்தியாசப்படும்... ஆனால் போண்டா அப்படியல்ல. இட்லி இளைக்கலாம், வடை இளைக்கலாம், பஜ்ஜி இளைக்கலாம்... ஆனால் போண்டா மட்டும் இளைக்காது!"

ஜெ: ஒரு வாதத்துக்காகக் கேட்கிறேன் சசி... போண்டா இளைத்தால்?

சசி: பக்கோடா ஆகிவிடும்!

ஜெ: தூள்! அருமையான பதில்!



சசி: சுடச்சுடப் பிளேட்டில் கொண்டு வந்து வைக்கப்படும் போண்டாவின் மீது ஆசையாகப் பாய்வது ஹோட்டல்களில் சர்வ சாதாரணமான காட்சி... 'சுரீர்' என்று கையில் சூடு உறைத்தாலும், ஒற்றை விரலால் போண்டாவை மெதுவாக அழுத்தி, உள்ளே இருக்கும் கெட்டியான மாவுப் பகுதியை ஸ்பரிசிப்பது அடடா! அதற்குப் புண்ணியம் செய்திருக்க வேண்டும்!

ஜெ: சரி, அப்புறம்?

சசி: மசாலா தோசையைப் போலவே போண்டாவிலும் சேர்மானங்கள் உண்டு. இஞ்சி, பச்சை மிளகாய், மிளகு, பல் – பல்லாக நறுக்கிய தேங்காய்... இப்படி. அது மட்டுமல்ல; உங்கள் மசாலா தோசையைப் போலவே போண்டாவும் சட்டினிகளுடன் கூட்டணி வைத்துக் கொள்ளும். கூட்டணி இல்லாமலும் இது ஜெயித்து சட்டசபைக்கு – ஐ மீன்,வாய்க்குள் போகும்!

ஜெ: பரவாயில்லையே! நிறையவே யோசித்திருக்கிறாய்!

சசி: இன்னும் ஒரு அதிமுக்கியமான விஷயம் பாக்கி இருக்கிறது. சட்டினிகளை ஒதுக்கி ஓரங்கட்டிவிட்டு, போண்டாவின் தலையில் சுடச்சுட சாம்பாரை ஊற்றி அபிஷேகம் செய்து, போண்டா ஊறியும் ஊறாமலும் இருக்கும்போதே, கெட்டியான ஸ்பூனால் வெட்டி வெட்டி வாய்க்குள் செலுத்துகிற சுகமே சுகம்!... போண்டாவுக்குச் சாம்பார் அபிஷேகம் நடத்தலாம்; மசாலா தோசைக்கு நடத்த முடியுமா?

ஜெ: சபாஷ் சசி!

சசி: இன்னமும் ஒரு பாயிண்ட் பாக்கி இருக்கிறது... அதாவது, மசாலா தோசை, மேல்தட்டு ருசிகர்களின் தேர்வு; ஆனால் போண்டா அப்படியல்ல. சாதாரணர் – சாமானியர்களின் பர்சுக்கு எட்டுகிற ருசிக் குவியல்... போண்டாதான் ஏழைப் _ பங்காளன். நமது புரட்சித் தலைவரைப் போல!

(கைதட்டிப் பாராட்டுகிறார் ஜெயலலிதா.)

ஜெ: இரண்டு தரப்பு வாதங்களும் முடிந்து விட்டன. ஆனால் பட்டிமன்றம் என்றால் தீர்ப்பு வழங்க நடுவர் ஒருவர் இருக்க வேண்டுமே!

("கவலைப்படாதீர்கள்! இதோ நான் இருக்கிறேன்!" என்று குரல் கொடுத்தபடியே வருகிறார் 'துக்ளக்' ஆசிரியர் சோ.)

ஜெ: அட! நீங்களா! எப்ப வந்தீர்கள்?

சோ: உங்க பட்டிமன்றம் ஆரம்பிக்கும் போதே வந்து விட்டேன். அந்தத் தூண் மறைவில் இருந்தேன். அரசாங்க விஷயமென்றால் காது கொடுத்துக் கேட்டிருக்க மாட்டேன். இது அப்படிப்பட்டதல்ல என்பதால் எல்லாவற்றையும் கேட்டேன்!

ஜெ: நல்லதாகப் போச்சு! நீங்கதான் தீர்ப்பு சொல்லுங்களேன்!

சோ: இரண்டு தரப்பு வாதங்களிலும் நியாயங்கள் இல்லாமலில்லை. எனக்கு மிகவும் பிடித்த ஓர் அம்சம் என்னவென்றால் இருவருமே உங்கள் தரப்பு வாதங்களைத்தான் எடுத்து வைத்தீர்களே தவிர, எதிர்த்தரப்பின் மீது சேற்றை வாரி வீசவில்லை. இதுதான் ஆரோக்கியமான அரசியலுக்கு அறிகுறி. இந்தப் பண்பு வளர வேண்டும். பெருந்தலைவர் காமராஜர் ஒருமுறை என்னிடம் ராஜாஜி பற்றிக்....

(ஜெ இடைமறிக்கிறார்)

ஜெ: அந்த அரசியலெல்லாம் வேண்டாம் சோ சார்... உங்க தீர்ப்பு மட்டும்தான் தேவை!

சோ: சொல்றேன். நான் எப்போதுமே, யாருக்குமே பயப்படாதவன். என் அபிப்பிராயங்கள் உங்களது அபிப்பிராயங்களிலிருந்து மாறுபட்டிருக்கலாம். ஆனால் என் அபிப்பிராயங்களிலுள்ள நேர்மையை மட்டும் எவரும் சந்தேகிக்க முடியாது. என் பார்வையில் பழுது இருக்கலாம். ஆனால் நோக்கத்தில் பழுதென்பதே கிடையாது...

ஜெ: தீர்ப்பு! தீர்ப்பு!

சோ: இதோ சொல்லி விடுகிறேன், நல்லா கேட்டுக்குங்க: மசால்தோசையும் சரி, போண்டாவும் சரி – இரண்டுமே வெறுத்து ஒதுக்கப்பட்ட வேண்டிய சிற்றுண்டிகள்! அதில் சந்தேகமே கிடையாது!

ஜெ, சசி: ஏன்? ஏன்? ஏன்?


சோ: மசாலா தோசையின் பூர்வீக வரலாறு தெரியுமா உங்களுக்கு? உடுப்பி ஹோட்டல்காரர்கள் தமிழ்நாட்டில் புகுத்திய சமாசாரம் அது. அதே போல மொட்டையாக 'போண்டா' என்று அழைப்பது மிகத் தவறு. அதன் முழுப் பெயர் 'மைசூர் போண்டா!' இரண்டுமே கர்நாடக மாநிலத் தயாரிப்புகள்! அவை இரண்டையும் ஆதரிப்பதென்பது, காவிரியில் தமிழ் நாட்டுக்குத் தண்ணீர் திறந்து விட மறுக்கிற கர்நாடகாவைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுவதற்குச் சமம்! எனவே, மசாலா தோசையையும் மைசூர் போண்டாவையும் நாம் புறக்கணிக்க வேண்டும். அவசரச் சட்டம் கொண்டு வந்தால் கூடத் தவறில்லை. அப்படிச் செய்யாவிட்டால் தமிழ் நாட்டுக்கு விமோசனமே கிடையாது!

(சொல்லிவிட்டு வெளியேறும் சோவைத் திகைப்புடன் பார்க்கிறார்கள் ஜெயலலிதாவும் சசிகலாவும்)



''எவ்வளவு நேரம் பெல் அடிக்கிறேன்... டக்குன்னு உள்ள வரணும்னு தோணலையா உனக்கு...?''

''ஸாரி ஸார், தொடர்ந்து அடிக்கவே பூஜை மணிதான் அடிக்குதுன்னு சும்மா இருந்துட்டேன்..''



"சும்மா என்னை மிரட்டாதீங்க... உங்களுக்கு முப்பது வருஷ சர்வீஸ் இருக்கலாம்... ஆனா எனக்கு ஒரு வருஷத்துல முப்பது கம்பெனியில வேலை செஞ்ச அனுபவம் இருக்கு தெரியுமா?"



''ஒண்ணும் ஒண்ணும் எவ்வளவு...?''

''ரெண்டு சார்...''

''வெரிகுட்... மினிஸ்டர் ரெக்கமெண்டேஷன்ல இன்டர்வியூவுக்கு வந்த உனக்கு இவ்வளவு அறிவு இருக்கே...''

— தமிழ்

பழைய செருப்பு; உடைந்த நாற்காலி!



“மற்ற நாடுகளில், கேமராவை எடுத்தாலே, வெறுப்பாக ஒரு பார்வையை வீசிவிட்டு, விலகிப் போய் விடுவார்கள். இந்தியாவில் அப்படி இல்லை. ஆர்வமாகப் புகைப்படம் எடுக்க ஒத்துழைப்பு தருகிறார்கள். ஆனால் செயற்கையாக போஸ் கொடுக்கிறார்கள். அது பிடிக்கவில்லை. அவர்கள் செயற்கை முகத்தைக் காட்டுவதற்கு முன்பாகவே, நான் ஃபோட்டோ எடுத்து விடுகிறேன். அல்லது, அவர்களுக்குத் தெரியாமலேயே எடுத்து விடுகிறேன். ரொம்ப அற்புதமான ரிசல்ட் கிடைக்கிறது” இப்படிச் சொல்கிறார் ரோவன் குருரீ *(24)*

ஒரு மாத காலம் சென்னைத் தெருக்களைச் சுற்றி, ஏகப்பட்ட புகைப் படங்களைச் கட்டுத் தள்ளியிருக்கிறார் பிரிட்டனைச் சேர்ந்த இந்தப் பெண் போட்டோகிராபர்!

“இந்தியா ரொம்பக் கலர்ஃபுல். பெண்களின் புடைவை, தெருவோரக் கடைகள், கோவில்கள் என்று எங்கே திரும்பினாலும் வண்ணங்களைக் காண முடிகிறது. மக்களின் திறந்த வெளி வாழ்க்கை என்னை ஆச்சரியப் படுத்துகிறது. குழந்தைகளின் விளையாட்டு, சமையல், குளியல், வியாபாரம், படுக்கை எல்லாமே திறந்த வெளியில் நடக்கிறது. இதைவிட ஆச்சரியமான விஷயம். இங்கே வறுமை இருக்கிறது. ஆனால், மக்களின் முகங்களில் மகிழ்ச்சியையும், நிம்மதியையும் காண்கிறேன். வசதி இல்லாமற் போனாலும் மற்றவர்களுக்கு உதவுகிற குணம் இருக்கிறது. இவை இந்தியாவில் மட்டுமே நான் காணும் விஷயங்கள்” என்கிறார் உலகின் பல நாடுகளையும் பார்த்





• ரோவன்

திருக்கும் இந்த இளைஞி.

'இதற்கு முன்பு, இரண்டு சுவாரசியமான சப்ஜெக்ட்களில் புகைப்படங்கள் எடுத்து, கண்காட்சிகள் நடத்தியிருக்கிறார். 'சிறைச்சாலைகள், சிறுவர் இல்லங்கள் இங்கெல்லாம் சென்று, எடுத்த புகைப்படங்களின் கண்காட்சிக்குத் தலைப்பு 'இடங்கள்...!' அடுத்தது (விட்டுச் சென்ற) சொத்து. இதற்காக வீடு மாறிச் சென்றவர்கள், தம் பழைய வீடுகளை எப்படி (அலங்கோலமாக) விட்டுச் செல்கிறார்கள் என்று போட்டோவாகப் பதிவு செய்கிறார். இப்படி எடுக்கப்பட்ட பழைய செருப்பு, உடைந்த நாற்காலி படங்களைப் பாராட்டாதவர் இல்லையாம்.

சென்னையில் எடுத்த படங்களை, கார்டுகளாகவும், காலண்டர்களாகவும் புத்தகமாகவும் வெளியிடப் போகிறார்.

இதன்மூலம் கிடைக்கும் வருமானம் சென்னை நகரில் உள்ள கார்ப்பரேஷன் பள்ளிக்கூட மாணவர்களுக்கு, கம்ப்யூட்டர் கல்வி அளிக்கும் 'டீச் இந்தியா' திட்டத்துக்குப் போகிறது. இப்போது, இத் திட்டத்தின் கீழ், அறுபது பள்ளிகள் பயன் பெறுகின்றன.

— மௌலி

மறுக்கிறார் மங்கை இரகுபதி!



27.10.2002 கல்கி இதழில் 'அம்மாவுக்கு மட்டும்தான் பயப்படுவேன்' என்ற தலைப்பில் எனதுப் பேட்டி வெளியாகியுள்ளது. அதில் பின் வருமாறு கூறினேன்.

நான் சார்ந்துள்ள அ.தி.மு.க. கட்சிக் கூட்டம் நடத்தும்போது ஏழைகளுக்குப் புடைவை மற்றும் வேஷ்டிகளை வாங்கிக் கொடுப்பேன்.

என்னுடைய தலைமையின் கீழ் செயல்பட்டுவரும் நிலைக்குழு (பொது சுகாதாரம்) வில் உள்ள உறுப்பினர் எங்கள் துறை சம்பந்த பொது மக்களின் கோரிக்கைகளை அதிகாரிகளிடம் சென்று நிவர்த்தி செய்து தருமாறு கேட்டிருப்பார்கள்.

மாநகராட்சியில் சமீபத்தில் நடந்த ரகளையில் தி.மு.க. உறுப்பினர்கள் என்மீது சேர் மற்றும் செருப்பை வீசினார்கள் அதை தடுக்கும்போது என் தோளின் மீது பட்டு காயம் ஏற்பட்டது. இதனால் கோபம் ஏற்பட்டது. இருந்தாலும் பொறுமையாகத்தான் இருந்தேன்.

இவ்வாறு நான் சொன்னவை, திரித்து எழுதப்பட்டுள்ளன.

- மங்கை ரகுபதி
ஐம்பத்தைந்தாவது வட்ட மாமன்ற உறுப்பினர் சென்னை மாநகராட்சி

சென்னை மாகநராட்சியின் சுகாதார நிலைக் குழு தலைவராகவும், 55வது வட்ட கவுன்சிலராகவும் செயல்படும், திருமதி மங்கை ரகுபதி பற்றி 'கல்கி' பேட்டி கட்டுரை (27.10.2002) படித்தோம். உண்மையான பல தகவல்களை நேர்காணல் மூலம் திரட்டிய கட்டுரை ஆசிரியருக்கும் 'கல்கி' இதழுக்கும் பாராட்டுக்கள்.

கு.சரவணன் மற்றும் நண்பர்கள்,
அயன்புரம், சென்னை



• கல்யாணி - தொடரில்

சேனைக் கிழங்கு வீடு!

● ஏ.எக்ஸ்.என்.னின் "ஹு" டேர்ஸ் வின்?" நிகழ்ச்சி வெகு பிரபலம். அதில் கம்பியின் மீது ஏறி ஒரு குன்றிலிருந்து இன்னொன்றைக் கடக்க முயற்சிப்பதைப் பார்த்திருப்போம். ஆனால் சமீப நிகழ்ச்சியில் ஒரு வித்தியாசம். இரண்டிற்கும் நடுவே ஒரு மிகப் பெரிய குளம். அதில் பசியோடு காத்திருக்கும் பல முதலைகள், மேலே கம்பியில் நடப்பவர்களை ஆவலோடு (எதிர்)பார்த்துக் கொண்டிருக்கின்றன!

● பொதிகையில் ஜலதோஷம் தொடர்பாக ஒரு டாக்டர் விவரங்களை அடுக்கினார். நோய் எதிர்ப்புக் குறைவினால் உண்டாவதுதான் ஜலதோஷமும் சளியும் என்றார். அப்போது 'உடனடியாகத் தேவைப்படுவது சளியை நீக்கும் மருந்தல்ல. நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் மருந்துதான்' என்றது சுவை.

● "வாழப்பாடி மரணம்" என்ற செய்தி சன் டீ.வி திரைப்படத்தின் போது கீழே ஓடவிடப்பட்டது. அதேபோல், சன் நியூஸிலும் ஒரு செய்தியின் வீடியோ காட்டப்படும்போது, கீழே வேறு தலைப்புச் செய்திகள் காட்டப்படுகின்றன. ஆனால் இதே சன் குடும்பத்தைச் சேர்ந்த தேஜா சானலில் ஒரு வித்தியாசமான காட்சியைக் காண நேர்ந்தது. பாடல் காட்சிகளின்போது கீழே தலைப்புச் செய்திகள்!


● சுமார் கால் நூற்றாண்டாகக் காட்டப்படும் ஒரு பற்பொடி விளம்பரத்தில் ஒருவர் கரும்பை அநாயாசமாகப் பற்களால் கடித்து உரித்துத் தின்பார். ஒரு கரும்புத் துண்டு என்பதால் ஓகேதான். ஆனால் ஜெயா டீ.வி நிகழ்ச்சி ஒன்றில், உரிக்காத 58 தேங்காய்களின் மட்டைகளைப் பற்களாலேயே ஒருவர் உரித்தார். பிறகு அந்தத் தேங்காய்கள், அருகிலிருந்த செல்வ விநாயகருக்கு உடைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. தேங்காய்களைக் கழுவிய பிறகா, இல்லையா என்பது குறிப்பிடப்படவில்லை.

● ஸ்டார் டீ.வியில் 'கல்யாணி' என்று ஒரு தொடர். அதில் டைட்டில் சாங்கின்போது, ஒரு காட்சியில், பாதிக் கோபுரத்தில் உட்கார்ந்தபடி கதாநாயகி! கோவில்களின் மேல் தளத்தில் நாயக நாயகி டூயட் பாடியபடி விரசமான அசைவுகளைப் புரிவது திரைப்படங்களில் சகஜமாகிவிட்டது. விரைவில் டீ.வி தொடர்களிலும் அந்த நிலை வந்துவிடுமோ?

● 'சன்னில் தென்னிந்திய சமையற்காரர்கள் சங்கம் நடத்திய காய்கனிக் கண்காட்சியைக் காண்பித்தார்கள். ஏதோ மார்க்கெட் போல, காய்கனிகளைப் பரப்பி வைத்துவிடவில்லை. நல்ல சிற்பிகளைப் போல அவற்றைச் செதுக்கி அற்புத உருவங்களை உருவாக்கினர். சேனைக் கிழங்கினால் கட்டப்பட்ட வீடு, பீட்ரூட்டினால் ஆன ரோஜா, முள்ளங்கியினால் ஆன உயரமான கேக் என்பதிலிருந்து, மனித உருவங்கள் வரை அசத்திவிட்டார்கள்.

— சேனல்பாய்

குறையொன்றுமில்லை



பிரும்மண்யோ தேவகி புத்ர :
பிரும்மண்யோ மது சூதன :

- விஷ்ணு, பிரும்ஹன் - இதெல்லாம் யாரென்று கேட்டால், தேவகி புத்ரன்தான் இப் பெயர்களுடன் விளங்குகிறான். - இப்படிச் சொல்கிறது உபநிஷத். அவன்தான் பரமாத்மா என்று எடுத்துக் காட்டுகிறது.

இப்படியே ஒவ்வொன்றும் - பகவானுடைய பிரபாவத்தைச் சொல்ல வந்த அவதாரங்கள் அனைத்தும் - 'பரமாத்மா பரமாத்மா' என்றே அவனைச் சொல்கின்றன - முக்கியமான அதிகாரிகளைக் கொண்டு அங்கங்கே நமக்குக் காட்டித் தருகின்றன.

அவன் மனித வேஷம் போட்டுக் கொண்டு வந்ததனாலேயே அவன் மனிதன் என்று நினைத்துவிடக் கூடாது.

தேரழுந்தூர் ஸ்ரீமத் ஆண்டவன் என்கிற மகான், பாதுகா சஹஸ்ரத்துக்கு வியாக்கியானம் பண்ணுகிறபோது சொல்கிறார்.

விச்வாமித்ரர் வந்து ராமனை யார் என்று சொன்னார். வசிஷ்டரையும் சேர்த்துக் கொண்டு சொன்னார் - அதன் பிறகு பரசுராமர் கர்வபங்கத்திலும் ராமன் யார் என்பது தெரிந்துபோயிற்று.

'என்னுடைய பாபத்தை உலுக்கித் தள்ளி எனக்கு சிரேயஸைக் கொடுத்தாயே!' என்று பரசுராமர் ராமனைக் கொண்டாடுகிறார்.

அந்தச் சமயத்தில் ராமனே பரசுராமனைப் பார்த்து, 'நான் யார் என்பதை இப்போது உனக்குக் காட்டுகிறேன். என்னுடைய பெருமை உனக்குத் தெரியாது' என்று, இரு கைகளாலும் பரசுராமர் இறுக்கிப் பிடித்துக் கொண்டிருந்த வில்லை அநாயாசமாகப் பகவான் வாங்கிக் கொண்டான். அதனால் அவன் யார் என்பது காட்டப்பட்டது.

வசிஷ்டர் வந்து ஸ்ரீ ராமனிடம், "ஹே ராமா! பரதன் சொன்னான், இந்தப் பாதுகையில் நின்று, அதை ஈந்தருள வேண்டும்" என்று கேட்டார்.

பாதுகா சஹஸ்ரத்திலே ஸ்வாமி தேசிகன் என்ன கேட்கிறார்...?

"மூத்தவனுடைய பாதுகையை இளையவன் ஆராதிப்பது தர்மம். பக்தியால் பரதன் கேட்டான். அது தர்மம்; ஒப்புக் கொள்

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்


14

கிறேன். ஆனால், அம்மா பாதுகையே! எதை மனத்திலே நினைத்துக் கொண்டு, அந்த வசிஷ்டர் இந்தப் பாதுகைகள் லோக க்ஷேமத்தை உண்டு பண்ணும் என்று சொன்னார்? இவ்வளவு காலமும் அவரே குல குரு - ஆனால் அஜ மகாராஜாவுடைய பாதுகைகள் லோக க்ஷேமத்தை உண்டு பண்ணும் என்று என்றைக்காவது அவர் சொன்னதுண்டா? தசரதனுடைய பாதுகைகள் உலகத்தை ரக்ஷிக்கும் என்று சொன்னதுண்டா? இப்போது யார் ராமன் என்பதை வசிஷ்டர் காட்டிக் கொடுக்கிறார். விச்வாமித்ரர் ஏற்கெனவே ராமன் யார் என்பதைச் சொன்னார்; இப்போது வசிஷ்டரும் காட்டிக் கொடுக்கிறார்... இதற்கப்புறமும், 'ராமனை நான் மனிதன் என்று நினைக்கிறேன்' என ஒருவன் சொன்னானானால், ராமாயணத்தை அவன் மூடி வைக்க வேண்டியதுதான்" என்று சொல்லிவிட்டார் சுவாமி தேசிகன்!

ஆகையினாலே, அந்த எம்பெருமானுடைய பாவம், அந்த பரதத்வம் என்பது மீண்டும் மீண்டும் மீண்டும் மீண்டும் — பதத்துக்குப் பதம் ராமாயணத்திலே காட்டித் தரப்படுகிறது. ஒவ்வொரு பதத்திலேயும் எங்கு தொட்டாலும் அவனுடைய பரதத்வம்தான்.

ஜடாயுவுக்கு ஸம்ஸ்காரம் பண்ணுகிறபோது, பகவான் ஒரு வார்த்தை சொல்லுகிறான். 'உயர்ந்த யக்ஞ யாகாதிகளெல்லாம் பண்ணுகிறவர்கள் எந்த உத்தமமான கதியை அடைவார்களோ, மறுபடியும் திரும்பி வராத சாச்வதமான நித்யானந்தத்தை அடையக் கூடியவர்கள் என்ன தபஸ் பண்ணி அடைவார்களோ, அந்த உத்தம லோகத்தை நீ அடையக் கடவாய்' என்கிறார்.

இது யாரால் முடியும்? யாரால் இப்படிச் சொல்ல முடியும்...? ஒரு சாமானியமான மனிதனால் முடியுமா...?

சபரி சொல்கிறாள் :

ரொம்ப கெட்டிக்காரி அந்த சபரி. - ரகுவீர கத்யத்தில் இது வருகிறது. சபரி சொல்வதாக வருகிறது. 'சபரிக்கு மோக்ஷம் அளித்தவனே' என்று சொல்லவில்லை ரகுவீர கத்யத்தில். 'சபரி, மோக்ஷம் போனதற்கு சாட்சியாய் நின்றவனே...!' என்றுதான் வருகிறது. ஏன் என்று கேட்டால், அதற்கு சபரியே பதில் வைத்திருக்கிறாள். அவள் சொல்வதைப் பாருங்கள் :

"அப்பனே! உன் திவ்யமான பார்வை என் மேலே பட்டது. அந்தப் பார்வை பட்டவுடனேயே மறுபடியும் திரும்பி வருதல் இல்லாத சாச்வதமான நித்யமான உத்தம லோகத்துக்கு நான் இதோ போய்க் கொண்டேயிருக்கிறேன்..." என்று சொல்லி விட்டாள்!

அவள் உத்தம லோகம் போவதற்கு வெறுமே சாட்சியாய் நின்றான் பரமாத்மா. அவள் சொன்னதையும், அவள் உத்தம லோகம் போனதையும் ஆமோதித்தான்.

அப்படிப்பட்ட பரமாத்மா, பார்த்த மாத்திரத்திலே சபரிக்கு மோக்ஷம் சித்திக்கச் செய்தவன், அவனுக்குப் போய் ஒன்றும் தெரியாது என்று சொல்லிவிட முடியுமா!

அக்னிப் பிரவேச காலத்திலே தேவர்களெல்லாம் வந்து என்ன சொல்கிறார்கள்...? நீ யார் என்பதை நீ உணர வில்லை.

பகவான், விஷ்ணு:, கிருஷ்ண:

பிரஜாபதி:, ஜகத்ஸர்வம் சரீரத்தே; த்வம்

"உண்ணாவிரதத்துக்கு வந்தவங்கள நீங்க, உண்மையாவே பட்டினி போட்டிருக்கக் கூடாது தலைவரே!"

"ஏன்யா?"

"பக்கத்துல கஞ்சித் தொட்டியோ, முட்டை பிரியாணியோ கிடைக்குமான்னு புலம்பறாங்க!"

- அம்பை தேவா

ஓம்கார:, த்வம் வஷட்கார:, வஸூனாம் அஷ்டமோவஸு:, சுவாஹா, சுவதா எல்லாம் நீதான்" என்றார்கள்.

எம்பெருமான், அவதார காலத்திலே மனித வேஷம் போட்டுக்கொண்டு வந்தாலும் அவன் பரமாத்மா என்பது தெரிந்து போய் விடுகிறது. அவனாலேயே அதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

இப்படிப்பட்ட ரீதியில் விளங்குகிற பரமாத்மாவுக்குப் பதினொரு லட்சணங்கள் சொல்லப்படுகின்றன.

முதல் லட்சணம் சர்வேச்வரத்வம். இந்த முதல் லட்சணம் இருப்பதனாலேதான் பரமாத்மா என்று அவன் அழைக்கப்படுகிறான்.

சர்வேச்வரத்வம் என்றால் என்ன அர்த்தம்? 'சர்வத்தையும் கட்டளையிடுபவன்' என்று அர்த்தம். அவனின்றி அணுவும் அசையாது. அவன் பிரேரேபிக்கவில்லை என்றால், அவன் நியமிக்கவில்லை

என்றால், அவன் கட்டளையிடவில்லை என்றால்... யாராலேயும் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது. அவன்தான் காரணமாயிருக்கிறான். அவன் கட்டளையினால்தான் சர்வ காரியங்களும் நடக்கின்றன. நியமனம் பண்ணக் கூடியவன் சர்வ நியம்தா!

கடோபநிஷத் என்கிற உபநிஷத்தானது சொல்கிறது:

'இதைப் பண்ணு அதைப் பண்ணாதே என்று நம்மைத் திருத்தி, பணிகொள்ளக் கூடியவன் எம்பெருமான்.

ஆகையினால்தான் சர்வேச்வரத்வம் என்ற குணம் மற்ற இடத்திலே பொருந்தாமல் அவனுக்குப் பொருந்துகிறது.



தமிழ்ப் பாசுரத்திலே,

'நிலைத்த தாரகனாய், நியமிக்கும் இறைவனுமாய்' என்று சொன்னார்: நாம் இருப்பதற்கு இந்த வாஸ ஸ்தானத்தைத் தந்தவர் பரமாத்மா.

நாம் இந்த உலகிலே வாழ்வதற்காக, இவ்வுலகம் விஸ்தீரணமாய் விளங்கக் கடவது. தாராளமாய் இருக்க வேண்டும்; யாரும் நெருக்கடியாய் _ இருக்க இடமின்றி வசிக்கக் கூடாது. நிறைய இடத்தோடு, விசாலமான இடத்தோடு, விசால ஹ்ருதயத்தோடு, இருக்க வேண்டும் என்பதற்காகவே இவ்வுலகை ஏற்படுத்தினான்.

ரொம்ப நெருக்கமாக, ஒரு சின்ன இடத்திலே பத்துப் பேர் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கக் கூடாது; அப்படியிருந்தால் அது கெடுதல் என்கிறது சாஸ்திரம்.

மனு ஸ்ம்ருதியிலே சொல்கிறார்:

'ஒரு விளக்கேற்றி வைக்கப்பட்டிருக்கிறது. அந்த விளக்கினுடைய நிழல் கீழே விழுகிறது. அந்த நிழலில் உட்காராதே!' என்று சாஸ்திரம் சொல்கிறது. ஒரு மனிதனுடைய நிழலில் உட்காராதே என்கிறது. உட்கார்ந்தால் என்ன பண்ணும் அது இரண்டும்...? தீப நிழலும் மனிதன் நிழலும் நம்மை என்ன பண்ணிவிடும்...? நாம் சம்பாதித்து வைத்திருக்கிறோமே, கொஞ்சம் புண்ணியம்... அதையும் அடித்துவிடும் இது.

பிரும்ம வித்துக்கள் _ மகான்கள் இருக்கிறார்கள் பாருங்கள்... அவர்களுடைய நிழலில் நாம் ஒதுங்க வேண்டும். அப்படி ஒதுங்கினால் பாபமெல்லாம் நீங்கும்.

தீப நிழலில் உட்கார்ந்தால் என்ன ஆகிறது...? நம் மூச்சுக் காற்று பட்டு விளக்கு அணையலாம். சுபமான ஒரு காரியம் அப்போதுதான் நடக்கப்போகிறது... தாம்பூலத்தைக் கையிலே கொடுக்கப்போகிறார்கள். அந்தச் சமயம் பார்த்துத் தடால் என்று ஒருத்தர் பெரிசாகத் தும்முகிறார்! அதை அடக்கிக் கொள்ள சக்தி இல்லை அவருக்கு...!

தும்மல் வருகிறபோது நாலு பக்கமும் பார்க்க வேண்டும். பெரிசாகத் தும்மிவிடக் கூடாது. ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இதரர்கள் சிரமப்படுவார்கள் அல்லவா! நல்ல தருணத்தில் ஒருத்தர் தும்மினால், அது மனத்திலே ஒரு வியசனத்தை உண்டுபண்ணும் அவர்களுக்கு. 'அதனால் ரொம்ப ஜாக்கிரதையாய் இருங்கள்' என்று சாஸ்திரம் எச்சரிக்கிறது.

அதே மாதிரிதான் விளக்கு அணைந்து போவதும் அசுபம் என்று மனத்துக்கு வியாகூலம் ஏற்படுத்தும். ஆகவேதான் விளக்கினருகே போய் உட்கார்ந்து கொண்டு பெருமூச்சு விடக்கூடாது.

அதே மாதிரி, ஒரு மனிதனுக்கு ரொம்ப நெருக்கமாகப் போய் உட்கார்ந்தோமானால், அதனால் பல வியாதிகள் சம்பவிக்கும். அதனால் கொஞ்சம் தள்ளி உட்கார்ந்து கொள்ளுங்கள் என்கிறது சாஸ்திரம்.

இதையெல்லாம் உத்தேசித்துத்தான், நாம் விசாலமான இடத்திலே இருக்க வேண்டும், என்று பூ ஸூக்தத்திலே பிரார்த்தனை பண்ணுகிறது மந்திரம்.

அப்படிப்பட்ட இடத்தை நமக்கு அளிப்பவனாக, நிலை தந்த தாரகனாக இருக்கிறான் பரமாத்மா. நியமிக்கும் இறைவனாகவும் அவனே இருக்கிறான்.

(வளரும்)



ஆசிர்வதிக்கப்பட்ட கவிதை





ஆசிர்வதிக்கப்பட்ட வார்த்தைகள்
வேண்டும் கவிதைக்கு

அதிகமாகவே மதிப்பெண்
வேண்டும் மாணவனுக்கு

கால்கள் நிற்காமல் ஓட
வேண்டும் பந்தயக்காரனுக்கு

கருணை மனம் கொண்ட மழை
வேண்டும் விவசாயிக்கு

சமநிலையில் இயங்க
வேண்டும் திருப்தியாளனுக்கு

மனத்தின் வண்ணங்கள் குறையாமல் இருக்க
வேண்டும் ஓவியவாதிக்கு

நாள் பிழையின்றி இயங்க
வேண்டும் துவங்குபவனுக்கு

காலத்தின் நீட்சியில்
அவரவருக்கான நம்பிக்கை சமிக்ஞைகள்
அழைத்தபடி...
அரவணைத்தபடி...

— சி.கே. ராஜாசந்திரசேகர்

சிவப்புக் கொடி!

✉ "ஆசிய விளையாட்டுப் போட்டியில், சுனிதா ராணி சறுக்கல் ராணியாகப் போய்விட்டது வேதனையைத் தருகிறது. இனி வரும் போட்டிகளிலாவது தங்கப் பதக்கம் நமது விளையாட்டு வீரர்களின் நேர்வழி குறிக்கோளாக இருக்கட்டும்!"

திருச்சி - 21, ஆர். அப்துல் சலாம்.

சுவடுகள்

✉ கடந்த கால இலக்கிய விஷயங்களையும், நிகழ்வுகளையும் தனக்கே உரிய சீரிய நடையுடன் எங்களுக்குப் பரிமாறிய திருப்பூர் கிருஷ்ணன் எங்களையும் இலக்கிய வீதிக்கு அழைத்துச் சென்றார்.


கோபிசெட்டிப்பாளையம், ஜி.கே.எஸ். மூர்த்தி.

✉ "சுவடுகளை" விருப்பு வெறுப்பின்றி திரும்பிப் பார்த்திருந்தார் திருப்பூர் கிருஷ்ணன். என் மனமும் (இந்தத் தொடரும்) நிறைவடைந்தது என்று முத்தாய்ப்பாக அவர் குறிப்பிட்டிருந்ததின் வாயிலாக அவரது உள்ளத்து உணர்வினைப் புரிந்து கொள்ள முடிந்தது!

சென்னை — 93, எஸ். சையது முகமது.

✉ ஒவ்வொரு வாரமும் இலக்கியவாதிகள் பற்றிய சொற்சுவை, பொருட்சுவை, நகைச்சுவை கலந்து எழுதியது தேன் சுவையாக இனித்தது. அனைவரும் பாதுகாக்க வேண்டிய அரிய பொக்கிஷம்.

மதுரை — 9, திசைமுத்து.



✉ இலக்கிய உலகிற்கு, சுவடுகளின் பங்கு மகத்தானது, மாண்புமிக்கது.

நெய்வேலி, சுபஸ்ரீகாந்த்

✉ 'அரக்கர்கள் பிடியில் அமீனா' படித்த போது நெஞ்சே வெடித்துவிடும்போல் இருந்தது. எப்படியோ உலக மக்களின் பார்வை அந்தப் பெண்மணியின் மேல் திரும்பி இருப்பது சற்று ஆறுதலான விஷயம்.


திருவாரூர், எஸ். பாலச்சந்தர்

✉ தலையங்கம் சரியான சமயத்தில் மத்திய அரசுக்குக் கொடுத்துள்ள சரியான எச்சரிக்கை. இணைறு வெட்ட பூதம் புறப்பட்டது போல அமைந்துள்ளது பாகிஸ்தான் தேர்தல்! பாகிஸ்தான் ஆதரிக்கும் தாலிபான் வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளது மிகவும் வருந்தத்தக்கது! அதனால் பாக். எல்லையிலிருந்து இந்திய துருப்புக்கள் வாபஸ் பெறுவதையும் டிசம்பர் 16க்குப்



பொய்யில் பூத்த நிஜம்

✱ 'ஆகா, ஐயோ, அடடா, அப்பாடா...' பொய்யில் பூத்த நிஜம் படித்தபோது மனத்தில் எழுந்த குரல்கள்! ராஜா - சகுந்தலா பிரிவை அதிகப்படுத்தும்படி பாத்திரங்கள் அறிமுகமாகும் போது முதலில் ஆசிரியர் மேல் கோபம் ஏற்பட்டது. மொத்தத்தில் சமூக அக்கறை மின்னும்



பிறகு புற ராணுவ நிதி நிறுத்தப்படும் என்ற மத்திய அரசின் அறிவிப்பையும் மறு பரிசீலனை செய்ய வேண்டும். பயங்கரவாதத்துக்குப் பச்சைக்கொடி காட்டும் பைத்தியக்காரத்தனத்தை விட்டுவிட்டு பயங்கரவாதத்துக்குப் பாரதம் சிகப்புக்கொடி காட்ட வேண்டும்!

நெய்வேலி – 3, ஆர். காஞ்சனா

✉ எல்லா அரசு துறைகளிலும் பெட்டிஷன் பெரியசாமியைப் போன்று இருந்துவிட்டால் ஊழல் என்ற பேச்சுக்கே இடம் இருக்காது. அத்துடன் நிதிப் பற்றாக் குறையினால் அரசு நிர்வாகம் ஸ்தம்பிக்கும் நிலையையும் மாற்றி அமைக்கலாம்.

சென்னை – 41. கன்னி. சுப்பிரமணியன்.

✉ அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு பெட்டிஷன் பெரியசாமி இருந்தாலே போதும். ஊழல், நிர்வாக சீர்கேடு என்ற பேச்சுக்கே இடமிருக்காது.

மதுரை – 4, வீ.பா. கிருஷ்ணன்.

✉ "மெதில் ஐஸோசயனைட் வாயு கசிவின் கோரத்தை மீண்டும் ஒருமுறை நினைவுக்குக் கொண்டு வந்து எங்களை உலுக்கிப் போட்டன அந்த கறுப்பு – வெள்ளை புகைப்படங்கள்!"

ஸ்ரீரங்கம், எஸ். கௌரிலக்ஷ்மி.

✉ அ.தி.மு.கவின் 31ஆண்டுகால சாதனைப் பட்டியலை ஜெயலலிதா வெளியிட, அ.தி.மு.க. ஆட்சியின் வேதனைப்பட்டியலை மக்கள் வெளியிட, சோதனை மேல் சோதனை போதுமடாசாமி என்று பாடத் தோன்றுகிறது இரண்டாவது கார்ட்டூனைப் பார்த்ததும்!

சென்னை – 91, கே.என். பாலகிருஷ்ணன்

வாஸந்தியின் படைப்புகளில் இதற்கும் சிறப்பான இடம் உண்டு.

குட்டலாடம்பட்டி, கொ. மூர்த்தி.

✱ வாஸந்தியின் எழுத்தாற்றலுக்கு, கருத்துச் செறிவுக்கு, சமூகப்பார்வைக்கு மற்றும் ஓர் எடுத்துக்காட்டு 'பொய்யில் பூத்த நிஜம்.' அற்புதமான நாவல் என்று சொல்வது, தேன் இனிப்பானது என்று சொல்வதைப் போல. இயற்கையான போக்கில் ராஜாவின் ஞாபக முடிச்சு அவிழ்வது மிக அருமை.

சென்னை – 78, கே.எஸ். நாராயணன்




✱ இன்ச் பை இன்சாக மனோதத்துவ ரீதியில் கதையைச் செதுக்கி ஒவ்வொரு வாரமும் பரபரப்பாக அடுத்த வாரம் என்ன நிகழ்வு என்று ஆவலோடு எதிர்பார்க்கச் செய்தது பொய்யில் பூத்த நிஜம்.

திருநெல்வேலி – 7, வி. திலகம்

புன்னகை பூமி 2





தாய்லாந்து, இந்திய மன்னர்களின் ஆதிக்கத்தில் இருந்தது என்று சொன்னால் ஆச்சரியமாய் இருக்கிறதில்லையா? தாய்லாந்து, பர்மா, கம்போடியா, வியட்நாம், இந்தோனேசியா, மலேசியா உட்பட்ட இந்த தெற்கு ஆசியாவின் சரித்திரமே அதுதான். பதிமூன்றாம் நூற்றாண்டிலேதான் தாய்லாந்து தோன்றியது. அதற்கு முன் 1300 வருடங்கள் தாய்லாந்து நின்றிருக்கும் இடம் இந்திய ராஜாங்கம் போல இயங்கி வந்தது.

இந்தப் பிரதேசத்தின் அப்போதைய பெயர் 'சுவர்ண பூமி'. நாகரிகம் அடையாத சுவர்ண பூமியின் மக்கள் "தெற்கின் காட்டுமிராண்டிகள்" என்று அழைக்கப்பட்டார்கள். சொர்ண பூமியின் சரித்திரத்தில் ஒரு திருப்புமுனை கி.மு. 276 இல் நடந்தது. அந்தப் பிரதேசத்தின் "சௌப்ரயா" ஆற்றின் மேற்குக் கரையில் 'சோனா', 'உத்தரா' என்ற இருவர் கப்பலில் வந்து இறங்கினார்கள். இருவரும் இந்தியாவிலிருந்து வந்த புத்த பிட்சுக்கள். அசோகரால் புத்த மதத்தைப் பரப்ப அனுப்பப்பட்டவர்கள். இவர்களின் வருகை தெற்கு ஆசியாவின் வரலாற்றை மாற்றி அமைத்தது. இவர்கள் மூலமாய் அங்கே புத்த மதமும் இந்து மதமும் பரவின.

புத்த பிட்சுக்கள் வருவதற்கு முன்பே கடல் மார்க்கமாய் தெற்கு ஆசியாவிற்கு இந்திய மாலுமிகளும், வியாபாரிகளும் வந்திருக்கிறார்கள்.

கப்பலில் சரக்குகள் கொணர்ந்து வியாபாரம் செய்த இந்தியர்கள், இரண்டு காரணங்களால் தாய்லாந்தின் துறைமுக நகரங்களில் தங்க வேண்டியிருந்தது. சரக்குகளை விற்று மாற்றுப் பொருட்கள் வாங்க அவகாசம் தேவைப்பட்டது ஒரு காரணம். இரண்டாவதாய், பருவக் காற்று கோடை காலத்திலும் குளிர் காலத்திலும் திசை மாறியதால், இந்தியாவிலிருந்து வந்த வியாபாரிகள், காற்றின் போக்கு சாதகமாக மாறும் வரை அங்கேயே தங்கவேண்டியிருந்தது. இந்தியர்களின் தற்காலிகக் குடியிருப்புகள் இப்படித்தான் ஆரம்பித்தன.

பின்னர் இந்தியர்கள் உள்ளூர் மக்களுடன் கலந்தார்கள். அவர்களைக் கவர்ந்தார்கள். சிலர் உள்ளூர் இனத் தலைவர்களின் புதல்விகளை மணந்து கொண்டார்கள். இனத் தலைவர்களின் குடும்பத்தோடு சம்பந்தப்பட்டதால் இந்தியர்களுக்கு எளிதாய்ச் செல்



ஆனந்த் ராகவ்

வாக்கும் அங்கோரமும் வந்து சேர்ந்து, அவர்கள் போதித்த மத நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் அத்தனையையும் இந்தப் பிரதேசம் ஏற்றுக் கொண்டது. இப்படி ஐக்கியமான இந்தியர்கள் தங்களின் மேலான சமூக அந்தஸ்தினால் முக்கியத்துவம் அடைந்தார்கள். நாளடைவில் தலைவர்களாகி நாடாளத் துவங்கினார்கள். மன்னராட்சி முறை வந்தது. பெரும்பாலான மன்னர்கள் இந்தியர்களாய் இருந்தார்கள். இப்படித் தொடங்கிய இந்திய மன்னராட்சியில் மன்னரின் வாரிசுகளே ஆட்சி புரிந்து வந்ததால், ராஜவம்சத்தினர் எல்லோரும் இந்தியர்களாகவோ அல்லது இந்தியர்களின் ஆளுகையில் இருப்பவர்களாகவோ இருந்தார்கள். இது போல அமைந்த இந்திய ராஜாங்கங்களின் முதல் நூற்றாண்டு தொடங்கி பதிமூன்றாம் நூற்றாண்டில் முடிந்த, சரித்திரத்தைச் சுருக்கமாய்ப் பார்க்கலாம்.

முதலாம் நூற்றாண்டில் இந்தியர்களால் உருவாக்கப்பட்ட ராஜாங்கங்களில் முதன்மையானது புனான் (FUNAN) வம்சம். இது கௌடின்யா என்ற பல்லவ நாட்டு பிராமணன் ஒருவனால் உருவாக்கப்பட்ட வம்சம் என்று நம்பப்படுகிறது. இதைத் தவிர மோன்கள், கெமர்கள், சம்பா, மலேயர்கள் என்று நான்கு இனத்தவர்கள் தெற்கு ஆசியாவில் இருந்தார்கள். இவர்கள் அத்தனை பேரும் இந்தியர்களாகவோ, அல்லது இந்தியக் கலாசாரத்திற்கு அடிமையானவர்களாகவோ இருந்தார்கள்.

நான்காம் நூற்றாண்டில், இந்தியாவில் சமுத்திர குப்தர் இந்தியாவின் தெற்குப் பகுதி வரை ஆட்சியைக் கைப்பற்றிய வரலாற்றுத் திருப்பம் தெற்கு ஆசியாவில் இந்தியத் தாக்கத்தை அதிகப்படுத்தியது. தெற்கில் இருந்த பல்லவர்கள், புது ராஜ்ஜியம் தேடி தெற்கு ஆசியாவை நோக்கி வர ஆரம்பித்தார்கள்.

ஐந்தாம் நூற்றாண்டு வரை கோலோச்சிய இந்திய புனான் வம்சம், ஆறாம் நூற்றாண்டில் வீழ்ந்தது. புனான் ஆட்சியைக் கைப்பற்றியவர்கள் 'சென்லா' இனத்தின் வழி வந்த 'கெமர்'கள். கெமர் வம்சமும் இந்தியர்கள் என்பதால், இந்தியத் தொடர்பு தொடர்ந்தது.

பதினோராம் நூற்றாண்டில் சோழர்கள் படையெடுப்பினால் பலம் இழந்திருந்த

ஸ்ரீவிஜய வம்சத்தை, கெமர் மன்னன் சூர்யவர்மன் கைப்பற்றி கெமர் ராஜ்ஜியத்தை இன்னும் அதிகரித்தான். அதே நூற்றாண்டில் கெமர் அரசன் இரண்டாம் சூர்யவர்மன் தலைமையில் இந்திய கெமர் ராஜாங்கம் பெரும் சக்தியாய் விளங்கியது. தெற்கு ஆசியாவின் பெரும்பாலான பகுதிகளை ஆண்டவர்கள் இந்திய கெமர் மன்னர்கள். இந்தப் பிரதேசத்தின் இந்தியத் தாக்கத்துக்குக் காரணமே கெமர் அரசுதான்.

இந்த களேபரத்தில் நம் கட்டுரை நாயகர்களான 'தாய்'கள் எங்கிருந்தார்கள் என்று கேட்கிறீர்களா? 'யுனான்' என்ற இனத்திலிருந்து உதித்த 'தாய்' மக்கள் தெற்கு ஆசியாவிலேயே இருக்கவில்லை. அவர்கள் தான் இந்தப் பிரதேசத்தின் 'கறுப்புக் குதிரைகள்'.



தாய் இனத்தவர்கள், தெற்கு ஆசியாவின் மண்ணுக்குச் சொந்தமில்லாமல் வடக்கே சீனாவின் கீழே சுவடு தெரியாமல் இருந்தார்கள். சீனாவுக்கு அருகே இருந்தாலும், யுனான்களும் இந்திய கலாசாரத்துக்கு அடிமையானது ஓர் ஆச்சரியம். அவர்களின் பூமி "காந்தாரா" என்று அழைக்கப்பட்டது. அவர்களின் அரசு "விதேய ராஜ்யம்" என்ற பெயர் பெற்றிருந்ததும், தலைநகர், "மிதிலா" என்று அழைக்கப்பட்டதும், சுக்கோதாய் என்கிற தாய் அரசின் முதல் அரசனுக்கு 'இந்திராதித்யா' என்ற பெயர் இருந்ததும் கவனிக்கப்பட வேண்டியது. சீனர்களின் காலடியில் இருந்த தாய்களின் பூமி, சீனர்களால் பறிக்கப்பட்டு (அப்போதே ஆரம்பித்து விட்டார்கள்!) போரில் தோற்பதும் திரும்பக் கைப்பற்றுவதுமாய்ப் பல நூற்றாண்டுகள் தாய் மக்கள் போராடிக் கொண்டிருந்தார்கள். ஏழாம் நூற்றாண்டில் தான் அவர்களுக்கென்று சுதந்திர ராஜ்யம் அமைந்தது. பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை சீராக ஆண்டு கொண்டிருந்த தாய்கள், மங்கோலியப் படையெடுப்பால் தங்களின் பூமியை முற்றும் இழந்தார்கள். மங்கோலிய அரசன் குப்ளாய்கனால் தோற்கடிக்கப்பட்டு தாய்கள் அங்கிருந்து விரட்டப்பட்டார்கள். வட பகுதியிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட 'தாய்' மக்கள் சிதறிப் போய் தெற்கு ஆசியாவில் கெமர்கள், மோன்கள் போன்ற இந்திய அரசுகள் ஆண்ட மற்ற பகுதிகளில் வந்து தஞ்சம் புகுந்தார்கள். அப்படிச் சிதறிப் போய் ஒண்ட வந்தவர்கள், அந்தப் பிரதேசத்தையே கைப்பற்றும் அளவுக்குப் பெரிய சக்தியாய் உருவெடுத்ததுதான் தெற்கு ஆசியச் சரித்திரத்தின் அடுத்த திருப்புமுனை.

அந்தத் திருப்பம் நடக்க உதவியது வலுவான கெமர் மன்னன் ஒருவனின் இறப்பு. பதிமூன்றாம் நூற்றாண்டில் கெமர் மன்னன், ஏழாவது ஜெயவர்மன் இறந்து, கெமர் ராஜ்யம் வலுவிழந்த சமயத்தில், தாய் மக்களின் ஊடுருவல் அதிகரித்தது. கெமர் அரசின் பலவீனத்தை உணர்ந்த தாய் இனத்தின் சிறு குழுக்கள் ஒன்று சேர்ந்து கெமர் ராஜ்யத்தைத் தாக்கி வீழ்த்தினார்கள். கி.பி. 1238ல் அப்படி உருவானதுதான் 'சுக்கோ தாய்' என்கிற தாய் அரசு. கெமர் ராஜ்யத்தின் தோல்வியில், இந்திய ராஜாங்கங்களின் வீழ்ச்சி தொடங்கியது. இந்த நூற்றாண்டில்தான் இந்தியாவிலும் இஸ்லாமியர்களின் ஆக்ரமிப்பு ஆரம்பித்தது. தாய்லாந்து உருவாகி, இந்தியக் கெமர்கள் வீழ்ந்த அதே நேரத்தில், தெற்குப் பகுதியின் சாம்ராஜ்யமான ஸ்ரீவிஜய ராஜ்யத்தில் (இந்தோனேசியா) இஸ்லாமிய மதம் தலை தூக்கியது. இந்திய அரசர்களின் அரசு குறுகியது. வடக்கில் இருந்த மங்கோலியர்கள், தெற்கு ஆசியா மேல் படையெடுத்து இந்திய சம்பா ராஜ்யத்தை வீழ்த்தி, வியட்நாம், பர்மா பகுதிகளையும் கைப்பற்றினார்கள். பதினாலாம் நூற்றாண்டில் இந்திய ராஜாங்கங்களின் ஆதிக்கம் முடிவு பெற்றது. ஆயிரத்து முன்னூறு ஆண்டுகள் இந்தியக் கெமர்கள் ஆண்ட பிரதேசத்தின் பெரும்பாலான பகுதிகள் தாய்லாந்தின் வசம் வந்தது. அதன் விளைவு...

இந்தியக் கெமர்கள் கடைபிடித்த சைவ மற்றும் வைணவ சித்தாந்தங்கள் தாய்லாந்தில் ஐக்கியமாயின. இந்து சமய வழிபாடுகள், சடங்குகள், பண்டிகைகள், இந்து சட்டம், இந்து சமயப் புராணங்கள், வானியல் இவை தாய்லாந்து கலாசாரத்தில் கலந்தன. மதம் மட்டுமல்லாமல் மொழி, இலக்கியம், நாட்டியக் கலை, ஓவியக் கலை, கட்டடக் கலை அத்தனையிலும் இருந்த இந்தியத் தாக்கம் தாய்லாந்திலும் தொடர்ந்தது. இந்திய அரசர்கள் ஆண்ட பின்னணியிலும் அதனால் ஏற்பட்ட கலாசாரத் தாக்கத்தின் அடிப்படையிலும், ஆராய்ச்சியாளர்கள் தாய்லாந்தை ஒரு 'இந்தியக் குடியேற்ற நாடாக' கருதும் காரணம் இதுதான்.

(தொடரும்)







“டெண்டுல்கர் ஆக்கிட்டீங்களே!”




மனிதாபிமானத்தோடு செயல்படுபவர் என்று தஞ்சாவூர் கலெக்டர் கோசலராமனை அடையாளம் காட்டுகிறார்கள் இங்குள்ள மக்கள்.

சென்ற பிப்ரவரி மாதத்தில், வெள்ளச் சேதத்தைப் பார்வையிட கோசலராமன் சென்றபோது, தென்னமை நாடு என்ற கிராமத்தைச் சேர்ந்த உதயகுமார் எனும் சிறுவன், தாத்தாவை இழந்து, பாட்டி வீட்டில் வசித்து வருவதாகவும், படிக்க ஆர்வம் இருப்பதாகவும் சொன்னான். தோலில் சிறு சிறு புள்ளிகள் இருப்பதாகவும், அதற்குச் சிகிச்சை பெற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டான். கோசலராமன் இவற்றைக் குறித்துக்கொண்டார். அவனுக்காக டாக்டர்களை அனுப்பி, சிகிச்சை கொடுத்ததோடு, பள்ளியிலும் சேர்த்து விட்டதை உதாரணமாகச் சொல்கிறார்கள்.

காவிரிப் பிரச்னை தொடர்பாக மத்திய அதிகாரிகள் குழு தஞ்சைக்கு வந்த மறுநாள் அவரை நாம் சந்தித்தபோது, அரை டஜனுக்கு மேற்பட்ட மாவட்ட உயர் அதிகாரிகளை அங்கே வரவழைத்திருந்தார். நகராட்சி கமிஷனர் தங்கராஜ், சுகாதாரத்துறை துணை இயக்குநர்கள், டாக்டர் பன்னீர் செல்வம், டாக்டர் கணேசன், சமூக நலத்துறை அதிகாரி ருக்மிணி, ஊரக வளர்ச்சித் துறை அதிகாரி கண்ணன், விவசாயத் துறை அதிகாரி தக்ஷிணாமூர்த்தி என்று ஒவ்வொரு துறையிலிருந்தும் அதிகாரிகள்! எல்லார் கையிலும் அவரவர் துறை சம்பந்தமான கோப்புகள்...

“டாப்டென் கலெக்டர்களில் என்னைப் பத்தாவது இடத்தில் உட்கார வைத்து விட்டீர்கள்! டெண்டுல்கர் எண் 10. பீலே எண் 10. மாரடோனா எண்கூட 10தான், இல்லையா? ஆக, பிரபலங்களின் பட்டியலில் என்னையும் சேர்த்துவிட்டீர்கள்!” என்று கலகலப்பாக வரவேற்றார் கோசலராமன்.



• கோசலராமன்





• மகளிர் சுய உதவிக் குழுக் கூட்டத்தில்

'மக்கள் சாசனம்'

கலெக்டரை ஓகோ என்று புகழ வேண்டுமானால், வெளிப்படையான நிர்வாகம் என்ற முயற்சியில் அவர் ஒவ்வொரு துறைக்கும் வெளியிட்டிருக்கும் மக்கள் சாசனத்துக்குத்தான் புகழ்! கல்வித்துறை, சமூக நலம், ஆதிதிராவிடர் மேம்பாடு, வருவாய்த்துறை, சுகாதாரம், விவசாயம் என்று அத்தனைப் பிரிவுகளுக்கும் விவரமான தகவல்கள் அடங்கிய கையேடு வெளியிட்டிருக்கிறார்.

"குடும்பப் பிரச்னைகளை எப்படிக் கையாளுவீர்கள்?"

"குடும்ப கவுன்சிலர்கள் இவற்றைக் கையாளுவார்கள். மகளிர் காவல் நிலையங்கள் கையாள வேண்டிய பிரச்னையாக இருந்தால், குடும்ப கவுன்சிலர்கள் அங்கேயே இருந்து உதவுவார்கள்."

இது தவிர, புதன்கிழமைகளில் 'மாஸ் காண்டாக்ட்' நிகழ்ச்சியும் உண்டு. கோரிக்கைகள் (ஒரு மாதம் முன்பே பெறப்பட்டு) அந்த இடத்திலேயே, அன்றே தீர்க்கப்பட்டு விடுகின்றன.

கொத்தடிமைகளாக இருந்து மீட்கப்பட்டவர்களுக்கும், ஊனமுற்றோர் மறுவாழ்வுப் பயிற்சிக்கும், மாவட்ட நிர்வாகம் உதவியிருக்கிறது. 'டான்வா' பண்ணை மகளிர்க்கான சுய உதவிக் குழுக்கள், இரண்டாயிரத்து இருநூறு மட்டுமே இலக்கு; இங்கு நான்காயிரத்து இருநூற்றி எழுபத்தேழு (அதாவது கிட்டத்தட்ட 200%) உருவாக்கி இருக்கிறார்கள். முப்பத்து மூன்றாயிரம் உறுப்பினர்கள் குறியீடு என்றால், 71,461 உறுப்பினர்கள் சேர்த்து விட்டார்கள்! சேமிப்புத் தொகை 7.5 கோடி ரூபாய். நூற்றி முப்பத்தாறு குழுக்களில் மகளிர் பட்டுப்புழு வளர்த்தல், கறவை மாடுகள் வளர்த்தல், வெர்மி கம்போஸ்ட்டிங் என்று வங்கிக் கடன் உதவியுடன் பணிகள் அமோகமாக நடைபெறுகின்றன.

"பன்னிரண்டு நியாய விலைக்கடைகளை இவர்களுக்குத் தனியாக ஒதுக்கினோம். எடைக் குறைவு புகார், தரம் குறைவு புகார் எதுவும் இல்லை!" என்கிறார் கலெக்டர். நாநூறு பேர்

தொழில் முனைவோர் பயிற்சி பெறுகிறார்கள்.

விவசாயத்தில் புதுமை

ரசாயன உரங்களை 35600 ஏக்கர்களில் 75 சதவிகிதமே உபயோகிக்கிறார்கள். மீதி 25 சதவிகிதம் இயற்கை உரம். இதனால் நிலம் மட்டுமின்றி, சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படுகிறது. எண்ணெய் வித்துக்கள், வேர்க்கடலை, பயறு வகைகள், பருத்தி ஆகியவை பயிரிடப்படும் 16400 ஹெக்டேர் நிலத்தில், இயற்கை உரமே உபயோகித்து வருகிறார்கள்.

நெல் பயிரிடும் பகுதிகளான 100 கிராமங்களில், 20 விவசாயிகள் வீதம் தேர்ந்தெடுத்து, அறுவடை சமயத்தில் 15 நாட்களுக்கு ஒருமுறை பயிரின் நோய் என்ன, பூச்சி என்ன என்றெல்லாம் விளக்கமாகச் சொல்லி, நேரிடையாகப் பயிற்சி கொடுக்கிறார்கள். அவர்களே முடிவும் எடுக்கிறார்கள். வேளாண் துறை அதிகாரிகளும் ஊழியர்களும் அவர்களுக்கு உதவுவார்கள். இதனால் விவசாயிகளிடையே விழிப்புணர்ச்சி உண்டாகி வருகிறது. 7000 லிட்டர் வரை உபயோகிக்கப்பட்டு வந்த பூச்சி கொல்லி மருந்துகளின் உபயோகம், கிட்டத்தட்ட பாதியாகக் குறைந்துவிட்டது சென்ற ஆண்டு. இந்த வருடம் இன்னும் குறைய வாய்ப்பு இருக்கிறதாம்.

சீரியல் பார்க்கும்போது...

வளர்ந்து வரும் இளம் பெண்களுக்கு இரும்புச் சத்துக் குறையைப் போக்க மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. பக்க விளைவுகளோ, எதிர்மறை விளைவுகளோ இல்லை. காலையில் பள்ளிக்கூட பிரேயரின் போது, "அண்ணாமலை சீரியல் முடிந்ததும் இந்த மாத்திரையைச் சாப்பிடுங்கள்" என்று அறிவித்து விடுகிறார்கள். அதனால் யாரும் மறந்து போவதில்லையாம்! கிட்டத்தட்ட இரண்டு லட்சம் இளம் பெண்கள் இதனால் பயன் பெறுகிறார்கள்.

வீட்டில் 'டெலிவரி' வேண்டாம்!

பிரசவத்தின் போதும், பிறகும், சிசுக்கள் மரணம் அடைவதைத் தடுக்க, வீடுகளைவிட இதற்கான மருத்துவ அமைப்புகளில் மட்டுமே பிரசவம் பார்க்க வற்புறுத்தி வருகிறது சுகாதாரத் துறை. இதில் 96 சதவிகிதம் வெற்றியும் கண்டிருக்கிறார்கள். 'டானிடா' திட்டத்தில் இதற்காக 55 துணை மையங்கள் கட்டியிருக்கிறார்கள். ஆரம்ப சுகாதார நிலையங்கள் தவிர, 309 துணை மையங்கள் இதற்காக இருக்கின்றன. பதிமூன்று ஆம்புலன்ஸ்கள் இருக்கின்றன.

"ஆனாலும் அவர் ரொம்ப மோசம்!"
"ஏங்க?"
"பின்னே என்னாங்க, 'கம்ப்யூட்டர் விண்டோஸ்'க்கு எல்லாம்கூட 'வாஸ்து' பார்க்கறார்!"

- யமுனா ரங்கநாதன்

மாணவர்கள் அறிவார்கள் அரசாங்க திட்டங்களை!


ஆறாவது முதல் 12ஆவது வரை படிக்கும் நாலு லட்சம் மாணவ, மாணவியரிடையே, அரசாங்கத்தின் திட்டப் பணிகளைப் பற்றி கட்டுரைப் போட்டி வைக்கிறார்கள். இதற்கான வெளியீடுகளைப் படித்துத் தயார் செய்து கொள்ள நாற்பது நாள் அவகாசம் கொடுக்கப்படுகிறது. பங்கு கொள்ள விரும்பும் மாணவ - மாணவியரிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, போட்டிகள் நடத்தி, பரிசுகள் வழங்கப்படுகின்றன.

ஐந்து வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்க, ஜூன் இரண்டாம் வாரத்தில் பேரணி நடத்தி, 42189 குழந்தைகளை முதல் வகுப்பில் சேர்த்தார்களாம். கிராமக் கல்வி மையம் உருவாக்கி, பாதியிலேயே படிப்பை நிறுத்திவிடும் மாணவர் மாணவிகளின் சதவிகிதத்தைக் குறைக்க முயன்று வருகிறார்கள்.

"இந்த டிராப் அவுட் எண்ணிக்கை 17 சதவிகிதம் இருக்கிறது. இதற்குச் சமூக அளவிலான காரணங்கள் இருக்கின்றன. இவற்றில் கவனம் செலுத்தி, பெற்றோரை நேரில் சந்தித்து, அதற்கும் நிவாரணம் கண்டு பிடித்துவிடுவோம்!" என்றார் கலெக்டர்.

அதிக தூரத்தில் இருக்கும் பள்ளிகளுக்குப் போக வசதியாக, ப்ளஸ் - 1, படிக்கிற மாணவிகள் 1242 பேருக்கு இலவசமாக சைக்கிள் வழங்கி இருக்கிறார்கள்.

ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் மூன்றிலும்தான் குறைந்த மதிப்பெண்கள் பெறுகிறார்கள் என்பதால், சிறப்பு ஆசிரியர்களை வெளியே இருந்து தருவித்துப் பாடம் எடுக்கச்



சொல்கிறார்கள். இது தவிர, மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு மறுபயிற்சி வகுப்புகள் நடத்தி, பாடங்களை மேலும் சிறப்பாகப் பயிற்றுவிக்க வசதி செய்திருக்கிறார்கள்.

பள்ளிக்கூடத்தோடு நூலகமும் இணைந்தே இருக்கிறது. ஆறு முதல் பன்னிரண்டாவது வகுப்பு வரை மாணவ - மாணவிகள் கட்டாயம் நூலகத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறார்கள்.

பாலினக் கொடுமைகள் தடுப்பு

கான்ஸ்டபிள் முதல் இன்ஸ்பெக்டர் வரை, பாலின நிகர் நிலைப் பயிலரங்கம் மூலம் பயிற்சி வகுப்புகள் நடத்தி வருகிறார்கள். 'பெண்களுக்கான உதவிக்கரம்' என்ற கையேடு ஒன்றை, மாவட்டக் காவல் துறை விவரங்களுடன் வெளியிட்டிருக்கிறது. மைய உறுப்பினர்கள், துறைத் தலைவர்கள், சட்டங்கள் பற்றிய குறிப்புகள் என்று விலாவாரியாக இதில் தரப்பட்டிருக்கின்றன. தொடர்பு கொள்ள வேண்டிய நபர்களின் தொலைபேசி எண்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

வேலைக்கு வரும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை பற்றிய புகார் குழு, ஆட்சியர் தலைமையில் இயங்குகிறது. இதற்கான விழிப்புணர்வு நாடகங்கள் நடத்தப்பட்டு, ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. (இது வேறு எந்த மாவட்டத்திலும் இத்தனை சீரியஸ்ஸாக நடத்தப்படுகிறதா என்று தெரியவில்லை.)

'சேவை இல்லத்தில், 18 முதல் 40 வயது வரையுள்ள விதவைப் பெண்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் எல்லோரும் தங்கி, ப்ளஸ் - டூ வரை இலவசமாகப் படிக்க வசதி இருக்கிறது. குழந்தைகள் இருந்தால் பிரிப்பதில்லை.

நிர்வாகச் சுறுசுறுப்பு

"**எ**ந்தக் கோப்பும் 90 நாட்களுக்கு மேல் தீர்க்கப்படாமல் இருப்பதில்லை" என்கிறார் கலெக்டர். எல்லா திங்கட்கிழமை மாலையும், மறு ஆய்வுக்குழு கூட்டத்தில், தீர்க்கப்படாதவை அலசி ஆராயப்பட்டுத் தீர்க்கப்பட்டு விடுமாம்.

மாதாந்தரக் கண்காணிப்பு ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், ஊழல் தொடர்பான விவரங்களை விசாரிக்கிறார் கலெக்டர். துணை கலெக்டர்தான் இந்த 'செல்'லின் தலைவர். பத்து திடீர் சோதனைகள், 12 வருடாந்தர சோதனைகள் என்று கண்காணிக்கும் பணி நடைமுறையில் இருக்கிறதாம். "நிர்வாக அமைப்பிலேயே இப்படிச் சில சிஸ்டம்கள் இருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுகிறோம்."

மக்களுக்காக நிர்வாகம்:

ஒவ்வொரு மாதமும் 'மல்ட்டி மீடியா' கூட்டம் நடைபெறுகிறபோது, பொது மக்களுடன் மாவட்ட அதிகாரிகள் அத்தனை பேரும் பங்கெடுக்க, கலெக்டர் கலந்து கொள்ளுகிறார். பாராட்டப்பட வேண்டிய முயற்சி.


அதேபோல, புற்றுநோய், நீரிழிவு, முதியோர் நோய்கள், அதிக இரத்த அழுத்தம் ஆகிய நான்கு துறை நிபுணர்களையும் 'ஸ்பெஷாலிடி காம்ப்'புக்கு வரவழைத்து, இந் நோயினால் பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு 15 மருத்துவமனைகள் வாயிலாக சிறப்பு முகாம்கள் தொடர்ந்து நடத்தி வருகிறார் ஆட்சியர்.

பேட்டியைத் தொடங்கும் முன்னாலேயே, மக்கள் நல்வாழ்வுத் துறையிலும், இருபது அம்சத் திட்டத்திலும் மாவட்டம் 'நம்பர் ஒன்' என்று குறிப்பிட்டார் கோசலராமன். கொடி நாள் வசூலிலும் ஆளுநரின் பாராட்டைப் பெற்றிருக்கிறார். மாநில அளவில், குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சையில் முதலிடம் வகிக்கிறது தஞ்சை. இதற்காக நல்வாழ்வுத் துறைச் செயலரிடம் இருந்து பாராட்டுக் கடிதம்!

"என்னுடைய பணியின் முக்கிய நோக்கம் 'மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும்' என்பதுதான். நான் செயல்படுகிற விதம் இதைப் பொறுத்தே அமைகிறது!" என்கிறார் கோசலராமன்.

பேட்டி, கட்டுரை: **சாருகேசி**

மனம் உருகுதே



25

வரண்டாவிலிருந்து படியிறங்கிப் போகும் ராதா கிருஷ்ணனை பின்னால் ஓடிப்போய் ரேவதி தடுத்தாள்.

"சங்கரய்யரோட நான் பேசறது உங்களுக்குப் பிடிக்கலையா?"

"எவன் சொன்னான் அப்படி?"

சட்டென்று வாய் கூசாமல் ராதாகிருஷ்ணன் பொய் சொன்னார்.

"நான் அவரோட பேசறபோது பல்லைக் கடிச்சேளாமே?"

"யார் சொன்னது அப்படி?"

அவளுக்குத் தன் குழந்தையின் பெயரைச் சொல்வதற்குப் பயமாக இருந்தது. கோபம் அவன் மீது பாய்ந்து விடுமோ என்று கலவரம் ஏற்பட்டது.

"சொல்லுங்கோ. நீங்க பேச வேண்டாம்னா, நான் பேசலை."

"அதுக்கும் உப்புமாக்கும் எந்த சம்பந்தமுமில்லை."

பெருங்குரலில் தெருவில் நிற்போர் திரும்பிப் பார்க்கும் வண்ணம் உரக்க ராதாகிருஷ்ணன் கர்ஜித்தார்.

அவர் பிள்ளைக்குக் கோபம் வந்தது.

"பொய் சொல்லாத. உனக்கு போங்குதான். அம்மா வந்து சங்கரய்யரோட தனியா பேசிக்கிட்டிருக்கும்போது, பல்லைக் கடிச்சு கை முஷ்டியை மடக்கின. எனக்குத் தெரியும். அப்பவே நீ சண்டை போடப்போற அப்படின்னு" என்று உரக்கக் கத்தினான்.

ராதாகிருஷ்ணனுடைய கோபம் சட்டென்று திசை மாறியது. ரேவதியின் மீதுள்ள கோபம் பையன் மீது பொங்கியது.

ஒரு அடி எடுத்து வைத்து, பையனைப் பார்த்து சிம்மமாய்



முறைத்தார்.

பாலகுமாரன்

பையன் அதைப் பற்றிக் கவலைப் படவில்லை.

"உள்ளவாம்மா. அவர் எங்கேயாவது சாப்பிடட்டும்" என்று இழுக்க, ரேவதி பின்னடைய, தன் மனைவியை தன் கோபத்திலிருந்து காப்பாற்றுகிறான், தன்னுடைய பிள்ளை என்பது உறைக்க, அவர் கோபம் கொழுந்துவிட்டு எரிந்தது. பையனை நோக்கி முன்னேறி பளார் என்று அறைந்தார்.

அவன் கன்னத்தைப் பொத்திக்கொண்டு "ஏம்ப்பா அடிக்கிற" என்று கத்தினான். மறுபடியும் அறைந்தான்.

"குழந்தைய தேவையில்லாத அடிக்காதீங்கோ" என்று ரேவதி உரக்கப் பேச, "என்னடி என்னை அதிகாரம் பண்றது!" என்று ரேவதியின் கழுத்தைப் பிடித்து ஒரு உலுக்கு உலுக்க, அவன் அவர் கையை உதறித் தள்ள, உதறிய கை சுவரில் நச்சென்று பட, விரல்களின் நுனி சுள்ளென்று வலிக்க, அந்தக் கோபம் பெரிதாகி இடது கையால் ரேவதியின் கன்னத்தில் ஓர் அறை விட்டார்.

பையனுக்கு என்ன செய்ய வேண்டுமென்று தெரியவில்லை.

அம்மாவைக் காப்பாற்ற அப்பாவின் மீது பாய்ந்தான்.

இது விஷக்கடி வேளை. என்ன செய்ய வேண்டுமென்று யாருக்கும் தெரியாமல் எல்லோரையும் எல்லோரும் மிதித்த வேளை.


இடது கன்னத்தில் அறை வாங்கிய ரேவதி அப்படியே இடிந்து போய் தரையில் உட்கார்ந்தாள். பிள்ளையும், பெண்ணும் அவளைப் பாய்ந்து பிடித்துக் கொண்டார்கள். பயத்தில் அழுதார்கள்.

ராதாகிருஷ்ணன் படியிறங்கி, கதவை தடாரென்று சார்த்திக் கொண்டு போனார்.

உலகத்தில் மிக அசிங்கமான நேரம் எதுவெனில், வன்முறைக்குப் பிறகு ஏற்படுகின்ற அமைதி என்று எளிதாகச் சொல்லலாம். வன்முறையின் மீது விருப்பமுள்ளவர்கள்கூட, இந்த வன்முறைக்குப் பிறகு எழும் ஒரு கனத்தையும் விரும்பாமல் இருக்கிறார்கள். உரக்கக் கத்துதலும் ஓங்கி வந்து தாக்குதலும் வெகு எளிதாகச் செய்ய முடிகிறது. ஆனால், செய்வது சரியா என்று மனம் கேள்வி கேட்கையில், எவரும் அதை முழுமையாக தான் செய்வதே சரி என்று ஏற்றுக் கொள்வதில்லை. கடின சித்தம் உடையவர்கள், குரூர மனப்பான்மை உள்ளவர்கள், அப்படி ஏற்றுக் கொண்டாலும் சற்று நொய்மையான மனம் உடையவர்களுக்கு இது மிக வேதனையான காலமாகப் போய்விடுகிறது.

ஏனடா இப்படிச் செய்தோம் என்று கழிவிரக்கம் ஏற்படுகிறது. இதைச் செய்வதற்கு முன்பு இருந்த காலம் நன்றாக இருந்ததே. அந்த நேரத்திலே இந்த எண்ணம் தோன்றுகிறபோது இதை அடக்கி வைத்திருக்கலாமே, தேவையற்ற இதை அனுமதித்து விட்டோமே, இந்த வன்முறையை வளர்த்துவிட்டோமே என்ற வேதனை எழுவதுண்டு.

ராதாகிருஷ்ணனுக்கும் அவருடைய நொய்மையான மனத்தின் காரணமாக இந்த வேதனை எழுந்தது.



ரேவதி எவ்வளவு நல்லவள் என்கிற சொற்றொடர் அவர் மனத்திற்குள் பின்னிப் பின்னி எழுந்தது.

பையன் கொஞ்சம் அதிகப்பிரசங்கி. அந்தப் பையன் எப்படிக் கைய ஓங்கிண்டு வரான் பாரேன் என்று இன்னொரு சொல் எழுந்தது.

இல்லை. அவன் அம்மாவைக் காப்பாற்ற வந்தான். எல்லா பிள்ளைகளும் செய்கின்ற சாதாரண ஒரு விஷயம். நாம்தான் அத்து மீறிவிட்டோம். நாம்தாம் தேவையில்லாமல் வன்முறையைப் பிரயோகித்து விட்டோம் என்று மனசு புலம்பத் துவங்கியது.

அப்படித்தான்... அப்படித்தான்... சில சமயம் பொம்மனாட்டிய அடக்கித்தான் வைக்கணும். அடிக்கத்தான் செய்யணும். பிள்ளை எகிறினா ரெண்டு தட்டு தட்டத்தான் செய்யணும். இல்லைன்னா தலைக்கு மேல உட்கார்ந்துருவாங்க.

என் வீடா? என் மனைவியா? அப்படிச் செய்வாளா? என்ன அபத்தம் இது. என் முரட்டுத்தனத்தை நான் எப்படி நியாயப்படுத்துகிறேன். உண்மையாக என்னுடைய கோபம் என்ன?

சங்கரய்யரிடம் அவள் பேசியதுதானே. அதைப் பிள்ளை கண்டுபிடித்து விட்டிருக்கிறான். ஏதோ ஒரு கோணத்தில் பார்த்து விட்டிருக்கிறான். அவன் பார்த்து விட்டானே என்கிற பயமும் பதற்றமும்தான் இந்த வன்முறையின் ஆரம்பத்திற்குக் காரணம். மனத்தில் இருப்பதைக் கண்டுபிடித்து விட்டானே என்கிற வெறுப்புதான் காரணம்.

பசித்தது. பசி அதிகமாக அதிகமாக, கோபத்தின் வேகம் குறைந்து இப்பொழுது என்ன செய்வது என்று எண்ணம் வந்தது.

பாக்கெட்டில் கைவிட்டுப் பார்க்கும் போது காசு கொண்டு வரவில்லை என்று உறைத்தது.

கடவுளே... மறுபடி போய் காசு எடுத்துக்கொண்டு வரலாமா, போனால் சரியாகுமா? என்ற எண்ணம் வந்தது.

ரேவதி மறுபடியும் அழுவாள்.

இப்போ ஏன் போறேன். இப்போவே ஏதாவது பண்ணித் தரேன் என்று காலைப் பிடித்துக் கெஞ்சுவாள்.

வேண்டாம் - சற்று நேரம் எல்லோருமே அமைதியாக இருக்கலாம். ஆனால், ஏதாவது சாப்பிட வேண்டும். வெகு நேரம்



"சார், நூறு ரூபாய்க்குச் சில்லரை இருக்கா?"

"ஓ. இருக்கே!"

"அப்போ ஒரு ஐம்பது ரூபாய் கடனாக் கொடுங்களேன்!"

- யமுனா ரங்கநாதன்

பசியைத் தாங்க முடியாது.

இந்தத் தெருமுனையில் ஹோட்டல் அசோக்பவன் இருக்கிறது. அந்த முதலாளியைப் பல நாட்களாகத் தெரியும். காசு இல்லை என்றால் ஒன்றும் சொல்ல மாட்டார். கல்லாப் பெட்டியில் உட்கார்ந்திருந்த ஆளிடம் சொல்லிவிட்டுப் போகலாம்.

கல்லாப் பெட்டியில் யார் இருப்பான், முருகானந்தமா. இல்லை. சேகரா, யார் இருந்தாலும் உள்ளே விட்டு விடுவார்கள். 'அதனால என்ன ஸார்' என்று சொல்வார்கள். இதுமாதிரி இரண்டு மூன்றுமுறை நடந்திருக்கிறது. மறுநாள் கொண்டு வந்து காசை நீட்டும்போது, 'ரொம்ப அவசியமா ஸார் இது. நம்ம கடையில ஒருநாள் காசு கொடுக்காம சாப்பிட்டா தப்பாயிடுமோ' என்று சொல்லிக் கொண்டே காசை வாங்கிக் கொள்வார்கள்.

ராதாகிருஷ்ணன் ஹோட்டலுக்குள் ஏறினார். அங்கே முருகானந்தமும் இல்லை, சேகரும் இல்லை.

சொல்லிவிட்டுப் போகலாமா, சாப்பிட்டுவிட்டுச் சொல்லலாமா. இந்த வயோதிகனைப் பார்த்தால் தெரிந்த முகமாகத் தெரியவில்லை.

அவர் மெல்ல கல்லாவுக்கு அருகே போனார்.

"என் பேர் ராதாகிருஷ்ணன். இந்தத் தெருவுல இருக்கேன்."

"என்ன அதுக்கு?"

முதியவர் வேகமாகக் கேட்க, மேற்கொண்டு என்ன பேசுவது என்று தெரியவில்லை.

"காசு எடுத்துண்டு வர மறந்துட்டேன். சாப்பிட்டுப் போகலாமா?"

சட்டென்று அந்த முதியவர் ராதாகிருஷ்ணனை உறுத்துப் பார்த்தார்.

"கூடாது. காசு இருந்தாத்தான் சாப்பிடலாம்" என்று சொல்ல ராதாகிருஷ்ணனுக்கு ஒன்றும் புரியவில்லை.

சரி. ஏதோ ஒரு முட்டாள் உட்கார்ந்திருக்கிறான். உள்ளே யார் இருக்கிறார்கள்? எட்டிப் பார்க்க, எவரும் சட்டென்று கண்ணுக்குத் தென்படவில்லை.

"ஸார், நகருங்க. கஸ்டமர்ஸ் வர நேரம்" என்று அந்தப் பெரியவர் அதட்ட, என்ன செய்வதென்று தெரியாமல் அவர் ஹோட்டலைவிட்டுக் கீழிறங்கினார்.

உள்ளிருந்து ராதாகிருஷ்ணன் என்று குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தார்.

நாலு டேபிள் தள்ளி சங்கரய்யர் மட்டும் தனியாக உட்கார்ந்திருந்தார். அவரைக் கை தூக்கி 'உள்ளே வாருங்கள்' என்று கூப்பிட, ராதாகிருஷ்ணனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

சங்கரய்யரைப் பார்த்ததும் உள்ளே ஒரு பயம் கலந்த மரியாதை ஏற்பட்டது. அவர் உற்றுப் பார்த்த பார்வை, உள்ளுக்குள்ளே ஊடுருவிப் போயிற்று. மெலிதாய் ஒரு நடுக்கம், பதற்றம் ஏற்பட்டது. சட்டென்று விலகிப் போய் விடலாமா என்று கால்கள் பரபரத்தன. ஆனால் அது மரியாதை இல்லை என்பதாய் நினைத்துக் கொண்டு, மெல்ல சங்கரய்யரை நோக்கி ராதாகிருஷ்ணன் நடந்தார்.

"டிபன் சாப்பிடறீங்களா?" என்று வெகு நாள் பழகியவர் போல் நட்பாக சங்கரய்யர் கேட்டார்.

"வேண்டாம்... இல்லை... அதுக்குத்தான் வந்தேன்... நீங்க... சாப்பிடு..நீங்க சாப்பிடுவேளா" என்று நாலைந்து வாக்கியங்களை ஒன்றன்பின் ஒன்றாக முறையற்று ராதாகிருஷ்ணன் வெளிப்படுத்தினார்.

"உட்காருங்கய்யா."


சங்கரய்யர் சொல்ல, அவர் எதிரே சட்டென்று உட்கார்ந்தார்.

ஆறு நாற்காலிகள் போடப்பட்டிருந்த பெரிய மேஜையில் யாருமில்லை. ஆனால் மற்ற மேஜைகளில் ஆட்கள் இருந்தார்கள். சங்கரய்யர் எதிரே ராதாகிருஷ்ணன் உட்கார்ந்ததும் எல்லோரும் சொல்லி வைத்தது போல் திரும்பிப் பார்த்தார்கள்.

சங்கரய்யர் உட்கார்ந்திருக்க மேஜையில் அவருக்கு இணையாக எவரும் உட்கார

வண்ணங்களின் காதலன்!





“கிராமமும், கிராமத்தின் மண்ணும், மனிதர்களும், அவர்களின் வாழ்க்கையும்தான் எனது தூரிகையின் ஆத்மா. அந்தச் சம்சாரிகளின் வாழ்வை ஓவியமாக்குவதை பேறாகக் கருதுகிறேன்'' என்கிறார் சிவபாலன்.

தி.நகர் ‘ஆர்ட்ப்ளஸ்' கேலரியில் இவரின் வாட்டர் கலர் பெயிண்டிங்கைப் பார்த்தால் மனம் சொந்த கிராமத்துக்குச் சென்று திரும்புகிறது. சென்னை ஓவியக் கல்லூரியின் முன்னாள் மாணவரான சிவபாலன், ஓவியநுண்கலை குழுவின் மாநில விருது உட்பட ஒன்பது விருதுகளை அள்ளியிருக்கும் இளைஞர்!

- அப்பு

வில்லை என்பது சட்டென்று ராதா கிருஷ்ணனுக்கு உறைத்து. எழுந்திருக்க முயற்சி செய்தபோது ‘வேண்டாம், உட்காரும்' என்று சொன்னார்.

ராதாகிருஷ்ணன் அசையாது அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

“மூணு இட்லி, மிளகாய்ப் பொடி, ஒரு தோசை சொல்லட்டுமா?''

“சரி, சொல்லுங்கோ. நீங்க ஹோட்டல்லதான் சாப்பிடுவேளா?''

“ஏன், நான் சாப்பிட மாட்டேன்னு யாராவது சொன்னாளா?''

“இல்லை. பூஜை, புனஸ்காரமெல்லாம் பண்றேள்.''

“அதனால கேட்கறீரா, போன வருஷம் வரைக்கும் நான் ஆபீஸுக்கு போயிண்டிருந்தவன்தானே. ஆசாரம்னு ஒரு விஷயம் எங்கிட்ட இல்லை. எங்கிட்ட இருக்கறதெல்லாம் வெறும் பக்திதான். நான் இன்ன விதமா இருக்கணும்னு என்னைக் கட்டுப்படுத்திக்கவே இல்லை. எல்லாவிதமாகவும் இருக்கேன். நான் இப்படி ஆகணும்னு தீர்மானம் பண்ணிட்டா, அது மாதிரியே இருக்கறதுக்குப் பல சமயங்கள்ல ரொம்பக் கடுமையா முயற்சி பண்ண வேண்டியிருக்கு. உதாரணமா நான் ஆம்பளைன்னு நினைச்சுண்டேன்னு வச்சுக்கோங்கோ. நான் அழக் கூடாது, அப்படின்னு ஒரு விதி வந்துடறது. அழாம இருக்க முடியுமோ? மனுஷாளா பிறந்தா ஏதோ ஒரு கால கட்டத்துல அழுதுதான் ஆகணும். ஆம்பளைங்கற கம்பீரம் அப்போ அடிபட்டுப் போயிடும். எப்போதாவது தோணித்துன்னா ஹோட்டலுக்கு வந்து சாப்பிடுவேன். சாப்பிடக் கூடாது அப்படின்னு ஒரு சிஸ்டம் - நான் வச்சுக்கலை. அந்த மாதிரி நியதிகள் பல சமயம் பலருக்குக் கர்வத்தைக் கொடுத்துடறது. நான் யார் தெரியுமா? குடுமி வச்சுண்டு, பூணூல் போட்டுண்டு, விபூதி பட்டை இட்டுண்டு, உர்ருனு இருக்கறவன்னு தனக்குத் தானே ஏதோ ஒரு கல்பிதம் வந்துடறது. ஜனங்களோட ஜனங்களா இருக்கறதுக்கு முடியாமப்போறது. ஜனங்களுக்கு நடுவுல இருக்கலைன்னா, ஜனங்களைப் புரிந்து கொள்ளாத ஒரு வாழ்க்கை இருக்கிறதென்றால் அது வீண். நாம என்னமோ சொல்லிண்டிருப்போம். அவன் ஏதோ கேட்டிண்டிருப்பான். நமக்கும் அவனுக்கும் எந்த உறவும் இல்லாமல் இருக்கும். சர்வ சாதாரணமா எல்லாரோடயும் உட்கார்ந்து பேசிப் பழகறபோது அவாளையும் புரிஞ்சுக்க முடியுது. அவா மூலம் என்னையும் புரிஞ்சுக்க முடியறது.''

“அப்படியா?'' என்று பொதுவாக ஒரு வார்த்தையை ராதாகிருஷ்ணன் உதிர்த்தார்.

சங்கரய்யர் அவரைக் கூர்மையாகப் பார்த்தார்.

(தொடரும்)

நடக்குமென்பார்; நடக்கும்!

மேஷம் : உத்தியோக வகையில் மிகவும் அனுகூலமான திருப்பம் ஏற்படும். அலுவலகத்தில் நிலவி வந்த எதிர்ப்புகள் மறையும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சுய தொழில், வியாபாரம் செய்பவர்கள், கொடுக்கல் வாங்கல் வகையில் நல்ல லாபம் காண்பார்கள். குடும்ப ஸ்தானத்தில் ராகு சஞ்சாரம் என்பதால் கவலை வேண்டாம். 7ல் சுக்ரன், ஆட்சி பெற்றிருப்பதால், சிறுசிறு பிரச்னைகள் ஏற்பட்டாலும் உடனுக்குடன் நிவர்த்தியாகும். பெண்களுக்கு உற்சாகமான மனநிலை உண்டாகும்.



ரிஷபம் : தனலாபம், சரளமான பண வசதி, எடுத்த காரியங்களில் அனுகூலம், தெய்வீக ஈடுபாடு ஆகியவை உண்டாகும். ஏழரை நாட்டுச் சனி இரண்டாவது சுற்று, நடைமுறையில் இருப்பவர்களுக்கு, இது அதிர்ஷ்டமான வாரமாக அமையும். அரசுப் பணியாளர்கள் முன்னேற்றம் அடைவார்கள். அரசியல்வாதிகளின் மதிப்பு, அந்தஸ்து, செல்வாக்கு அதிகரிக்கும். மருத்துவம், உலோக வகை, எலக்ட்ரானிக்ஸ், ஏற்றுமதி இறக்குமதி வகையில் அனுகூலம் உண்டு. சுப காரியம் விஷயமாக எதிர்பார்த்திருந்த நல்ல சேதி வந்து சேரும்.

மிதுனம் : வெளிநாட்டுத் தொடர்புடைய ஏற்றுமதி வகையில் ஆதாயமிருக்கும். அதேபோல, மாணவர்கள் திட்டமிடும் வெளிநாட்டுப் பயணம், வெளிநாட்டு வேலைக்கான அழைப்பு, போன்றவை வெற்றி பெறும். தனம், வாக்கு குடும்பஸ்தானத்தில் குரு உச்சம் பெற்றிருப்பதால், பொன், வெள்ளி ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டாகும். திருமணமாகாதவர்களுக்கு, அதற்கான வாய்ப்பு கனிந்து வரும். திருமணமானவர்களுக்குச் சிறுசிறு பிரச்னைகள் நீங்கி, இனிய இல்லறம் அமையும்.

கடகம் : செவ்வாய்க்கு எக்கச்சக்கமான பலம் கூடியிருக்கும் வேளை இது. உத்தியோகஸ்தர்கள், தொழிலதிபர்கள், நிறுவன, நிர்வாகத் துறைகளில் இருப்பவர்களுக்கு ஏறுமுகமான வாரம். புதிய முயற்சிகள் கை கூடி வரும். கடன் தொல்லைகள் குறைந்து, வரவேண்டிய பாக்கி வசூலாகும். 5ல் கேது இருந்தாலும், குரு பார்வை இருப்பதால், மக்கள் நலம் சீராக இருக்கும். சுபகாரியச் செலவுகள் ஏற்படலாம்.

சிம்மம் : குரு பகவான், தமது வீடான மீன ராசியைப் பார்ப்பது விசேஷமாகும். சுபமங்கள காரியம், திருமணம் ஆகியவை கூடி வரும். நண்பர்கள், உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவார்கள். புதிய சொத்து சேர்க்கை, மனை, நிலம், வீடு ஆகிய இனங்களில் அனுகூலம் உண்டாகும். பெண்களுக்குச் சகல காரியங்களிலும் முன்னேற்றம் ஏற்படும். ஆசிரியர், சட்ட வல்லுனர், மத போதகர், அரசியல்வாதி போன்றவர்கள் முன்னணிக்கு உயருவார்கள்.

கன்னி : குருபகவான், பதினொன்றாம் இடத்தில் உற்சாகத்துடன் சஞ்சாரம் செய்வதால், சுப மங்கள காரிய முயற்சிகள் கை கூடும். அந்த வகையில் மேற்கொள்ளப்படும் பயணங்கள், அனுகூலமான பலனையே தரும். மாணவர்களுக்குக் கடுமையான உழைப்புடன் கூடிய முன்னேற்றம் உண்டு. நண்பர்கள், உறவினர்கள் தக்க சமயத்தில் உதவிக் கரம் நீட்டுவார்கள். எடுத்த காரியங்களில்

நவம்பர் 6 முதல் 12 வரை

பாடகி அனுராதாவின் கணவர் ஸ்ரீராமுக்கு (தனுசு) பெயர், புகழ் அதிகரிக்குமாம்.

வெற்றியும், மனநிறைவும் உண்டாகும்.

துலாம் : நீண்ட நாளாக தடைபெற்று வந்த குல தெய்வப் பிரார்த்தனை ஏதுமிருந்தால், இப்போது முயற்சி செய்யுங்கள். தடங்கலின்றி நடைபெறும். தெய்வ பலம் அதிகரித்துள்ளதால், ஆன்மிக விஷயங்களில் ஈடுபாடு உண்டாகும். சுய தொழில் புரிபவர்கள், பொருளாதர மேன்மை அடைவார்கள். சட்டம், காவல், இராணுவம் மற்றும் தகவல் தொடர்பு போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் எதிலும் கவனத்துடன் செயல்பட வேண்டும். எதிர்பாராத பிரச்னைகள் ஏற்படலாம். பேச்சில் கடுமை கூடாது.

விருச்சிகம் : கணவன் - மனைவிக்குள் இருந்து வந்த இலேசான உரசல்கள் இனி காணாமல் போகும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், அமைதியும் நிறைந்திருக்கும். தனியார் நிறுவனத்தில் பணிபுரிபவர்கள், முன்னேற்றம் அடைவார்கள். பொருளாதார நிலையில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். பெண்களின் ஆரோக்கியம் மேம்படும். குழந்தைகள் விஷயத்தில் கவனம் தேவை. செலவுகள் கட்டுக்கடங்காது போனாலும், எப்படியோ சமாளித்து, கரை சேர்த்து விடுவீர்கள். பொன், வெள்ளி ஆபரணங்கள் வாங்க உகந்த நேரம்.

தனுசு : 11ல் உலவும் இரக பலத்தால், உத்தியோகத்தில் உயர்வு, ஊதிய உயர்வு, வேண்டிய இடத்துக்கு இடமாற்றம், அலுவலகத்தில் ஆரோக்கியமான சூழ்நிலை ஆகியவை உண்டாகும். தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயருவார்கள். பழைய கடன் பாக்கிகள் விலகி, நிவாரணம் ஏற்படும். கலைத் துறைக்காரர்களின் பெயர், புகழ் அதிகரிக்கும். கணவன்-மனைவி உறவில் அன்பும் அந்நியோன்னியமும் இழையோடும். கோர்ட்டு, கேஸ், வழக்கு, வியாஜ்ஜியம் போன்றவற்றில் சாதகமான திருப்பம் ஏற்படும்.

மகரம் : முளையிலே கிள்ளிப் போட்ட எதிரிகள் கூட விஸ்வரூபம் எடுத்து மிரட்டிக் கொண்டிருந்தார்கள் இல்லையா? இனி அந்தப் பாச்சா எல்லாம் பலிக்காது. எதிரிகளும், எதிர்ப்புகளும் கை கோத்துக் கொண்டு ஓடி ஒளியும். இனி நீங்க, உற்சாகமாக, பற்பல காரியங்களில் ஈடுபடலாம். கமிஷன், ஏஜெண்டு, காண்ட்டிராக்ட், தரகு, விற்பனைப் பிரதிநிதி, கட்டடத் துறைகளைச் சேர்ந்தவர்கள் நன்மை அடைவார்கள். சுபமங்கள காரியங்கள், திருமண முயற்சி ஆகியவை அனுகூலமாகும்.

கும்பம் : உங்கள் திறமை எல்லாம் காட்டில் காயும் நிலவாக வீணாகிக் கொண்டிருந்தது அல்லவா? இனி அந்த நிலைமை முற்றிலும் மாறும். அறிவாற்றலும், சாமர்த்தியமும் கூடும். மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். கலைத் துறையைச் சேர்ந்தவர்களானால், முன்னணிக்கு உயர்வார்கள். குடும்ப லாபாதிபதி உச்சம் என்பதால், கணவன் மனைவி உறவு நிலை இனிமையாக இருக்கும். வாழ்க்கை வசதி பெருகும். புனித காரியங்களில் பங்கு கொண்டு மன அமைதி பெறுவீர்கள். பெண்களுக்குக் குதூகலமான வாரம்.

மீனம் : பூர்வ புண்ணியஸ்தானத்தில், குரு சஞ்சாரம் என்பதால், குருபலம் பரிபூரணமாக இருக்கிறது. திருமணமாகாதவர்களுக்குத் திருமணம் விரைவில் கைகூடும். குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு, தொட்டில் கட்டும் வாய்ப்பு ஏற்படும். வீடு, மனை, வாகனம் போன்ற இனங்களில் சுபமான பலன்கள் உண்டு. தொழில் செய்பவர்களுக்குப் பழைய கடன் தொல்லை நீங்கும். கையிருப்பு கூடும். ஜவுளி, ஆடை, அலங்காரம், இயந்திரம் சம்பந்தப்பட்ட இனங்கள் ஆதாயம் கொண்டு வரும். ஸ்தல யாத்திரை, சத் காரியங்கள் போன்றவற்றில் ஈடுபாடு ஏற்படும்.

திகிலூட்டிய ஆப்பரேஷன்!



• அதிரடிப்படை ஆபரேஷன்

இசை நிகழ்ச்சி ஒன்றைப் பார்க்கலாம் என்று போனவர்கள், இவ்வளவு பெரிய ஆக்‌ஷன் த்ரில்லரைப் பார்ப்போம் என்று எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். தாங்களே அதில் பங்கேற்போம் என்று கனவும் கண்டிருக்க மாட்டார்கள். ஆனால் அந்தப் பயங்கரம்தான் மாஸ்கோவில் நடந்தது.

அக்டோபர் 23ம் தேதி. நம் நேரப்படி இரவு சுமார் பத்தரை. 'நோர்ட் ஒஸ்ட்' என்ற அந்தப் புகழ்பெற்ற இசை நிகழ்ச்சியைக் காண ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் குவிந்திருந்தனர்.

அப்போது அவர்களைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டனர் சுமார் ஐம்பது பேர். ஆயிரத்தோடு ஒப்பிட்டால் ஐம்பது கொசுதான். ஆனால் அவர்களின் கையில் பயங்கர ஆயுதங்கள்! தவிர அவர்களில் பலரது (பெண் தீவிரவாதிகள் உட்பட) உடலில் வெடிகுண்டுகள். தற்கொலைப் படையாகவும் தயங்க மாட்டார்கள் என்பது புரிந்தது. நடுங்கிப் போனார்கள். 'நாங்கள் செசன்யத் தீவிரவாதிகள். எங்கள் எல்லைக்குள் நிறுத்தப்பட்டுள்ள படைகளை ரஷ்யா வாபஸ் பெறவேண்டும். அதற்கு அடுத்த நிமிடமே உங்களுக்கு விடுதலை' என்று அறிவித்தனர் சாந்தமாக!

பிணைக்கைதிகளாக வைத்திருக்கும் மூர்க்கர்களிடம் உடனடியாகத் தாக்குதல் நடத்துவது எப்படி? தவித்தார்கள் ரஷ்ய அதிரடிப் படையினர்.

ரஷ்ய அரசுப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தீவிரவாதிகள் தயாரில்லை. உங்கள் சார்பில், 'வெளிநாட்டினரைப் பேச்சுவார்த்தைக்கு அனுப்புங்கள்' என்றார்கள்.



• புடின்





• தீவிரவாதிகளின் தலைவன் சகயேவ்

அவர்கள் நினைத்த நடவடிக்கை 'தீவிரவாதிகளின் நிபந்தனைகளை வேறுவழியின்றி ஒப்புக் கொண்டு அரசு தங்களை விடுவிக்கும்' என்பது. ஆனால் அரசு முடிவெடுத்தது வேறொன்றை.

அரங்கினுள்ளே மயக்க வாயு ஒன்று பீய்ச்சியடிக்கப்பட்டது. தீவிரவாதிகள், பணயக் கைதிகள் ஆகிய இருதரப்பினருமே மயங்கிவிழத் தொடங்கினார்கள். இந்த நேரத்தில் ரஷ்யாவின் சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த இருநூறு வீரர்கள் உள்ளே நுழைந்தனர். துப்பாக்கிக் குண்டுகளின் பலத்த ஓசை கேட்கத் தொடங்கியது. மயங்கி விழுந்த தீவிரவாதிகளை மிகமிக அருகில் சென்று சுட்டுக் கொன்றது அதிரடிப்படை. இந்தத் தீவிரவாதக் குழுவின் தலைவன் அரங்கின் இரண்டாவது தளத்தின் சமையலறையில் சுட்டுக் கொல்லப்பட்டான்.

ஆனால் ரஷ்ய அரசு இந்த விஷயத்தில் விமர்சிக்கப்படுகிறது. காரணம் இந்த வாயு ஓவர்டோஸாகச் செலுத்தப்பட்டதால் ஐம்பது தீவிரவாதிகளோடு தொண்ணூறு பொது மக்களும் இறந்துவிட்டனர். சுமார் 450 பேர் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டிருக்கின்றனர். எந்த வாயு பயன்படுத்தப்பட்டது என்பதை இதுவரை சொல்ல மறுத்து வருகிறது அரசு.

இறந்த பணயக்கைதிகளின் நினைவாக ஒருநாள் தேசிய விடுமுறை அளித்தது ரஷ்ய அரசு. ஜனாதிபதி புடின் பெருங்கோபத்துடன் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். அடுத்த மாதம் நிச்சயிக்கப்பட்டிருந்த டென்மார்க் பயணத்தை ரத்து செய்துவிட்டார்.

காரணம், கோபன்ஹேகன் நகரில் செசன்ய பிரதிநிதிகளின் மாநாடு தொடங்க அனுமதிக்கப்பட்டதுதான். ஹாலந்துக்கும் தனது அதிருப்தியைத் தெரிவித்திருக்கிறார். செசன்ய மொழியில் ஒரு நாளிதழ் வெளிவர அங்கே அனுமதி தரப்பட்டிருக்கிறது என்பதால். ரஷ்யாவின் வேண்டுகோளுக்கிணங்க (முன்பு சோவியத் யூனியனில் அங்கம் வகித்த) அஸர்பைஜன் தன் தேசத்திலுள்ள செசன்ய அலுவலகத்தை மூட ஒத்துக் கொண்டிருக்கிறது.

பொதுவாக பணயக்கைதிகளை மீட்டுக் கொள்வதற்காக தீவிரவாதிகளின் கோரிக்கையை (அது எவ்வளவு அடாவடியானதாக இருந்தாலும்) ஏற்பதுதான் வழக்கம். ஆனால் இந்தமுறை மாறுபட்ட நிலையை எடுத்திருக்கிறது ரஷ்யா. அந்த விதத்தில் உலகின் பார்வை அழுத்தமாகவே புடின் மீது பதிந்திருக்கிறது.

செசன்யாவுக்கு என்ன வன்மம்?


சோவியத் யூனியன் ஒரே அமைப்பாக இருந்தபோதே அதிலுள்ள சில பகுதிகளில் 'பிரிந்து வாழ்வோம்' என்ற எண்ணம் நிலவியது. அவற்றில் முக்கியமானது செசன்யா. ஆனால் அப்போது சோவியத்தைச் சுற்றித் தொங்கவிடப்பட்டிருந்த 'இரும்புத்திரை' காரணமாக இந்தப் பிரிவினை விதைகள் வெளியே தெரியவில்லை.

சோவியத் நாளடைவில் பிரிந்த போது, தன்னை ரஷ்யாவிடமிருந்து பிரித்துக் கொள்வதாக அறிவித்தது செசன்யா. தனக்கென்று ஒரு நாடாளுமன்றத்தையே அமைத்துக் கொண்டது.

“ஏங்க, உங்க கட்சித் தலைமையகத்தை வேற கட்டடத்துக்கு மாத்திட்டீங்களாமே?”

“ராசியில்லாத கட்டடம் கமலா அது! தினம் ரம்மியில் ஐந்நூறு ஆயிரம்னு போயிடுது எனக்கு!”

— உ. ராஜாஜி



ரஷ்யா இந்தத் தனித்தன்மையை ஏற்கத் தயாராக இல்லை. அதே சமயம், செசன்யாவை முழுக்கத் தன் பிடிக்குள் வைப்பதும் முடியாத காரியம் என்பதை உணர்ந்து கொண்டது. தீவிரவாதிகள் மட்டுமின்றி, அங்கு வசிக்கும் பொது மக்களில் மிகப் பலரும் கூட செசன்யா தனிநாடாக இருப்பதையே விரும்புகிறார்கள்.

1991ல் செசன்யாவைக் கைப்பற்றிய துதயேவ் என்பவர் அங்கு உடனடியாக ஒரு தேர்தலை நடத்தினார். அதில் வென்றவர், தம்மை ஜனாதிபதியாகப் பிரகடனம் செய்து கொண்டார். 'செசன்யா சந்தேகமில்லாமல் ஒரு தனிநாடு' என்று அறிவித்தார்.

ஆனால் அடிக்கடி ரஷ்யா, செசன்யா மீது தாக்குதல் நடத்தியவாறு இருக்கிறது. தீவிரவாதிகளும் பலவித தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். அதில் லேட்டஸ்ட் தான் கலையரங்கப் பிணைக்கைதிகள் திட்டம்.

ரஷ்யாவுக்கு என்ன ரௌத்திரம்?

'எங்களின் ஒரு பகுதி பிரிய நாங்கள் எப்படிச் சம்மதிப்போம்?' என்பது ரஷ்யாவின் வாதம். செசன்ய எல்லையில் மட்டுமின்றி, எல்லையைக் கடந்தும் தனது படைகளைக் குவித்து வைத்துள்ளது.

'நேரடித் தாக்குதலில்தானே உங்கள் கை ஓங்குகிறது? நாங்கள் குள்ளநரித்தனமாகச் செயல்பட்டால்?' இந்த விதத்தில் யோசித்துச் செயல்பட்டு வருகிறார்கள் செசன்ய தீவிரவாதிகள். கடல்கடந்தும் தீவிரவாதத்தில் ஈடுபடுகிறார்கள் செசன்யக் குழுவினர். அப்போதுதான் உலகின் கவனத்தை இந்தப் பிரச்னையின் பக்கமாக இழுக்க முடியுமாம். 1996ல் துருக்கியிலுள்ள ஒரு மருத்துவமனையில் வசித்தவர்களையும் இப்படிப் பிணைகைதிகளாக்கிக் கொண்டு நிபந்தனைகளை விதித்தனர்.

காஷ்மீர் மாதிரி சிறப்பு அந்தஸ்தை செசன்யாவுக்கு அளிக்க முன்வந்தது ரஷ்யா.

1999ல் மாஸ்கோவின் பல முக்கியக் கட்டடங்களில் வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தனர் செசன்யத் தீவிரவாதிகள். இந்த வருட மே மாதத்தில் கூட, ரஷ்யாவின் தாகெஸ்தான் நகரில் நடைபெற்ற வெற்றி ஊர்வலத்தில் பங்குகொண்ட 34 பேரைக் கொன்றனர். ரஷ்ய அரசு ரௌத்திரம் கொள்ள வேறென்ன வேண்டும்?

— ஜி.எஸ்.எஸ்.

''சரியான அல்பத்தோட மனைவியைப் போய் கடத்திட்டு வந்திருக்கீங்களடா..?''

''என்னாச்சு தலைவா?''

''உன் பெண்டாட்டியை நான்தான் கடத்தி வச்சிருக்கேன்னு சொன்னதும் 'ரொம்ப நன்றி'ன்னு சொல்லிட்டு ஃபோனை கட் பண்ணிட்டானே!''

- சீர்காழி வி. ரேவதி





''நம்ம திகில் படம் பிரமாதமா தயாராகிட்டு இருக்கு...''

''அதுக்காக ஆடியோ கேஸட் வெளியீட்டு விழாவை நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு ஒட்டேரி சுடுகாட்டில் நடத்தித் தொலைக்கணுமா?''

- உ. ராஜாஜி

ரொம்ப நன்றி!

''காதில் இருந்த பஞ்சை எடுத்து விட்டீர்களே மன்னா...''

''மக்கள் குறை கேட்கும் கூட்டம் தான் முடிந்துவிட்டதே.''

- எஸ். மோகன்





''இருக்கிறதைப் போடு, சாப்பிட்டுப் போறேன்னு சொல்ற புருசனையா திட்றே?''

''இருக்கற இருபது இட்லியையும் தானே தின்னுட்டுப் போயிடறேன்னு சொல்றாரு!''

- பார்வதவர்த்தினி

நான்கு வார
தொடர் - 2

ஹாய்..!



"யார் ஆரம்பிச்சுவெச்ச கெட்ட வழக்கமோ தெரியலை. கல்யாணத்துக்கு மொத நாளே ரிஸப்ஷன் வெக்கறதுக்கெல்லாம் என் மனசு இடம் குடுக்கலை. அஞ்சு வேளை சாப்பாடு. கட்டுசாதத்தோட கிளம்பறதுங்கறது தான் வழக்கம். ரிஸப்ஷனை மொத நாளே வெச்சுட்டு, மறுநாள் தாலி கட்டின கையோட கிளம்புடா பிராமணாங்கறா, இப்ப எல்லாரும். கேட்டா காலம் மாறிடுத்தாம். காலம் மாறிடுத்துன்னு மூக்கால சாப்பிடறோமோ? பேண்ட்டுக்கு மேல அண்டர்வேர் போட்டுக்கறோமா?"

ஜானவாசம் முடிந்த இரவு. மண்டபத்தின் காலியான மூலைகளில் கொத்துக்கொத்தாக உறவினர்கள் கூடியிருந்தார்கள். காசில்லாத சீட்டாட்டத்தில் விருப்பமுள்ள மாப்பிள்ளையின் தகப்பனார், உப்பரிகை போலிருந்த மாடி பால்கனியில் துண்டு விரித்து, தோழர்களுடன் அமர்ந்திருந்தார். வழியில் வானம் பார்த்து உருண்டு கிடந்த தேகங்களின் மேல் உரசாமல் நர்த்தனமாடியபடி அனுவின் அப்பா அவரை நெருங்கி விசாரிக்கத் தொடங்கினார்.

சம்மந்திக்கு ராத்திரியில் ஒரு டோஸ் காப்பி சாப்பிடுவதில் விருப்பம் உண்டா? காப்பி உற்சாகபானம்தான். ஆனால் தூக்கத்துக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்பது அவர் கண்டுபிடிப்பு. தவிர, சூடான ஒரு டிகிரி காப்பி, சலனமற்ற உறக்கத்துக்கு உத்தரவாதம் தரும் என்று ஒரு பிரெஞ்சு டாக்டர் கண்டுபிடித்திருக்கிறார்.

"அப்படியா?" என்றார் சம்பந்தி.

"ராமு, எனக்குச் சொன்னதோட சேர்த்து சம்பந்திக்கும் ஒரு காப்பி சொல்லு!" என்று அங்கிருந்தே அசரீரியாக உத்தரவிட்டுவிட்டு, அவரும் சீட்டில் அமர்ந்ததை, கீழிருந்து அனு கவனித்தாள்.

அப்பாவுக்குத்தான் இதெல்லாம் முடிகிறது. அப்பாவால்தான் இதெல்





பா. ராகவன்

லாமும் முடியும். ஆண் வாரிசு இல்லாத வீடுகளில் அப்பாக்கள் ராட்சஸர்களாகி விடுகிறார்கள். தலை சுற்றலையும் ஷுகரையும் பிரஷரையும் நசுக்கிப் பொடி மட்டையில் எடுத்து இடுப்பில் சொருகிக் கொண்டு, அவசரகாலம் தீர்ந்தபிறகு திரும்ப எடுத்து விரித்துக் கொள்ள எப்படியோ பழகிக் கொண்டு விடுகிறார்கள். வியாதிகள் என்னும் பைந்நாகப் பாய்.

அம்மாவின் பக்கத்தில் படுத்து, கொஞ்சம் கனவு கண்டுவிட்டு மைதிலி உறங்கிவிட்டாள். ஹாலில் மாயவரத்துப் பாட்டியை மையமாகக் கொண்டு ஏழெட்டுக் குழந்தைகள் உருண்டு கிடக்கின்றன. மேலும் அத்தைகள், மாமாக்கள், பெரியம்மாக்கள், சித்தப்பாக்கள். சொந்தம் விட்டு விடாதிருக்க வெயிட்டிங் லிஸ்டில் டிக்கெட் வாங்கி வந்து சேர்ந்திருக்கும் தூரத்து உறவுக்காரர்கள்.

“இது நரசிம்மன் ஆத்துக் கல்யாணம். நரசிம்மனைப் போல் ஒரு மனுஷன் உண்டா உலகில்? பெரிய உபகாரி. அத்தனை தங்கைகளுக்கும் ஒண்டி. மனுஷனாகக் கல்யாணம் பண்ணி வைத்ததற்காகவாவது கடவுள் அவனுக்கு ஆண் பிள்ளைகளைக் கொடுத்திருக்கலாம். கேல்குலேஷனில் ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது. பாவம், இரண்டும் பெண்கள்.”

பதினொன்றரை ஆகியும் தூக்கம் வராத சில நல்லிதயங்கள் ஒரு குழுவாக வருத்தப்பட்டுக் கொண்டிருந்தன.

“பெரியம்மா, படுத்துக்கலியா? ஆறு மணி முகூர்த்தம். இப்ப ஒரு குட்டித் தூக்கமாவது போட்டு எழுந்திங்கன்னாத்தான் நாலு மணிக்குக் குளிச்சு ரெடியாக பாத்ரூம் கிடைக்கும். ரெண்டு பாத்ரூம்ல லைட் வேற இல்லை.”

"நீ படுத்துக்கல்லியாடி அனு?" என்றாள் பெரியம்மா.

"தோ, போயிண்டே இருக்கேன். கார்த் தாலைக்குக் காப்பிப்பொடி போறாதோன்னு சந்தேகமா இருக்குன்னு ராமாஞ்சு இப்ப சொல்றார். அதான் வரதனை அனுப்பிட்டு, வரானான்னு பார்த்துண்டிருக்கேன்."

"போறது போ. அக்கா கல்யாணத்துக்கு இப்படி உழைச்சா நாளைக்கு உன் ஆம்ப டையான் வந்து தலை மேல வெச்சுத் தங்கப் போறான்...."

"தேங்க்ஸ் பெரியம்மா. நீங்க படுத்துக் கோங்கோ."

அவள் சத்திரத்தின் வாசலுக்கு வந்த போது அவர்கள் இருவரும் எங்கோ போய் விட்டுத் திரும்ப வந்து கொண்டிருந்தார்கள். அழகான, அண்ணா யூனிவர்சிடி இரட்டை யர்கள்.

"ஹாய்..."

"ஹாய்!"

"ஐ'ம் ராம்..."

"இவர் லக்ஷ்மணனா?"

"நோ. பரத். நாங்க உங்க புது அத்திம் பேருடைய கஸின்ஸ்."

"மாமா பசங்கன்னு சொன்னாளே?"

"யாரு?"

"எங்கக்கா."

"இஸிட்? நாங்க யார்னு நீங்க விசாரிச்சிங் களா?"

அவளுக்குச் சிரிப்பு வந்து விட்டது. இந்த க்ஷணம் அப்பாவோ அம்மாவோ இங்கு இருக்க வேண்டும். திடீரென்று உதித்ததொரு புதிய அலைவரிசையில் முன்னும் பின்னு மற்று ஒரு 'ஹாயி'ல் உற்பத்தியாகிற நெருக் கமும் சம்பாஷணைகளும் சத்தியமாக அவர் களுக்குப் புரியாது.

"என்னதிது? முன்னபின்ன தெரியாதவா ளோட அசட்டுச் சிரிப்பும் அவுட்டு ஜோக் கும்?" என்று கடித்த பல்லில் அடக்கி வெடிப் பாள் அம்மா.

அந்த நேரம் ஒன்றும் சொல்லாவிடினும் மறுநாள் அப்பா தன் டைரியில் தன் கவலை யைப் பதிவு செய்திருப்பார்.

ஆ, அப்பாவின் டைரி! அனு அதற்கு தினத்தந்தி என்று பெயர் வைத்திருந்தாள். பொதுவில் யார் வேண்டுமானாலும் வீட்டில் அதை எப்போதும் எடுத்துப் படிப்பது வழக் கம். நடந்த சம்பவங்களுடன் தன் அபிப்பிரா யம் கலந்து அப்பா எழுதும் ஓரிரு வரிகளி லான சரித்திரம். எல்லோரும் அதை எடுத் துப் படிப்பது அவருக்குத் தெரியும். படிக்க வேண்டும் என்பதற்காகத்தான் எழுது

''அமைச்சர் உங்களை மிரட்டறாரா! ஏன்?''

''துணை அரசர்னு ஒரு பதவியை உருவாக்கி அவரைத் துணை அரசராக்கணுமாம்!''

— உ. ராஜாஜி

கிறாரோ என்பது அவளது சந்தேகம். பேசும் சொற்களை விட எழுதும் சொற்களுக்கு வலிமை இருப்பதாக அவர் நம்பிக் கொண்டி ருந்தார்.

"எஞ்சினீயரிங் பண்றீங்களாமே? என்ன சப்ஜெக்ட்?" என்று அனு கேட்டாள்.

"மெக்கானிக்கல்" என்று இரண்டு நிமிடம் இளையவனான பரத் சொன்னான்.

"பார்த்தா அப்படித் தெரியலையே?"

"வேற எப்படித் தெரியறது?"

''ஒண்ணுமில்லை!'' என்று சிரித்துக் கொண்டே உள்ளே ஓடினாள் அனு.

அவள் காதுகளில் மீண்டும் கேட்டது. பப்பர பப்பர பய்ங்.

வாழ்க்கையை, திட்டங்கள் எனும் சட்டத்துக்குள் பொருத்திவிட முடியும்தானா என்று அவள் யோசித்துப் பார்த்தாள். இரண்டு பேர். இரட்டையர்கள். திட்டமிட் டுத் தயாரித்த ஒரே அச்சில் வார்த்தெடுத்த, உயிருள்ள மெழுகு பொம்மைகள்.

அவர்களது பெற்றோர் திட்டமிட்டே அவர்களை ஒரே மாதிரி வளர்த்திருப் பார்கள். ஒரே மாதிரி ஷர்ட். ஒரே மாதிரி ஸ்டைல். ஒரே மாதிரி புன்னகை. ஒரே மாதிரி சோடா புட்டி. ஒரே மாதிரி படிப்பு.

கடவுளே, ரசனையைக் கூட ஒரே மாதிரி திட்டமிட்டு வளர்த்துக் கொள்ள முடியுமா?

தனக்கும் மைதிலிக்குமான ஆறு வித்தியா சங்களை அவள் எண்ணிப் பார்த்தாள். போதிய இடைவெளியில் பிறந்தவர்கள் என் றாலும் வளர்ந்த விதமும் சூழலும் சர்வ தேசப் பொதுவானதுதானே. டிபிகல் மிடில் கிளாஸ்.

ஆனால் ஒரு சினிமாப் பாடல் நன்றாக இருக்கிறது அல்லது இல்லை என்பதில் கூட இருவர் கருத்தும் ஒத்துப் போனதில்லை. ரசனையில் வித்தியாசம். அபிப்பிராயங்களில் வித்தியாசம். அணுகுமுறையில் வித்தியாசம். வெளிபாடுகளில் வித்தியாசம்.

அ. அது ஒரு லயம். இது ஒரு சுகம். சரி தான் போ என்று சிந்தனையைப் பூட்டி வைத்து விட்டுப் படுக்கப் போனாள். விடாப் பிடியாக இரண்டு பேரும் அவள் விழிகளை மூடவிடாமல் ஆளுக்கொரு பக்கம் முன்னின்றார்கள்.



என்ன ஒரு வார்ப்பு இது! அப்பா. இருபது, இருபத்திரண்டு வயதுக்கு மேல் இருக்காது. அரும்பும் ஆண்மையும் திமிறித் தெரிக்கிற குழந்தைத்தனமுமாக என்ன ஒரு கண்கவர் கலவை! அது கம்பீரம் இல்லை. ஆனால் கட்டிப் போடுகிற பழைய அரவிந்த சாமித்தனம்.

அவளுக்குள் திகுதிகுவென ஏதோ ஒன்று பற்றிக் கொண்டாற்போலிருந்தது. ஏதாவது செய்துவிட வேண்டும். குறைந்தபட்சம் இரண்டு பேரையும் அழுத்தி ஒரு கிள்ளு.

கண் மூடாமலேயே மறுநாள் உதித்து விட்டது. உறக்க விழிகளுடன் மேளக்காரர் எழுப்பிய சப்தத்துக்கு மண்டபம் விழித்துக் கொண்டது. மாமா, எழுந்திருங்கோ. காப்பி ரெடி. கல்யாணம் வந்துடுத்து.

நாகஸ்வரக்காரர் ஊதிப் பார்த்துக் கொண்டார். ஈரத்துணியில் சுற்றி வைத்த பூக்களும் மாலைகளும் நடுமண்டபத்துக்கு வந்தன.

மைதிலி குளிக்கப் போயிட்டாளா. வரதா, பால்காரனைக் கொஞ்சம் வெயிட் பண்ணச் சொல்லு. நான் வரேன். அத்தை, வெந்நீர் ரெடியா இருக்கு. முதல்ல நீ போய் மாப்பிள்ளை ஆத்துக்காரா எழுந்துட்டாளா பார், கவனி. நான் ஒம்போது மணிக்குக் கூட விச்ராந்தியா குளிச்சுப்பேன்.

குரல்கள், மேலும் குரல்கள் என மண்டபம் பிரச்சனமடைந்தது.

விநாடிகளில் பளிச்சென்று ஜாம்பவான் போல் திருமண் இட்ட வாத்தியார் மேடைக்கு வந்து ஹோமத்துக்கு நெய் எங்கே என்று குரல் கொடுத்தார்.

"நரசிம்மா, நீ மணைல உக்காரணும். சுத்து வேலையையெல்லாம் தூக்கிப் போட்டுட்டு வந்து சேரு."

"தோ வந்துட்டேன் சுவாமி!"

பதறி ஓடிய அப்பாவை, ஜாக்கிரதை என்று எச்சரித்தபடி மைதிலி புதிய, வயலெட் நிறப் பட்டுப் புடைவையில் ஒயிலாக வெளிப்பட்டாள்.

சமத்து என்று அம்மா யாரையோ எதற்கோ சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டபடி அனு குளிக்கப் போனாள்.

அவள் அலங்கரித்துக் கொண்டு, உறங்காத விழிகளுடன் நடுமண்டபத்துக்கு வந்த போது மேடையில் அப்பாவும் அருகே மைதிலியும் எதிரே வாத்தியாரும் இருந்தார்கள். சுடர்ந்து எழுந்த அக்னியின் பின்னால் மைதிலியின் முகம் வெண்ணெய் போல் குழைந்திருந்தது. ஏய், நீ ரொம்ப அழகா இருக்கே.

தன் மானசீகத்தில் அவளைப் பாராட்டிக் கொண்டு அனு வாகான நாற்காலி தேடிய போது, காலியாயிருந்த மண்டபத்தின் ஒரு ஓரம் அவர்கள் இருவரும் எப்போதும் போல் சேர்ந்தே அமர்ந்திருக்கக் கண்டாள்.

"ஹாய்!"

"ஹாய்."

சப்தம் எழாத உச்சரிப்பைப் புன்னகை வெளிப்படுத்தியது.

அவள் ஒருகணம் அப்பாவைப் பார்த்தாள். உருக்கிய நெய்யை மாவிலையில் எடுத்து ஹோமத்தில் சேர்ப்பதில் மும்முரமாயிருப்பவர் அந்தக் குரலெழும்பாத ஹாயை கவனித்திருக்க முடியாது. ஒருவேளை மைதிலி கவனித்திருக்கலாம். பாதகமில்லை. இதெல்லாம் தனக்கு வாய்க்காத வருத்தமேதும் அவளுக்கு இப்போது எழ நியாயமில்லை.

அனு மீண்டும் அவர்களைத் திரும்பிப் பார்த்தாள். கல்யாணப் பெண்ணைப் போலவே அவர்களும் அதிகாலை எழுந்து குளித்து, அழகாக ஒரே மாதிரி உடுத்திக் கொண்டு ஒரு ஓரமாக அமர்ந்திருந்தார்கள். பெற்ற புண்யவான்களைக் கூப்பிட்டு திருஷ்டி சுற்றிப் போட வேண்டும்.

எழுந்து அவர்கள் இருந்த இடத்துக்குப் போனாள். பெண் வீட்டுக்காரர்களுக்குக் கடவுள் சில சௌகரியங்களைக் கொடுத்திருக்கிறார்.

"ஹாய், காப்பி சாப்பிட்டீங்களா?"

"ம்ஹூம். நாங்க காப்பி சாப்பிடறதில்லை."

"தென் வாட்? மில்க் வித் அவுட் அமுல்?"

அவர்கள் வழக்கம் போல் அழகாகச் சிரித்தார்கள். ஆனால், இருவரில் ஒருவன் சற்றுக் கூடுதல் அழகாகச் சிரிப்பதாக அவளுக்கு முதல் முறையாகத் தோன்றியது.

ஐயோ, எனக்கு என்ன ஆகிவிட்டது என்று மனத்துக்குள் சலித்துக் கொண்டாள். மண்டபம் உறவினர்களால் நிறையத் தொடங்கியிருந்தது.

(தொடரும்)

நீங்கள் கேட்டவை-தராசு

'காதல் பிசாசே' பருவாயில்லையா சார்..?'



• கிண்டல் விஷயம்!



• புதிய நீதி!



• தடையுத்தரவு!

● கவிஞர் ரவிவர்மா, காட்பாடி

? தமிழர்களாக இருக்கத் தகுதிகள் யாவை?

! செலக்டிவ் அம்னீஷியா நோயாளியாக இருந்தாலே போதும்.

● ஜி. ஜெயராமன், கூந்தலூர்.

? அ.தி.மு.க தோன்றி முப்பது வருடம் ஆகிவிட்டதாமே...? முப்பது வருட சாதனை என்ன...?

! இரட்டை இலையை இரண்டு தலைமுறை வாக்காளர்களின் மனத்தில் பதியச் செய்தது.

● வி. ரூபஸ், கோவை.

? நேற்றைய ஆன்மிகத்துக்கும் இன்றைய ஆன்மிகத்துக்கும் உள்ள வேறுபாடு என்ன...?

! நேற்றைய ஆன்மிகம் தன்னையுணர்ந்து அமைதி காணச் சொல்லித் தந்தது; இன்றைய 'ஆன்மிகம்' என்று விற்கப்படுவது, குறுக்கு வழியில் உலக இன்பங்களை அடைய உதவுவதாகச் சொல்லிக் கொள்கிறது.

● ஆர். அப்துல் சலாம், திருச்சி – 21.

? தீபாவளி 'மாமூல்' வசூலித்த ஐ.ஏ.எஸ். அதிகாரி, லஞ்சப் பணத்துடன் போலீஸில் சிக்கியுள்ளாரே?

! அவர் மட்டுமல்ல; அவருக்கு லஞ்சம் கொடுத்தவர்களுக்கும் வலை விரிக்கப்படுகிறதாம்; உஷார்! அந்த ஆளு பங்கு பிரிக்க மறந்துட்டாரோ என்னவோ! கஷ்டம்! கஷ்டம்!

● பா. ஜெகன், சென்னை – 42.

? 'ரன்' படத்தில் 'காதல் பிசாசே பாடலில் 'பருவாயில்லை, பருவாயில்லை' என்று பாடகர் தமிழை மென்று தின்று பாடியது கேட்டீரா...? இதென்ன தண்டனை!

! பாட்டு சூப்பர் ஹிட் ஆகிவிட்டதால், உதித் நாராயண் மென்று தின்ற விஷயமெல்லாம் ஜீரணமாகிவிட்டது; விடுங்க!

● கே. சங்கர், இராயபுரம்.

? காஷ்மீரில் சுழற்சி முறை முதல்வர் பதவியேனால் அங்குள்ளவர்களின் வாழ்க்கைத் தரட உயருமா...?

! பதவியிலுள்ளவர்களின் வாழ்க்கைத் தரம் நிச்சயம் உயரும். காஷ்மீர் மக்களைப் பொறுத்த மட்டில் அவர்களின் முதல் தேவை அமைதி.

• அபராதமும்...



• ...ஜாமீனும்!





• 'முதல்' கோணல்!

● இரா. வேல்முருகன், சேலம். ❐

? போரிஸ் பெக்கருக்கு ஐந்தரைக் கோடி அபராதம், சல்மான் கானுக்கு ஜாமீனில் விடுதலை! இரண்டு செய்திகளும் நமக்குச் சொல்லும் பாடம் என்ன...?

! பெக்கரின் வரி ஏய்ப்பு வழக்கு மிகப் பழையது என்பதால் சிறைவாசத்திலிருந்து விலக்கு தரப்பட்டுள்ளதாக நீதிபதிகள் சொல்லியிருக்கிறார்கள். அபரிமித அபராதம் அந்நாட்டின் நீதி நிர்வாகத்துக்கு நல்ல எடுத்துக்காட்டு. நம் நாட்டிலும் சல்மான்கான் மீது வழக்கு வேகமாகத் தொடுக்கப்பட்டு, அபராதம் விதித்து, இறந்தவர் குடும்பத்துக்கு நஷ்டஈடும் தரப்பட்டால் இங்கும் நீதி நிலைக்கும். தவிர்க்கப்பட வேண்டியது தாமதம்தான்.

● ஆர். காஞ்சனா, நெய்வேலி – 3.

? தில்லி – திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் பயணம் செய்த கல்லூரி மாணவிகளை ஈவ் டீசிங் செய்த மத்திய ரிசர்வ் போலீஸ் படையைச் சேர்ந்த 19 பேர் கைது செய்யப்பட்டுள்ளது குறித்து...?

! வேலியே பயிரை மேய்ந்த கதைதான்.

● சுமாலி, மேலப்பாலையூர்.

? நீண்ட நேரம் டெலிபோனில் ஏதேதோ சொந்த விஷயங்களைப் பற்றி உரையாடி விட்டுப் பாடல் ஒளிபரப்புகிறார்களே – போரடிக்கவில்லையா...?

! போரடிப்பது மட்டுமல்ல... இது போன்ற முன் தணிக்கை இல்லாத நிகழ்ச்சிகளில், மற்றவர் மீது அவதூறுகளை தைரியமாகப் பேசுகிறார்கள். இதற்கு இடம் கொடுப்பது ரொம்பத் தப்பு.

● இரா. சக்கரபாணி, மதுரை – 7.

? அ.தி.மு.க. அரசு அவசர அவசரமாக மத மாற்றத் தடைச் சட்டம் கொண்டுவந்தது பாரதிய ஜனதா கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொள்வதற்காகவா...?

! அப்படியொரு அஜெண்டா இருப்பதால்தானே சோனியா மீது நேரடித் தாக்குதல் தொடுத்தார் ஜெ. மேலும் சோனியாவைத் தாக்குவதற்காகவே காஷ்மீர் விவகாரத்தில் மூக்கை நுழைத்தார்! தேர்தல் நெருங்கும்போது நிலவரம் மேலும் தெளிவாகிவிடும் பாருங்கள்.

● லெ.நா. சிவகுமார், சென்னை – 33.

? தமிழக அரசு, காவிரி டெல்டாப் பகுதி



• இது இல்லே!

விவசாயிகளுக்குப் பத்து லட்சம் பரிசுப் பைகள் வழங்குவது குறித்து...?

! தற்காலிக நிவாரணங்களை நாம் எதிர்க்கவில்லை. ஆனால், இவ்வாண்டு பயிரே காணாத விவசாயிகள், அடுத்த வருடம் வரை எப்படிச் சாப்பிடப் போகிறார்கள்? அரசு, நீண்ட கால நோக்கில் யோசித்து திட்டமிட்டு உதவுவதுதான் ரொம்ப முக்கியம்.

● **என். பாலகிருஷ்ணன், மதுரை.**

? 'அடிக்கிற கைதான் அணைக்கும்' என்பது இந்தக் காலத்துக்குப் பொருந்துமா...?

! குடும்ப உறவுகளில்கூட இன்று இக்கருத்து ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்னும்போது, பள்ளிகளில் ஆசிரியர்கள் மாணவர்களை அடித்து தண்டிக்கலாம் என அனுமதி வழங்கும் அபாயச் சட்டத்தை இன்னமும் கட்டிக் கொண்டு அழுவது அபத்தம்.

❒ ரூ. 100/- பரிசு பெறுபவர்:
இரா. வேல்முருகன்,
4/139, மகுடஞ்சாவடி (அஞ்)
சேலம் மா.வ. – 637 103.

* ரூ. 50/- பரிசு பெறுபவர்:
டி. சுப்ரமண்யன்,
மெயின் ரோடு,
மேலையூர் – 609 107.

● **எஸ்.கே. சந்தான பூபதி, சென்னை – 39.**

? 'தமிழ்நாட்டின் பிரச்னைகளுக்கு நிதிப் பற்றாக்குறை காரணமல்ல; மதி பற்றாக்குறைதான் காரணம்' என்று கருணாநிதி கிண்டல் அடித்துள்ளாரே...?

! கிண்டலில் விஷயமும் இருக்கு, விஷமமும் இருக்கு!

● **கே. தெய்வசிகாமணி, சென்னை – 30.**

? பொன்னியின் செல்வனை டி.வி. தொடராக்க பூஜை போட்ட இரு நிறுவனங்களும் இப்போது அந்தப் பணியைத் தொடரவில்லை போலிருக்கிறதே?

! அப்படியா! முயன்று பார்த்து கைவிட்டவர்களின் கௌரவப் பட்டியலில் அவர்களும் சேர்ந்து கொள்வார்கள் போலும்!

● **கு. அருணாசலம், தென்காசி.**

? தமிழக மக்களுள் இரண்டு சதவிகிதம் மட்டுமே உள்ள அரசு ஊழியர்கள் சுகவாசிகளாக வாழ்வது 'சமூக அநீதி' என்று தமிழக முதல்வர் சொல்கிறாரே... அப்படியென்றால் ஜெயலலிதா சமூக நீதி என்று எதைக் கருதுகிறார்...?

! காண்க, நெய்வேலி ஜே. ராஜகோபாலனின் கேள்வி.

● **ஜே. ராஜகோபாலன், நெய்வேலி.**

? 'அரசு ஊழியர்களின் அகவிலைப்படியைக் குறைக்க வேண்டும்; பென்ஷனுக்கு உச்ச வரம்பு விதிக்கனும்' என்று கூறும் ஜெ; சட்டமன்ற உறுப்பினர்களின் ஊதியத்தையும் அதிகாரிகளின் ஊதியத்தையும் இதர படிகளையும் அதிகரித்துள்ளாரே ஏன்...?

! அதாங்க அவருடைய சமூக நீதி!

● **டி. சுப்ரமணியன், மேலையூர். ***

? அரசியல் கட்சியில் இருப்போர் சினிமாவில் எந்த அமைப்பின் பதவியிலும் இருக்கக் கூடாது, என்ற நடிகர் சங்கத் தலைவர் விஜய்காந்தின் அறிவிப்பு பாராட்டுதலுக்கு உரியதுதானே...?

! இல்லை. அரசியல் சிந்தனை அனைவருக்கும் இருக்க வேண்டும். அதற்கேற்ப கட்சி சார்பும் இருக்கத்தான் செய்யும். ஆனால், திரைப்படத் துறையின் பிரச்னைகள், செயல்பாடுகள் என்று வரும்போது அரசியலை மறந்து ஒற்றுமை காணும் மனப்பக்குவம் வளர வேண்டும்.

● **ஜி.ஜி.குமார், சென்னை – 29.**

? நாட்டிலேயே குஜராத்தான் முதல் மாநிலமாகத் திகழ்கிறது என்று மோடி பெருமைப் பட்டுக் கொள்கிறாரே...?

! ஆமாம். பிரதமர் உள்பட அனைவரது கண்டனங்களையும் சம்பாதித்துக் கொள்வதில் முதல் மாநிலம்தான்.

● **முகவை முத்துசாமி, தொண்டி.**

? இன்றைய அ.தி.மு.கவின் தனி ஸ்டைல் எது...?

! பேரவையில் கொண்டுவரப்படும் தீர்மானம் என்ன என்பதுகூடத் தெரியாமல் ஆர்ப்பரித்து ஏமாந்த அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களின் சுப்பாண்டி ஸ்டைல்தான்!

● **ஆர்.ஆர்.சாமி, திருவண்ணாமலை.**

? சிவ பூஜையில் கரடியா என்று இளக்காரம் பேசுகிறார்கள் – சிவபூஜை செய்வதற்கு உரிமையற்றது கரடி என்பது உண்மையா...?

! 'கரடி' என்றால் காட்டு மிருகம் மட்டும் அல்ல; கரடி என்பது அமைதி குலைக்கும் ஒரு வகை பறை – தோல் வாத்தியம். ஏமாற்றுதல் என்ற அர்த்தமும் உண்டு. எவ்வளவோ தடவை கரடியாக் கத்தியாச்சு! இன்னும் கரடி விடறீங்களே! ○

மாயமான பாஸ்போர்ட்கள்!



தமிழகத்தில் சென்னை, திருச்சி ஆகிய இரு நகரங்களில் மட்டுமே பாஸ்போர்ட் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. திருச்சி அலுவலகத்தின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள திருச்சி, புதுக்கோட்டை, கரூர், பெரம்பலூர், தஞ்சை, நாகை, திருவாரூர், ராமநாதபுரம் உள்ளிட்ட (தென்பகுதி) பதினாறு மாவட்டங்களில் உள்ளவர்கள் திருச்சி பாஸ்போர்ட் அலுவலகத்தில் விண்ணப்பித்து பாஸ்போர்ட் பெற்றுக் கொள்கிறார்கள்.

இந்த வகையில் ராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடி கிராமம் அருகேயுள்ள எஸ். மாரியூர் என்கிற பகுதியைச் சேர்ந்த 52 பேர் திருச்சி பாஸ்போர்ட் அலுவலகத்தில் பாஸ்போர்ட் கேட்டு விண்ணப்பித்திருந்தனர். போலீஸ் விசாரணைகளுக்குப் பின்னர் பாஸ்போர்ட்கள் அனுப்பி வைக்கப்பட்டன. ஆனால் அவை அனைத்தும் சுவற்றில் வீசிய பந்துகள் போல பாஸ்போர்ட் அலுவலகத்துக்கே திரும்பி வந்தன.

இதுபோல ஒன்றிரண்டு எப்போதாவது நேருமாம். ஆனால் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, ஒரே நேரத்தில் அனுப்பி வைக்கப்பட்டிருந்த 52 பாஸ்போர்ட்களும் திரும்பி வந்ததில் திருச்சி பாஸ்போர்ட் அலுவலகத்தாருக்கு அதிர்ச்சி!

ஆனால், குறிப்பிட்ட பகுதி காவல்துறையினர் சம்பந்தப்பட்ட விலாசதார்களை எந்த அளவில் புலன் விசாரணை செய்து சான்றளித்தனர் என்பது தான் இதுவரை விலகாத மர்மம்.

இந்த 52 பாஸ்போர்ட்களும், இதுபோல பல்வேறு காரணங்களால் திரும்பி வந்த பாஸ்போர்ட்களும் ஒரு பாதுகாப்புப் பெட்டகத்தில் பூட்டிப் பத்திரப் படுத்தப்பட்டன. திருச்சி பாஸ்போர்ட் அலுவலக அதிகாரி ராமநாதபுரம் சென்று விட்டுத் திரும்பி வந்த பின்னர், அக்குறிப்பிட்ட பாதுகாப்புப் பெட்டகத்தைத் திறந்து பார்த்ததில் மீண்டும் பேரதிர்ச்சி! 112 பாஸ்போர்ட்கள் காணாமல் போயிருந்தன. இச்சம்பவம் அலுவலகத்தில் சிலரை மட்டும் திகைப்பில் ஆழ்த்தியுள்ளது.

இப்போது பாஸ்போர்ட் அலுவலக ஊழியர்கள் சி.பி.ஐ. விசாரணை வளையத்தில் உள்ளனர். இரண்டு பெண் ஊழியர் உட்பட ஆறு பாஸ்போர்ட் அலுவலக ஊழியர்கள் வீடுகளில் சி.பி.ஐ. அதிரடி சோதனையில் ஈடுபட்டது. இதில் இரண்டு ஊழியர்களின் வீடுகளில் இருந்து முக்கிய தஸ்தாவேஜுகள் சிக்கியிருப்பதாகத் தெரிகிறது.

திருச்சி பாஸ்போர்ட் அலுவலக அதிகாரி கே. அசோகனை சந்தித்தோம்.

"பாஸ்போர்ட் அலுவலகத்திலிருந்து காணாமல் போன 112 பாஸ்போர்ட்கள் குறித்து அனைத்து இமிகிரேஷன் அன்ட் எமிகிரேஷன் செக்போஸ்ட், ஏர்போர்ட்டுகள், எல்லா பாஸ்போர்ட் அலுவலகங்கள் அனைத்துக்கும் தகவல்களை அனுப்பியுள்ளோம். அவற்றை யாரும் எந்த வகையிலும் பயன்படுத்த முடியாது என்பதே உண்மை!" என்கிறார்.

– ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



லாலு ஜோடியாக தியா மிஸ்ரா!

பரபரப்புக்குப் பஞ்சமில்லாத பாலிவுட்டில் சலசலப்பை உண்டு பண்ணியிருக்கிறது ஒரு படம். படத்தின் விளம்பரம் செய்தித்தாள்களில் வெளியான அன்று வாய்க்குள் ஈ புகுந்தது கூடத் தெரியாமல் பலரும் வியந்தனர். லாலு பிரசாத் யாதவ் ஜோடியாக தியாமிஸ்ரா நடிக்கிறார் என்றால் யார்தான் வாய் பிளக்க மாட்டார்கள்?

'லாலுவின் சுயசரிதையை எடுக்கிறீர்களா?' எனக்கேட்டு படத்தின் இயக்குனர் மகேஷ் மஞ்ரேக்கர் அலுவலகத்திற்கு வந்த தொலைபேசி அழைப்புகளுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் மழுப்பி விட்டனராம். காரணம் படத்தின் தலைப்பு ரசிகர்களை இப்படிக் கேட்க வைத்திருக்கிறது. என்ன தலைப்பு? 'பத்மஸ்ரீ லல்லு பிரசாத் யாதவ்'. நல்ல வேளையாக விவகாரம் முற்றிவிடுவதற்கு முன்பு படத்தின் நாயகி பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்து குட்டை உடைத்துவிட்டார். "படத்தில் 'பத்மஸ்ரீ' என்ற பாத்திரத்தில் நான் நடிக்கிறேன். லாலு, பிரசாத், அப்புறம் யாதவ் என்ற பெயர் கொண்ட மூன்று பேர் என்னை விழுந்து விழுந்து காதலிக்கிறார்கள். இது ஒரு முக்கோணக் காமெடி காதல் கதை" என்கிறார் சிரிப்பை அடக்க முடியாமல்.

படத்தின் தலைப்பிற்கு நிஜ லல்லு பிரசாத் யாதவ் எதிர்ப்பு தெரிவிக்கமாட்டாரா என்றால் "லாலு இதை ரசிக்கவே செய்வார். ஏனென்றால் துளிகூட அரசியல் இல்லாமல் சிரிக்க வைக்கப் போகிறார் இயக்குனர்" என்கிறார். சரி.. சரி... லாலு, பிரசாத், யாதவ் பாத்திரங்களில் யாரெல்லாம் நடிக்கிறார்களாம்? "லாலுவாக சுனில் ஷெட்டியும், பிரசாத்தாக அல்தாப்பும், யாதவ் ஆக மகேஷ் மஞ்ரேக்கரும் நடிக்கிறார்கள்" எனும் தியா மிஸ்ரா, தான் அறிமுகமான 'ரெஹனா ஹைய் தேரா தில் மெய்ன்' சூப்பர் ஹிட்டானதில், அம்மணி கையில் இப்போது அரை டஜன் படங்கள்!

— விஷ்ணுவல்தாசன்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Pvt. Ltd.
Editorial Team : C. Egnath Raj, Anuradha Sekhar, C.Jesudoss. Layouts : S.Stephen, P.R. Rajan.
Editor : Seetha Ravi.
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623;
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Half Yearly Subscription : India : Rs. 165/-
Overseas (Air Mail) Annual : 62 U.S. Dollars, Srilanka Rs.2000/-

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2002 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka